R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road , London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential , Commercial Conveyancing ,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
புதினம்
PUTHINAM

செல்வராஜா
கோல்டு ஹவுஸ்
புடவைத் திருவிழா
கூறைப் புடவைகள், பட்டுப் புடவைகள்
மற்றும் சீக்கூன் அனைத்தும் 50% வீத விலைக்கழிவில்
162 B, Mitcham Road London SW17 9NJ
Tel: 020 8767 3795 / 07825 005 269

மலர் 19 JULY 2015 இதழ் 6

SNM PAWN
BROKERS
அனைத்து
தங்க நகைகளும்
இங்கே
அடகு பிடிக்கப்படும்.

MITHUS JEWELLERS
லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகைமாளிகை
நியாயமான விலை, உறுதியான வேலைப்பாடு
பழைய நகைகளுக்கு அதிக விலை அல்லது புதிய நகை
322 LONDON ROAD, CROYDONCRO 2TJ 020 8683 1756

குழப்பத்தில் மைத்திரி!

எப்படியாவது இரணிலின் ஆதரவோடு மகிந்தரை வீழ்த்திவிட்டால், அதிபர் பதவியை வைத்துக்கொண்டு தன்னைப் பாதுகாத்து விடலாமென்று மைத்திரி எண்ணி இருப்பார்.

ஆனால், பிள்ளையார் பிடிக்கப்போய் அது குரங்காய் உருமாறிய கதை போல, மாட்டுப்பட்டு முழிக்கிறார் !

கூட்டு ஆட்சியில் ஐ.என்.பியின் கை ஓங்கியுள்ளதால், ஸ்ரீ.ல.சு. கட்சிக்குள் ஏகப்பட்ட புகைச்சல்.

தேர்தலில் உதவி செய்த கட்சிக்காரர்கள் போக, ஏனையோர் இன்னமும் மகிந்தரின் பின்னால் செல்வது மைத்திரிக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது.

வருகிற நாடாளுமன்றத் தேர்தலில், ஐ.என்.பியும், சு.க.வும் தனித்தே போட்டியிடுகின்றார்கள்.

இப்போதுள்ள கூட்டாட்சியில் ஏற்பட்ட தவறுகள், 'உன்னால் வந்தது', 'என்னால் வரவில்லை' என்று பிரச்சார மேடைகளில் இவர்கள் முழங்கப் போகிறார்கள்.

மைத்திரி அணியிலுள்ளவர்களைவிட, மகிந்த அணியில் இப்போது உள்ளவர்களே ஐ.என்.பியை கடுமையாகத் தாக்கிப் பேசுவார்கள்.

தற்போதைய நிலையில், மகிந்த ஆதரவு சு.க.வினர் மீது தரம் பிரித்து இரணிலால் ஊழல் குற்றச்சாட்டுக்களை வைக்க முடியும். இங்கு மைத்திரி ஆதரவு ஊழல் பெருச்சாளிகளோடு முரண்பாடு ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ளலாம்.

ஆனால், தேர்தல் மேடையில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் எல்லாப் பெரிசுகளும் ஒரே அணியில் நிற்பார்கள்.

இந்நிலை இரணிலுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தும்.

மறுவளமாக, மகிந்த அணியின் செல்வாக்கினை இது சு.க.விற்குள் ஒருபடி உயர்த்தும்.

மைத்திரிபாடு திரிசங்கு சொர்க்க நிலைதான்.

இந்நிலையில் மைத்திரியின் மதியுரைஞர் ராஜித சேனாரட்ன மகிந்தரை சந்தித்துள்ளார்.

பிரதமர் கனவினை இடப்பில் போட்டுவிட்டு, சு.க.வின் வெற்றிக்கு உழைக்குமாறு, நீண்டநாள் நட்பின் அடிப்படையில் ராஜித வேண்டுகோள் விடுத்திருக்க வேண்டும்.

இந்த இழுவைக்கெல்லாம் மகிந்தர் அசையக் கூடிய ஆள் போல் தெரியவில்லை.

ஆகவே ஆகஸ்ட் 17 நாடாளுமன்றத் தேர்தல், மைத்திரிக்கு ஏழரைச் சனியா என்பது தேர்தல் முடிந்தவுடன் தெரிந்து விடும். ■

குடிவரவு விண்ணப்பங்கள் & மேன்முறையீடுகள்
Immigration Application and Appeals
- அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் Fresh Applications
- உங்கள் உறவினர்களை வரவழைக்கும் விண்ணப்பம்
- இலங்கை-இந்தியாவில் பிரித்தானிய விசா நிராகரிப்புக்கு எதிரான மேன்முறையீடு
- குழந்தைகள் 7 வருடம் தொடர்ச்சியாக வசித்திருப்பின் வதிவிட விசா விண்ணப்பம்
- பிரித்தானிய குடியுரிமை விண்ணப்பங்கள்- நிரந்தர குடியுரிமை விண்ணப்பங்கள்
- நாடு கடத்தலுக்கு எதிரான விண்ணப்பங்கள்
- ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருவோர், திருமணம் செய்வோருக்கான EEA விண்ணப்பங்கள்

Visitors & Dependent Visa – Human rights Claim
– Immigration Detention Matters – Bail Applications

- Social Welfare Benefits – Visa Extension
- Entry Clearance Applications (Spouse – Family Reunion Visitor – Settlement – Student – Prospective Student)
- Point based Applications :Tier 1 – Tier 5 (Student / Entrepreneur Visas)

Kulendran Immigration Law Chambers, 90 High Street, Colliers Wood, SW19 2BT, 0208 682 4494 / 0208 542 8222 / 07769185592, email: kilc_work@yahoo.co.uk

CALL US 24x7 on 0207 132 32 32
Colombo பயணமா?
எங்குமில்லாத சிறப்பு சலுகை.
LycaFly
PLUS £20 FREE
LYCAMOBILE TOP-UP WHEN YOU BOOK WITH US

தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

ELAKKIA

Brand



+44 (0) 208 799 7180, www.elakkia.com, sales@elakkia.com

Ruby's Food Products Limited, Unicorn House, Unit 4, Walmgate road, Perivale, UB6 7LH, UK.

A Brand From RUBY'S

19ம் 20ம் செல்லப்பிள்ளைகள்

13 இன்று அநாதைக் குழந்தை!

தனை எழுதிக் கொண்டிருக்கையில், இலங்கை நாடாளுமன்றம் எந்த வேளையிலும் கலைக்கப்படலாம் என்ற செய்தி பல தரப்பாலும் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதனைப் படிக்கும்போது சிலவேளை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, புதிய நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டிருக்கலாம்.

எதுவானாலும், பொதுத் தேர்தலொன்று (அடுத்த ஆகஸ்ட்) நடைபெறுமென்பது உறுதியாகிவிட்டது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நாளிலிருந்து 52 நாட்களுக்கும் 65 நாட்களுக்குமிடையில் தேர்தல் நடைபெற வேண்டுமென்பது சட்டம்.

எதிர்வரும் செப்ரம்பரில் புதிய நாடாளுமன்றம் இயங்குமென்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

முக்கியமாக, செப்ரம்பர் இறுதியில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் போர்க்கால செயற்பாடுகள் தொடர்பான நிபுணர்கள் குழு அறிக்கை வெளிவருவதற்கு முன்னர் புதிய நாடாளுமன்றத்தை ஏற்படுத்துவது அரசின் இலக்கு.

சில சமயம், மனித உரிமைகள் ஆணையாளர் ஏற்கனவே தெரிவித்தவாறு ஆகஸ்ட் மாதத்தில் நிபுணர்கள் குழு அறிக்கை வெளிவருமாயின் எதிர்பாராத, பல நெருக்கடிகள் தேர்தல் சமயத்தில் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

முள்ளிவாய்க்கால் யுத்தம் நடைபெற்ற வேளையில் ஆட்சியிலிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குழுவினர் மீது நிபுணர்கள் குழு குற்றங்கள் சுமத்துமாயின், அதே அரசில் அப்போது அமைச்சராகவிருந்த இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அதற்குப் பொறுப்புக் கூறும் தார்மீகப் பொறுப்புடையவர்.

மகிந்தவை ஆட்சியிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு சந்திரிகா குமாரதுங்கா எடுத்த முயற்சியில் 'அம்பாக' அகப்பட்டவர் மைத்திரிபால சிறிசேன. இந்தக் கூட்டில் தேவை கருதி இணைக்கப்பட்டவர் ரணில் விக்கிரமசிங்க.

மகிந்த மீது தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் கொண்டிருந்த அடக்க முடியாத ஆத்திரம் சிறிசேனவை இலகுவாக ஜனாதிபதிக் கதிரையில் அமர்த்தியது. இது பழைய சரித்திரக் கதையன்று.

நூறு நாட்கள் வேலைத் திட்டத்தில் மக்கள் ஆணையைப் பெற்று ஜனாதிபதியான சிறிசேன, சந்திரிகாவின் ஏற்பாட்டில் ரணிலைப் பிரதமராக்கினார். இதனால் சந்திரிகாவே இன்றைய ஆட்சியின் 'இங் மேக்கராக' பார்க்கப்படுகிறார்.

மக்கள் ஆணை பெற்ற நூறு நாட்கள் கடந்து மேலும் 50 நாட்கள் ஆகியும், நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது தத்தளிக்கும் நிலைக்கு சிறிசேன தள்ளப்பட்டார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் 19வது அரசியல் திருத்தத்தை பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில், எதிர்பாராத வெட்டுக் கொத்துகளின் பின்னர் சிறிசேனவால் நிறைவேற்றப்பட்டது என்பது, நூறு நாட்களுக்குப் பினனர் அவருக்குக் கிடைத்த முதல் வெற்றி (?).

இதனைப் போன்று தேர்தல் சட்டத்தைத் திருத்தும் 20வது திருத்தத்தையும் நிறைவேற்ற அவர் முயன்றாராயினும், இது அவ்வளவு இலகுவானதாக அமையவில்லை.

தேர்தலின்போது இவரை ஆதரித்த சிறுபான்மையினரின் அரசியற் கட்சிகளும், சிறிய கட்சிகளும் இந்தத் திருத்தத்தை முழுமையாக எதிர்த்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை பகிரங்கமாகவே தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தின.

அரசாங்கத்தில் அமைச்சராகவுள்ள ராதா கிருஷ்ணன் மற்றும் ஏகாம்பரம் ஆகியோரையும் இணைத்துக்கொண்டு தமிழர் முற்போக்குக் கூட்டணி என்ற அரசியற் கட்சியை மனோ கணேசன் உருவாக்கியதற்கும், 20வது அரசியற் திருத்தமே காரண மாகிவிட்டது முக்கியமான ஓர் அரசியற் திருப்பம்.

வடக்கு கிழக்குக்கு வெளியே இருக்கும் தமிழர்களை இணைக்கும் ஓர் அரசியல் அணி இதுவரை இல்லாத குறையை, 20வது திருத்தம் நிறைவு செய்துள்ளது. முக்கியமான மற்றொரு திருப்பம் யாதெனில், வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்டுள்ள 20வது திருத்தத்தை அரசின் பிரதான பங்காளியான ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாக எதிர்ப்பதாகும்.

ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த 225 உறுப்பினர்கள் மட்டுமே என்ற தேர்தல் திருத்தத்தை நிராகரித்து, 237 என்ற திருத்தப்பட்ட வரைவை சிறிசேன வர்த்தமானியில் பிரகடனம் செய்ததே இதற்கான பிரதான காரணம்.

20வது திருத்தம் நிறைவேற்றப்பட்டாலும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள தேர்தல் இப்போதுள்ள விகிதாசார முறையிலேயே நடைபெறுமென்பது, சிறுபான்மையினருக்கு ஓரளவு நம்பிக்கையை அளிப்பது.

ரணிலின் திட்டம் சிறுபான்மையினரின் வாக்குகளை நம்பி சிங்கள இளம் அரசியலை நடத்தக்கூடாது என்பதாக இருக்கும்வரை, தேர்தல் திருத்தம் என்பது சிறுபான்மையினரின் கழுத்துக்கான சுருக்குக் கயிறாகவே இருக்கும்.

சிறிசேன அரசின் முதற்கட்ட ஆயுட்காலம் முடிவடைந்த வேளையில் தமிழ்க் கூட்டமைப்பினருடன் ஒரு சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற எந்தவொரு எழுத்து மூல ஒப்பந்தமும் இல்லாது சிறிசேனவுக்கு வாக்களித்தவர் தமிழர்கள்.

இராணுவம் கையகப்படுத்திய தமிழர்களின் காணிகளில் சிலநூறு ஏக்கர்கள் மட்டுமே இதுவரை மீளளிக்கப்பட்டன. அவைகூட இன்னமும் இராணுவ மேற்பார்வையில்தான் உள்ளன.

அரசியல் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்படுவர் என்று கூட்டமைப்பின் சுமந்திரன் அறிவித்தபோதிலும், அப்படியாக அரசியல் கைதிகளென எவருமில்லை என்று கூறி சுமந்திரனின் முகத்தில் கரி பூசியுள்ளார் நீதியமைச்சர் விஜேதாச.

முள்ளிவாய்க்காலில் காணாமல் போனவர்களையிட்டு மறந்தும்கூட அரசாங்க தரப்பு வாய் திறக்க மறுக்கிறது.

இலங்கை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது

இலங்கை நாடாளுமன்றம் கடந்த 26ம் திகதி வெள்ளிக்கிழமை நள்ளிரவு கலைக்கப்பட்டது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டு அமைச்சரவையின் பதவிக்காலம் முடிவுக்கு வந்துள்ளது. எதிர்வரும் ஆகஸ்ட் 17ம் திகதி புதிய நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெறும் என்றும் செப்ரெம்பர் 1ல் கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வித்தியாவின் படுகொலையை விசாரிக்க இரண்டு வாரங்களில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படுமென்ற சிறிசேனவின் வாக்குறுதி காற்றில் பறக்கின்றது.

புலம்பெயர் தமிழரின் செயற்பாடுகளை முடக்குவதில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர முனைப்புடன் தொழிற்படுகின்றார்.

செப்ரம்பருக்கு முன்னர் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை நடைபெறுமென கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் வாக்குறுதி அளித்த இவர், இப்போது அது சாத்தியமில்லையென்று கூறுகிறார்.

இந்தப் பின்னணியில் கூட்டமைப்புடன் ஜனாதிபதி திமர் பேச்சுவார்த்தையென்பது, அடுத்த மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் தமிழரை எத்திப் பிழைத்து அவர்களின் வாக்குகளைப் பறிக்கும் நாடகத்தின் ஓர் அங்கம் என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

13வது அரசியல் திருத்தத்தை சிறிசேன - ரணில் நல்லாட்சி அமுல் செய்யுமென்ற எதிர்பார்ப்பு பொய்யாகிவிட்டது.

19ம் 20ம் அரசியல் திருத்தங்கள் இவர்களின் செல்லப் பிள்ளைகளாகிவிட, 13வது திருத்தம் என்பது இன்று அநாதைக் குழந்தையாகிவிட்டது. ■

புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின்
அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு
நிறுவனத்துக்காக
18 ஆண்டுகளாக வெளிவரும்
இலவச இதழ். தபாலில் பெற
விரும்புவோர் முத்திரைச் செலவான
25 பவுண்களை மட்டும் Puthinam
என்ற பெயருக்கு காசோலையாக
அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

இலவச சேவை
கல்யாணமாலை
மணமகள், மணமகன் அறிமுகம்
தொடர்புகளுக்கு
kalyanamalaiuk@yahoo.co.uk
தொலைபேசி 07466846911

பெண் உதவியாளர் தேவை
வயதான தாயாரைப் பார்க்க உதவியாளர் ஒருவர் தேவை. பாச உணர்வுள்ளவராகவும், நடுத்தர வயதினராகவும் இருப்பது விரும்பத்தக்கது. Tooting நகரை சுற்றிய 5 மைல் தூரத்தில் வசிக்க வேண்டும்.
தொடர்பு: 077353 46890

அச்சகத் தொழில் செய்வோர்,
பத்திரிகை நடாத்துபவர்கள்,
புத்தகங்கள் வெளியிடுவோர்,
மாதாந்திர சஞ்சிகை
நடாத்துபவர்களுக்காக....
புத்தக வடிவமைப்பு, டி.டி.பி.,
திருமண அழைப்பிதழ்கள், சிறப்பு மலர்கள், உங்கள் வீட்டு விஷேச நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள் என சிறந்த வேலைகளை இந்தியாவிலிருந்து வழங்குகிறோம்
Call: 9551395516
www.satyanlayout.com

Looking for an
ACCOUNTANT ?
We are next to you!
We provide solutions for your Accountancy needs

உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார
ACCOUNTANCY
தேவைகளுக்கு
LONDON இல்
இயங்கும் தனித்துவமான ஸ்தாபனம்

Initial consultation is free
No fee for first three months

P & K ASSOCIATES
CIMA
PRACTISING CERTIFICATE HOLDER
183. Burnt Oak Broadway,
Edgware. Middlesex.
HA8 5EH
020 8958 8883
079 1613 4976
(Mr.P. Navendran)
www.pandkgroup.co.uk
pandkassociates@aol.com

Nandika's Sarees
நந்திகாஸ் சாரீஸ்
FREE UK Delivery
வீட்டில் இருந்தபடியே உங்கள் மனதுக்குப் பிடித்தமான அனைத்து வகையான புடவைகள், பிளவுஸ்கள் மற்றும் .:பான்ஸி அணிகலன்கள் வாங்குவதற்கு நாட வேண்டிய ஒரேயோரு இணையதளம்
www.nandikasarees.co.uk
- Indian Sarees
- Fashionable Stiched Blouses
- Fancy Jewellery
- Bindis
- and many more

Visit our online store www.nandikasarees.co.uk
Contact
Email: nandikasarees@yahoo.co.uk Phone: 07944094691

விமலின் பக்கம்

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் 'அரங்கேற்றம்' என்ற படத்தை இயக்குனர் சிகரம் கே.பாலச்சந்தர் படைத்திருந்தார். ஒரு கிராமத்தில் வறிய பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்த பிரமீளா, தன் குடும்பத்தைக் காப்பாற்ற சென்னை சென்று தன் உடலை வாடகைக்கு விடும் தொழிலில் ஈடுபடுகிறார்.

இப்போதெல்லாம், இப்படியான பிழைப்பு சென்னையில் மிகவும் சர்வசாதாரணம் என்றாலும், இப்படத்தை ஒரு பார்ப்பனரான பாலச்சந்தர் தயாரித்த 70களில், இது மிகவும் பரபரப்பை, வாதப்பிரதிவாதங்களை உருவாக்கியது.

2015 மே மாதத்தில், முற்போக்கானர் மணிரத்தினம் தயாரித்த 'ஓ.கே.கண்மணி' வெளியாகியது. 'அரங்கேற்றம்' போல மிகவும் கூடான விவகாரத்தை - அதாவது, 'கல்யாணம் எதற்கு? தாலி - மேளம் - சத்திரம் - நளபாகம் பந்தி விருந்து இதெல்லாம் சுத்த வேஸ்ட்' என்று எண்ணும் இன்றைய இளசுகள் பற்றிய கதை. கதைக்களம்: பம்பாய். பம்பாயில் ஒரு வீட்டில் அறையை வாடகைக்கு எடுக்கிறார்கள். 'ஐக்கியா' கடையில் ஒரு கட்டில் வாங்குகிறார்கள். அன்றே குடும்பம் நடத்தத் தொடங்கிவிடுகின்றார்கள்.

அப்புறம் என்ன? 'இரவும் பகலும் ஒரே ஜாலிதான்!'. இப்படி எல்லோருமே ஜாலியாக இருக்க முற்பட்டால், தாலி எதற்கு? உறவினர்களுக்கு கலியாண சமையல் சாதம் எதற்கு? அரசாங்கத்திடம் திருமணப் பதிவுதான் எதற்கு?

நடிகர் மம்முட்டி, மகன் துல்கர் சல்மன் - அமல் சுபியா திருமண நாளில்.

இப்படியாக இலவச இன்பம் நிரந்தரமாக இருக்கும் என்று கருதும் இன்றைய இளைஞர்களும், யுவதிகளும் பிரிட்டிஷ் சட்டங்களை அறிவதில்லை. அந்தச் சட்டங்களைப் பற்றி சிறு கண்ணோட்டம் செலுத்து முன், மணிரத்தினத்தின் மணியான 'ஓகே கண்மணி' பற்றிப் பார்ப்போம்.

தயாரிப்பாளர், டிரேக்டர் உரிமையாளர், படவிநியோகத்தர், இவர்கள் தொடிந்து போய் அழித்து போனாலும் பரவாயில்லை. எனக்கு எனது பலகோடி ரூபா சம்பளம் தரப்பட்டே ஆக வேண்டும் என்று வாதிட்டு வரும் நடிகர்கள், நடிகைகள் மத்தியில் பாத்திரத்துக்கு ஏற்ற சிம்பிளான இளம் நடிகரையும், நடிகையையும் தேர்வு செய்திருக்கிறார் மணிரத்தினம். கதாநாயகனாக நடிக்கும் துல்கர் சல்மன், நாம் அறியாத பெயர். ஆனால், நாடறிந்த தமிழ், கேரள நடிகர் மம்முட்டியின் புதல்வர்.

கேரளாவிலும் சென்னையிலும் அமெரிக்காவிலும் பட்டம் பெற்றாலும் இளமைக்காலம் சென்னையிலேயே கழிந்தது. எனவே துல்கர் அழகாக கம்பீரமாக அப்பா மம்முட்டி போலவே தமிழை உச்சரிக்கிறார். சென்னையில் கூத்துடக் கலைஞராக பணியாற்றும் அமல் சுபியாவை திருமணம் செய்து கொண்டார். நடிகை நித்யா மேனனும் துல்கரும் 'கல்யாணம் வேண்டாம் - ஒன்றாக வாழுவோம்' என்று 'லிவிங் இன் சின்' வாழ்வு வாழும்போது அவர்களின் கெஞ்சல்கள்-சினுங்கல்கள் பழமைவாத வயோதிபர் பிரகாஷ் ராஜின் மனப்போக்கை மாற்றுவது போல, எங்கள் மனத்தையும் எங்கே மாற்றிவிடுமோ என்று அச்சமும் எமக்கு ஏற்படுகிறது.

நித்யா மேனன்

வயோதிபர் பிரகாஷ் ராஜின் மனைவியாக மணிரத்தினம் நடிக்கச் செய்திருப்பது ஒரு நடிகையே அல்ல! ஒரு பரதநாட்டிய மேதை, ருக்மணிதேவி அருண்டேல் அவர்களிடம் பரதம் பயின்று பட்டம் பெற்றவர், இன்று கலாஷேத்திராவின் இயக்குனர்களில் ஒருவர், இந்திய மத்திய அரசின் சென்சார் சபை (தணிக்கைக் குழு) தலைவியாக 2011 வரை தலைமை வகித்த திருமதி லீலா சாம்சன் அவர்கள். இந்திய ராணுவ அட்மிரலின் புதல்வி!

ராஜிவ் காந்தியின் புதல்வி பிரியங்கா, லீலா சாம்சனிடம் பரதநாட்டியம் பயின்றார் என்றும் சோனியாவின் ஆட்சி காலத்தில் லீலா சாம்சன் உள் வீட்டுப் பிள்ளையாக உலா வந்தார் என்றும் சோனியாவைப் பிடியாத ஊடகங்கள் எழுதியிருக்கின்றன.

சவரம் செய்யாத முகத்துடன் வயோதிபராக பிரகாஷ்ராஜ். அவரது மனைவியாக நினைவாற்றல் இழந்து கொண்டிருக்கும் 'அல் சைமர்' நோயாளியாக லீலா சாம்சன். இந்த வயோதிபர் வீட்டில் "பாவம் செய்து பாலத்தில் 'வாழும் லிவிங் இன் சின்" இளைஞன் - யுவதியாக துல்கர் சல்மன் + நித்யா மேனன். இருவரது நடிப்பும் எனக்குப் பாயாசம் போல இனித்தது! இருவரது முகங்களையும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல இருந்தது.

சரி, படத்தைப் பற்றிச் சொல்லிவிட்டேன். கட்டாயம் பார்த்து ரசிக்க வேண்டிய படம். ஆனால், படத்தில் காட்டப்பட்டதுபோல செய்து பார்க்க யாரும் முற்படாதீர்கள்! பிளீஸ்!

பிரிட்டனில் சட்டப்படி பதிவாளர் முன்னிலையில் பதிவு செய்யப்படும் திருமணங்கள், உடைந்தால், அல்லது கலைந்தால், சட்டம் பாதுகாக்கும். கணவனோ மனைவியோ இறந்தால் சலுகைகள் தரும்; மரண உதவித் தொகை, பென்ஷன் ஆகியன விதவை ஆகிவிட்ட மனைவிக்கு மட்டுமே பிரிட்டிஷ் அரசு வழங்கும்.

திருமணம் செய்யாமல் வாழும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இவை எதுவுமே தரப்படமாட்டா. திருமணம் ஆகாத மனிதன் பெயரில் இருக்கும் வீட்டில் தங்கும் உரிமை அந்த பெண்ணுக்கு என்றுமே இல்லை. (மாறாக, திருமணம் ஆன மனைவியை வீட்டிலிருந்து வெளியேற்றுவது கணவனால் முடியாத காரியம்.)

திருமணம் ஆகாவிட்டாலே மனிதர்பாடு குஷிதான்! வேறோர் சிட்டுக்குருவியைக் கொண்டு வந்து 'வைத்திருக்க' விரும்பினால் பழைய பச்சைக் கிளியை இலகுவாக வெளியேற்ற லாம். 'வெளிக்கிட்டி வீட்டாலை-' என்ற உரத்த கர்ஜனையே போதும் - அந்தப் பெண்ணுக்கு சட்டமோ போலீசோ உதவி வழங்க வழியில்லை.

ஒரு உண்மைக் கதை: பெயர்கள் மாற்றப் பட்டுள்ளன. ராதா 21 வயது அழகி. சிவம் 23 வயது. IT துறையில் கை நிறையச் சம்பாதித்தார்கள். திருமணம் ஏன்? என்று உதாசினம் செய்து ஒன்றாகக் கட்டிலைப் பகிர்ந்து கொண்டார்கள். ராதாவும் பெற்றோர்களும் சகோதரர்களும் கடைகள் நடாத்தும் .வர்த்தகப் பிரமுகர்கள். 10 வருடங்கள் கழிந்து ராதா, 31 வயதில் நிமோனியா மாரடைப்பினால் உயிரிழந்தாள்!

அவர்களின் வீடு, ராதாவின் தனிப் பெயரில் வாங்கப்பட்டிருந்தது. ராதா உயிருடன் இருக்கும்போது அவளோடு திருமணமாகாமல் குடும்பம் நடத்தி வந்த சிவத்தை ஒரு மருமகனாக, மைத்துனராக உபசரித்த ராதாவின் குடும்பம் அவரைப் புறக்கணித்தது. மண் ஆசை யாரை விட்டது? வீட்டைத் தங்கள் கைப்பற்ற ராதாவின் குடும்பம் சிவத்தின் மீது வழக்குத் தொடர்ந்தது.

"சிவம் எந்த நீதிமன்றம் சென்றாலும் ஜெயிக்க மாட்டார்" என்று வழக்குரைஞர்கள் ஆலோசனை கூறியிருக்கிறார்கள். இன்ப உறவு முக்கியமல்ல. முறையான இல்லற உறவு, திருமணப் பந்தம், பதிவுத் திருமணமே சிறந்தது என்று சிவம் இப்போது உணர்கிறார்.

திருமணம் செய்யாமல் உடல் உறவு கொண்டு ஒன்றாக வாழ்வதை 'லிவிங் இன் சின்' என்று கிறித்தவ மதம் விபரிக்கிறதா, இல்லையா என்று தெளிவான ஆதாரங்கள் எதுவுமே இல்லை என்று அண்மைக்கால கிறித்தவ மதகுருக்கள் சிலர் கூறுகிறார்கள்.

விவிலிய நூல் இவ்விஷயத்தில் மௌனம் காக்கிறது என்று சிலர் வாதாடுகிறார்கள். எது எவ்வாறாயினும் பகவத்கீதை கண்ணனால் பாடப்பட்டது. அது கண்ணன் உரைத்த மொழி என்று கூறப்படுவதுபோல ஆண்டவனால் வழங்கப்பட்டவை பத்துக் கட்டளைகள் என்று பைபிள் விவிலிய நூல் விளக்குகிறது. இரண்டு கருங்கற்களில் பொறித்து, மோசஸ் இடம் ஆண்டவர் கையளித்த இந்த 10 கட்டளைகளில் 6வது கட்டளை திருமண பந்தத்திற்கு வெளியே உறவு கொள்ளாதே என்பதாகும். மற்றவை சில: பெற்றோரைப் பேணு; ஆண்டவனை நிந்திக்காதே; கொலை செய்யாதே; ஏமாற்றாதே!

எல்லா மதங்களும் இப்படி ஒரு உண்மையை வலியுறுத்தும்போது, பிரிட்டிஷ் சட்டம் வற்புறுத்தும்போது, சிலர் மட்டும் தமது சுய இன்பத்தை மெதிராக மதிப்பது ஏன்? எனக்கு விடை தெரியாத வினா இது! ■

இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

5, Chapel Road, West Ealing, London W13 9AE

தொலைபேசி இல: 0208 810 0835, தொலைநகல் இல : 0208 840 0485,

Email :info@ammanealing. org, web : www.ammanealing.org

ஆலய செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறுவர்களைப் பராமரிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

மகோற்சவ விஞ்ஞாபனம் -2015

இலண்டனில், ஈலிங் பதியில் கோயில் கொண்டு, அகிலமெங்கும் அருளாட்சி புரியும் அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனின் வருடாந்த மகோற்சவ விழா மங்களகரமான மன்மத வருடம் ஆனி 32ம் நாள் 16.07.2015 வியாழக்கிழமை மாலை கணபதி ஹோமத்துடன் ஆடி 01ம் நாள் வெள்ளிக் கிழமை 17.07.2015 காலை 9.30 மணிக்கு கொடியேற்றமும், **09.08.2015 ஞாயிறு தேர்த்திருவிழாவும்,** 10.08.2015 திங்கள் தீர்த்தத் திருவிழாவும், 12.08.2015 இரவு வைரவர் மடையுடன் நிறைவுபெற திருவருள் கூடியுள்ளது. அக்காலங்களில், அடியார்கள் அனைவரும் வருகை தந்து, கிரியைகளில் பங்கு கொண்டு, தொண்டுகள் புரிந்து, அம்பிகை அருள் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

31.03.2015 வரை
தாயகப் பணிக்கு
1,992,532-00 பவுண்கள்
அனுப்பிவைக்கப்பட்டுள்ளன,

17.07.2015 முதல் 12.08.2015 வரை பூசை நேரம்

காலை	08:15	சங்கல்பம்	மாலை	05:15	சாயரட்சைப்பூசை
காலை	08:30	அபிஷேகம்	மாலை	05:45	ஸ்தம்ப பூசை
காலை	10:40	ஸ்தம்ப பூசை	மாலை	06:30	கலாசார நிகழ்வு
காலை	11:30	வசந்தமண்டப பூசை	இரவு	07:15	வசந்தமண்டப பூசை
பகல்	01:00	மகா பிரசாதம்	இரவு	10:30	விழா நிறைவு

மகோற்சவ நிகழ்வுகள்

17.07.2015	வெள்ளி	கொடியேற்றக் காட்சி காலை 9.30 மணி	31.07.2015	வெள்ளி	கேதார கௌரி அம்பாள் அருட்காட்சி
18.07.2015	சனி	ராஜ ராஜேஸ்வரி அருட்காட்சி	01.08.2015	சனி	வசந்தோற்சவ அருட்காட்சி
19.07.2015	ஞாயிறு	கனகதாரா லட்சுமி அருட்காட்சி	02.08.2015	ஞாயிறு	பக்தானுக்கிரக அருட்காட்சி
20.07.2015	திங்கள்	நாகபூசணி அருட்காட்சி	03.08.2015	திங்கள்	சந்தானபாக்கிய லட்சுமி அருட்காட்சி (தங்கரத பவனி)
21.07.2015	செவ்வாய்	மீனாட்சி அம்பாள் அருட்காட்சி			
22.07.2015	புதன்	சரஸ்வதி வித்யா அருட்காட்சி	04.08.2015	செவ்வாய்	ஜோதி மங்கள அருட்காட்சி
23.07.2015	வியாழன்	அர்த்தநாரீஸ்வர அருட்காட்சி	05.08.2015	புதன்	ஓம்காரரூப தர்சன அருட்காட்சி
24.07.2015	வெள்ளி	கைலாச தரிசன அருட்காட்சி	06.08.2015	வியாழன்	மகாதுர்க்கா தரிசன அருட்காட்சி
25.07.2015	சனி	அன்னபூர்ணாம்பிகை அருட்காட்சி	07.08.2015	வெள்ளி	வேட்டைத் திருவிழா
26.07.2015	ஞாயிறு	அபிராமி தரிசன அருட்காட்சி	08.08.2015	சனி	சகோபுர தர்சன அருட்காட்சி (சப்பரம்)
27.07.2015	திங்கள்	சௌபாக்கியாம்பிகை அருட்காட்சி	09.08.2015	ஞாயிறு	இரதோற்சவ அருட்காட்சி (தேர்) காலை 10.00 மணி
28.07.2015	செவ்வாய்	காமாட்சி அருட்காட்சி	10.08.2015	திங்கள்	தீர்த்த உற்சவம், விஷ்ணு துர்க்கை அருட்காட்சி
29.07.2015	புதன்	அனந்த சயன அருட்காட்சி	11.08.2015	செவ்வாய்	பூங்காவன அருட்காட்சி, திருவூஞ்சல்
30.07.2015	வியாழன்	புஸ்பக விமான அருட்காட்சி	12.08.2015	புதன்	வைரவர் மடை

மகோற்சவ பிரதம குரு :

வேதாகமஞானசாகரம் சிவஞானசிரோமணி சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்த அரவிந்த குருக்கள்

பூசைக்குரிய பூக்கள், பால், இளநீர் போன்றவற்றை அபிஷேகத்திற்கு முன்னதாக ஆலயத்தில் கொடுத்து உதவுக. அனைவரும் வருக. அன்னையின் அருள் பெறுக.

அன்னையின் சேவையில்,விழா உபயகாரர்களுடன், நிருவாக சபை, அறங்காவலர் சபை

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

24 HOUR FREE TAMIL CHANNEL

Dramas | Movies | Music | News | Sports | Live Events | Life Style | Religious

- முன்றுவேளை பிரதான செய்திகள்
- மணித்தியாலச் செய்திகள்
- இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலும் செய்தியாளர்கள்
- நேரடி களநிலைவரங்கள்
- 24 X 7 உடனுக்குடன் செய்திகள்
- செய்தியும் அவற்றின் பின்னணியும் ~ ஆவணப்படங்கள்

ஆதவனின் திசைகள் Documentaries

ஆதவனின் சிறப்பு பார்வை SPECIAL REPORTS

இலங்கைப் பத்திரிகைகளின் கண்ணோட்டம்

விளம்பர தொடர்புகளுக்கு

Satellite Eurobird 9a | Freq 11766 | Vertical Symbol Rate 27500 | FEC ¾

AUSTRIA	DENMARK	FRANCE	GERMANY	ITALY	NETHERLAND	NORWAY
013 649 244	078 772 943	097 518 0123	0305 6837 0039	0247 921 656	0202 410 161	021 988 897
SWITZERLAND	SWEDEN	SPAIN	UNITED KINGDOM	WEBSITE	E-MAIL	
0435 082 375	085 250 0208	0911 238 710	0203 318 2004	www.athavantv.com	sales@athavantv.com	

வெற்றிக் களிப்பிலும் விடாது துரத்தும் கறுப்பு!

'ஆழம் வரை சுழி'

ஓட ஜெயா தயார்!

நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று 'திருவிளையாடல்' திரைப்படத்தில் சிவனைப் பார்த்து நக்கீரர் தூஷிப்பதுபோல்; உயர் நீதிமன்ற தனி நீதிபதி சி.ஆர்.குமாரசாமியின் விடுதலைத் தீர்ப்பில் காணப்படும் அடிப்படைத் தவறுகள், குளறுபடிகள், கணிதப்பிழைகள் குறித்து தினம் தினம் பெங்களூரில் செய்தியாளர்களிடம் குற்றச்சாட்டுகள் சுமத்திவருகின்றார் கர்நாடக அரசு சிறப்பு வழக்கறிஞர் பி.வி.ஆச்சார்யா! பெங்களூர் சிறப்பு தனி நீதிபதி ஜோன் மைக்கேல் டி குன்ஹா அளித்த, அபராதத்துடன் கொண்ட சிறைத் தண்டனைக்கு எதிராக ஜெயலலிதா தரப்பு கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீடு வழக்கு விசாரணையை மேற்கொண்ட உயர் நீதிமன்ற தனி நீதிபதி குமாரசாமி அளித்த தீர்ப்பில் பக்கத்துக்குப்பக்கம் ஏராளமான அடிப்படைத் தவறுகள், அப்பட்டமான கணிதப் பிழைகள், சட்டமுரண்பாடுகள் காணப்படுவதாக அரசு வழக்கறிஞர் ஆச்சார்யா சுட்டிக்காட்டி, கர்நாடக அரசு மேல்முறையீடு செய்ய முகாந்திரம் உண்டு என்னும் தனது கருத்தை வெளியிட்டார். இதனை முழுமையாக ஏற்றுக்கொண்ட கர்நாடக சட்டத்துறை செயலர் சங்கப்பா, கர்நாடக அரசு தலைமை வழக்கறிஞர் ரவிவர்மகுமார் ஆகியோர், நீதிபதி குமாரசாமியின் விடுதலைத் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்ய போதுமான, தகுதியான காரணங்கள் உண்டு என்று அரசுக்கு பரிந்துரை செய்தனர். கர்நாடக அமைச்சரவையும் மேல்முறையீடு செய்ய முடிவு செய்தது. இவற்றைத் தொடர்ந்து கர்நாடக அரசு சார்பில் டில்லி வழக்கறிஞர் ஜோசப் அரிஸ்டோட்டில் மற்றும் ஆச்சார்யாவின் உதவி வழக்கறிஞர் சந்தேஷ் சவுட்டர் கடந்தவாரம், உச்ச நீதிமன்ற தலைமை பதிவாளரிடம், சிறப்பு மேல்முறையீடு மனுவை தாக்கல் செய்தனர். கோடை விடுமுறைக்குப் பின்னர் உச்ச நீதிமன்றம் இன்று (ஜூலை முதலாம் திகதி) கூடும்போது, இந்த மனு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு, திகதி அறிவிக்கப்படும்.

கர்நாடக அரசு மேல்முறையீடு:
'ஆழம்' வரை சுழிஓட ஜெயா தயார்!

சொத்துக்குவிப்பு வழக்கில் எதிர்பாராத தீர்ப்பும் பின்னர் ஜாமீனும், இதனைத்தொடர்ந்து மேல்முறையிடையும் எதிர்நோக்கிய ஜெயலலிதா, ஆரம்பத்தில் வெளியில் காட்டமுடியாத பயபதட்டத்துடன் காணப்பட்டாலும், டில்லி வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட ஆலோசகர்கள் கொடுத்த நம்பிக்கையில் தைரியம் பெற்றார். ஒரு கட்டத்தில்; நீதிபதி குமாரசாமியின் விடுதலைத் தீர்ப்பை எதிர்த்து கர்நாடக அரசு செய்யும் மேல்முறையீடு வழக்கு தீர்ப்பின் பின்னர் மீண்டும் தமிழக முதலமைச்சராகலாம் என்று ஜெயலலிதா முடிவு செய்திருந்தாலும் ஆலோசகர்களின் நம்பிக்கையில் மனம்மாறி முதல்வர் பதவியேற்றுக்கொண்டார். மேலும்; உயர் நீதிமன்றம் அளிக்கும் விடுதலைத் தீர்ப்புக்கு எதிராக இடைக்காலத் தடையை உச்ச நீதிமன்றம் வழங்கியதாக முன்னுதாரணங்கள் இல்லை என்று மூத்த வழக்கறிஞர்களும், ஜெயலலிதாவின் சட்ட ஆலோசகர்களும் அளித்திருந்த நம்பிக்கை ஜெயலலிதாவுக்கு பெரும் ஆறுதல் அளித்திருந்தது.

ஆச்சார்யா



ஜோன் மைக்கேல் டி குன்ஹா



குமாரசாமி

இவற்றின் அடிப்படையில்தான் என்ன விலை கொடுத்தும், கர்நாடக அரசின் மேல்முறையீடை எதிர்கொள்ள தயாரானார்.

"இடைக்கால தடைவிதித்தால் பழி உச்ச நீதிமன்றத்தையே சேரும்!"

சொத்துக்குவிப்பு வழக்கில் தமிழக முதல்வர் ஜெயலலிதா உள்ளிட்ட நால்வரின் விடுதலையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் கர்நாடக அரசு மேல்முறையீடு செய்திருக்கும் நிலையில் அரசு வழக்கறிஞர் பி.வி.ஆச்சார்யா தாக்கல் செய்திருக்கும் 2,367 பக்க மனுவில், கர்நாடக உயர் நீதிமன்ற (நீதிபதி குமாரசாமியின்) தீர்ப்புக்கு தடை விதிக்க கோரியுள்ளார். கர்நாடக உயர் நீதிமன்றம் ஒருதலைப்பட்சமாக, குறைபாடுகளுடன் வழங்கிய தீர்ப்புக்கு தடைவிதித்து நீதிபதியின் தீர்ப்பை ரத்து செய்து, நீதிபதி குன்ஹா வழங்கிய தீர்ப்பை அமுல்படுத்த வேண்டும் என்று மேல்முறையீடு மனுவில் குறிப்பிட்டு 'சட்டயுத்தம்' பிரகடனம் செய்யப்பட்டாலும் வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பதுபோல், ஜெயலலிதாவின் மூத்த வழக்கறிஞர்களும் 'வேட்டி'யை மடித்து கட்டுகிறார்கள்.

உச்ச நீதிமன்ற நீண்டகால பார்வையாளரும், மூத்த பத்திரிகையாளருமான வெங்கடேசன், உச்ச நீதிமன்றத்தில் கர்நாடக அரசு மேல்முறையீடு செய்வது தொடர்பாகத் தெரிவிக்கையில்; உயர் நீதிமன்றம் (நீதிபதி குமாரசாமி) வழங்கிய விடுதலைத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை விதித்து, பழியை உச்ச நீதிமன்றம் தேடாது என்று நம்பிக்கை வெளியிட்டார். இதுகுறித்து அவர் அளித்த விளக்கத்தில்;

"உச்ச நீதிமன்றத்தில் கர்நாடக அரசு மேல்முறையீடு செய்தாலும் உடனடியாக இடைக்காலத் தடையைப் பெறமுடியாது. இந்திய அரசியல் சாசன சட்டம் 136-ன் கீழ் தாக்கல் செய்யப்படும் இந்த மேல்முறையீடு வழக்கு ஒரு உயர் நீதிமன்றம் குற்றவாளிக்கு வழங்கிய தண்டனையை எதிர்த்து தொடுக்கப்படும் வழக்காகும். இந்த வழக்கில் விடுதலை செய்யப்பட்ட குற்றவாளி ஜெயலலிதா இன்று முதல்வராகப் பொறுப்பேற்றுள்ளார். பொதுவாக விடுதலை என்று சொல்லப்பட்ட தீர்ப்புக்கு இடைக்காலத் தடையை உச்ச நீதிமன்றம் வழங்காது. ஒரு தீர்ப்புக்கு இடைக்காலத்தடை பெறுவதில் சட்டம் மௌனமாகத்தான் உள்ளது. அதைப்பற்றிய தெளிவான வரையறைகள் சட்டத்தில் இல்லை. முதல்வராக உள்ள ஜெயலலிதாவுக்கு ஆதரவான விடுதலைத் தீர்ப்புக்கு அவரது விளக்கம் கேட்காமல் தடை விதிக்க முடியாது. ஏற்கனவே ஜெயலலிதாவுக்கு உச்ச நீதிமன்றம் அவசர ஜாமீன் வழங்கியதே சர்ச்சையாகிவிட்டது. இந்நிலையில் விடுதலைத் தீர்ப்புக்கு இடைக்காலத்தடை விதித்து, பழியை உச்ச நீதிமன்றம் தேடாது" என்று மூத்த பத்திரிகையாளர் வெங்கடேசன் விபரித்தார்.

ஒருவேளை நீதிபதி குமாரசாமியின் விடுதலைத் தீர்ப்புக்கு உச்ச நீதிமன்றம் தடைவிதித்தால், ஜோன் மைக்கேல் டி குன்ஹாவின் தீர்ப்பு நடைமுறைக்கு வந்துவிடும். இதன் காரணமாக முதல்அமைச்சர் ஜெயலலிதா குற்றவாளியாவார். முதல் அமைச்சர் மற்றும் ஆர்.கே.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பதவிகள் பறிக்கப்படும். சிறை செல்ல நேரிடலாம். நினைத்தாலே... கவலையும் பதற்றமும் பீரிடுகிறது! ஜெயலலிதாவின் கவலையும் கவனமும் நீதிபதி குமாரசாமி விடுதலைத் தீர்ப்பு, ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலில் இமாலய வெற்றி என்று மகிழ்ச்சியில் திளைத்தாலும்; கர்நாடக அரசு தாக்கல் செய்திருக்கும் மேல்முறையீடு, இரத்தின கம்பளத்தில் நடந்துசென்று, கம்பள விரிப்பு உச்ச நீதிமன்றத்தின் வாசல்முன்பாக முற்றுப்பெற்று, கல்லும் முள்ளும் நிறைந்த மிகுதிப்பாதையில் பயணித்து, நீதிமன்றக் கட்டிட வாசலில் கத்தி தொங்குவதுபோல் கறுப்பு விடாமல் துரத்துவது போன்ற உணர்வே மேலோங்குகிறது! நிலைமை இப்படி இருந்தாலும், அ.தி.மு.க. தரப்பினர் குதூகலம் அடையும் விதத்தில் பெரிய அளவில் ஒரு திட்டம் வரையப்பட்டு வருகிறதாம். கர்நாடக உயர் நீதிமன்றத்தில் விடுதலைத் தீர்ப்பு பெற்று, அ.தி.மு.க. தவிர்ந்த அத்தனை அரசியல் சக்திகளையும் நிலைதடுமாறச் செய்ததுபோல், உச்ச நீதிமன்றத்திலும் சாதிக்கலாம் எனும் புதிய நம்பிக்கை ஜெயலலிதாவுக்கு ஏற்பட்டுள்ளது. இது நடக்கும் என்பதில் தெளிவாகவும், இதனை நினைத்து பெருமைப்படவும் செய்கிறார் தமிழக முதல்வர் ஜெயலலிதா!

'ஜெயா' சின்னத்தில் மற்றுமொரு நட்சத்திரம்! தொடரும் சாதனை!

"எனக்கு நீங்கள் உற்சாகத்துடன் வாக்களித்து தேடிக்கொடுக்கும் அந்த மகத்தான வெற்றி, இந்திய அளவில் பேசப்படவேண்டும். இந்தியாவிலேயே என்னை எதிர்த்துப் போட்டியிட்ட அத்தனை பேரும் முன்பணத்தை இழக்க வேண்டும். அந்த அளவுக்கு நாட்டிலேயே இதுவரை நிகழ்த்தாத (அதிக வாக்குகள் - அதிகமான பெரும்பான்மை) பெரும்பான்மை சாதனையை நிலைநாட்டவேண்டும்!." அம்மா ஆணையிட்டார், தொண்டர்கள் நிறைவேற்றினார்கள்! ஜெயலலிதாவை எதிர்த்த 27 பேரும் முற்பணமிழந்தனர்!.

ஒரு இடைத்தேர்தல் என்றால் அங்கு ஆட்சியில் உள்ள கட்சிதான் வெற்றிபெறும் என்பது தமிழகத்தில் எழுதப்பட்ட உப விதியாகிவிட்டது. ஆர்.கே.நகர் தொகுதியில் போட்டியிடாமலிருந்த கட்சிகளின் பகிரங்க குற்றச்சாட்டு மாதிரி, ஆட்சியில் உள்ளவர்களுக்கு ஆதரவாக தேர்தல் ஆணையமே இவர்களுக்கு ஆதரவாக பிரசாரம் செய்யுமாம்! வாக்காளர்களின் மனநிலை மாறாதவரை, நாளை மாறும் ஆட்சியிலும் இதே தொடர்கதைதான்!

எதிர்த்துப் போட்டியிட திராணியற்றவர்கள் கூலிக்கு மாரடிப்பதுபோல, பணநாயகமும் விலை இல்லாப் பொருள்களும் வாக்காளர்களுக்குக் கைமாறுவது நிறுத்தப்படும்வரை, 'சர்வதேச சந்தை' விலைக்கேற்ற மாதிரி வாக்குகளின் ஏல விலையும் கூடிக்கொண்டே போகும். தேர்தல் என்றால், இது ஒரு அத்தியாவசிய கடமை போலும்!. ■

Since 1999

FAST CASH
SEND TODAY - COLLECT TODAY

Central Bank Approved Money in Minutes to

Sri Lanka

Collect your money immediately at any Commercial Bank
or have your funds credited swiftly to any bank account

OUR PROMISE
Your Money is Sent from the UK and not Credited Locally by Unknown Sources.
Official Transfers

New Branch Now at
Wembley
London Design Center
HA9 0QL

Customer Services
0208
886 4488
www.efastcash.co.uk

Wherever you are in the UK, you don't have to come to us

Credit our account online with BARCLAYS & call us for immediate transfer
A/C Name : C.E.C. LTD A/C No : 70713945 Sort : 20-36-47

FCA Fastcash is a FCA & HM Customs and Excise / registered business. MSB 12112819 / FCA -PI 540536. Open 7 Days

32 SEND FASCASH FROM BRANCHES

CENTRAL LONDON	0207 356 3800
OAKWOOD	0208 886 4488
FINCHLEY	0208 343 3737
EDMONTON	0208 884 4646
ST.ALBANS	0172 786 1111
ROMFORD	0170 873 3633
HOLLOWAY RD	0207 700 7676
BARNET	0208 449 4033
HENDON	0208 202 4300
ILFORD	0208 553 5300
CHISWICK	0208 995 9595
BRICK LANE	0207 033 4600
CAMDEN NW1	0203 437 1200
FLEET STREET	0207 936 4646
WALTHAMSTOW	0208 521 5252
WOOD GREEN	0208 889 6464
SWISS COTTAGE	0207 722 6767
GOLDERS GREEN	0208 455 0099
CAMDEN - MORRISONS	0207 284 1415
TOTTENHAM COURT RD	0203 437 1212
LONDON BRIDGE	0207 407 5717
WELWYN G.CITY	0170 733 3883
ROYAL DOCKS	0207 474 4700
GREEN STREET	0208 552 5100
GOLDERS GREEN	0208 455 0099
CAMDEN - MORRISONS	0207 284 1415
TOOTING	0203 437 1220
HARROW	0203 437 1221
DALSTON	0203 437 1222
FULHAM	0203 437 1223
BAKER STREET	0203 437 1225
WEMBLEY LDO	0203 437 1226

HNB BOC PEOPLE'S BANK NSB Sampath Bank SEYLAN NDB bank Nations TrustBank HSBC Standard Chartered Vardhana Bank PAN ASIA

BEST DEALS TO SRI LANKA

Do not book your air ticket with any other travel agent until you speak to us!

QUALITY 1,2 & 3 BED APARTMENTS

for Rent in
Mt.Lavinia
Sea Side - Close to St. Thomas & Mt.Lavinia Hotel

- Fully Furnished with AC & Lift
- 3 min to Galle Rd, 5 Min to Beach

Contact : Mike on 07733 261 999
Visit our website
www.stayatmount.com

SriLankan
£475
Including Taxes
from London Heathrow
Baggage **40kg + 7kg**

We could also book
Flights from
Colombo to London
Contact us for Best Deals!

LIMITED SEATS AVAILABLE!

Outbound Travel : 1st September - 30th November 2015
02 Months valid Ticket. Subject to Availability*

JET AIRWAYS	OMAN AIR	ETIHAD	Emirates	QATAR AIRWAYS
from £439 incl. taxes	from £445 incl. taxes	from £485 incl. taxes	from £475 incl. taxes	from £485 incl. taxes
2pc Baggage + 7kg H. Carry	40kg Baggage + 7kg H. Carry	30kg Baggage + 7kg H. Carry	30kg Baggage + 7kg H. Carry	40kg Baggage + 7kg H. Carry

All fares are valid on off-peak season, Subject to availability. Terms and conditions apply.

130 High Street, Barnet, EN5 5XQ | www.holidayair.com

ATOL PROTECTED IATA **0208 440 0770**

Holiday Air
A Travel Experience to Remember

தொடர்கதை

'புனித யாத்திரை'

சிவ.தியாகராஜா

விரக்தியின் விளிம்பு

1

சாவகச்சேரியில் தனது தாயாரின் தங்கை நிர்மலாவின் வீட்டை அடைந்த பின்னரே ஜெயராணியால் வாய் விட்டு அழ முடிந்தது. கடந்த இரு தினங்களாக இதயத்தில் அடக்கி வைத்திருந்த துயர வெள்ளம் அணை உடைத்த காட்டாற்று வெள்ளம் பீறிட்டுப் பாய்வதைப் போல மடை திறந்து பெருக - அடக்க முடியாமல் கதறி அழுதாள்.

கடந்த 48 மணி நேரங்களாக இடம் பெற்ற பேரிழப்புக்களும், பேராபத்துக்களும், மனத் தாங்கல்களும் இதயத்திலிருந்து உணர்ச்சிப் பிழம்பாய் வெடித்துப் பீறிட நிர்மலாவைக் கட்டிப்பிடித்துக்கொண்டு "ஐயோ, சித்தி, எங்கட நிலமை இப்படியாகிப் போச்சே" என்று அரற்றி அழுதாள்.

"ஆருயிரான அம்மாவை இழந்தேன்; அருமைத் தம்பியை இழந்தேன்; பிறந்து வளர்ந்த வீட்டை இழந்தேன்; ஓடி விளையாடிய ஊரை இழந்தேன்; இதற்குமேல் என்ன துன்பம் வரவேணும்"

ஜெயராணியின் அழுகுரலைக் கேட்டு அவளது தம்பி ராஜ்குமாரும் தங்கை காந்திமதியும் ஓடிவந்து அவர்களும் அவளைக் கட்டிக்கொண்டு அழுதார்கள்.

தாங்கமுடியாத துயரங்களுக்கும் சோகங்களுக்கும் அழுகை ஓர் ஆரோக்கியமான வடிகால். அடக்க முடியாத உள்ளத்தின் வலியே வெம்மையான விழி நீராக வழிந்தோடுகிறது. தங்களது மன வேதனைகளை அழுகை மூலம் வெளிக்கொணர முடியாதவர்கள்தான் அவற்றை உள்ளடக்கி பல வகைப்பட்ட மனத் தாங்கல் களுக்கும், மன நோய்களுக்கும் ஆளாகிறார்கள்.

அன்று மாலை சாவகச்சேரியில் கச்சேரி பணிமனை வேலை முடிந்து திரும்பிய நிர்மலாவின் கணவர் குமாராசாமி - அவர்களின் சித்தப்பா - நடைபெற்ற சம்பவங்கள் அனைத்தையும் விபரமாகக் கேட்டறிந்தார். நீண்ட நேர சிந்தனையின் பின் ஜெயராணியையும், ராஜ்குமாரையும் அழைத்து அவர்கள் சாவகச்சேரியில் தங்கியிருப்பது ஆபத்தானது என்றும், மறுநாளே கொழும்புக்குப் போய்விடுவதே உசிதமானது என்றும் குமாரசாமி ஆலோசனை கூறினார்.

"கட்டுவன் வீட்டில் இரண்டு இராணுவ வீரர்கள் கொலையுண்டு கிடக்கிறார்கள். இராணுவத்தின் தூப்பறியும் இலாகா எப்படியும் அவ்விட்டின் உரிமை யாளர்களை இனம் கண்டு, அவர்களின் உறவினர் களாகிய நாம் சாவகச்சேரியில் இருப்பதைக் கண்டு பிடித்துவிடுவார்கள். அவர்கள் இங்கே வரும் சமயம் நீங்கள் இங்கே இருக்கவே கூடாது. உங்களை அவர்கள் விசாரணைக்கென அழைத்துப் போனால் பின்னர் நீங்கள் உயிருடன் திரும்பி வருவது சாத்தியமில்லை. இராணுவத்தினரால் விசாரணைக்கென அழைத்துப் போன பலர் உயிருடன் மீண்டதில்லை"

சித்தப்பா குமாரசாமியின் ஆலோசனை அனை வருக்கும் சரியானதாகவே பட்டது. அதன்படி மறுநாள் அதிகாலை ஜெயராணி தம்பி ராஜ்குமாரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு கொழும்புக்குப் பயணமானாள். மதவாச்சி வரையும் பஸ் வண்டியில் பயணம் செய்து, மதவாச்சியிலிருந்து ரயில் பிடித்து கொழும்பு போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் அவசரமாக கொழும்பு வருகிறார்கள் என்ற செய்தியை அப்பிள்ளைகளின் தந்தை பாஸ்கருக்கு குமாரசாமி தொலைபேசி மூலம் தெரிவித்திருந்தார்.

குமாரசாமி சித்தப்பா மற்றுமொரு காரியம் செய்தார். அவருடைய தம்பியார் ஒருவர் கிளிநொச்சியில் நெற் செய்கையில் ஈடுபட்டிருந்தார். அவரோடு அவரது மனைவியும் அங்கே தங்கியிருந்தார். ஜெயராணியும், ராஜ்குமாரும் கொழும்பு சென்ற மறுநாள் காந்தி மதியை அழைத்துக்கொண்டு போய் சில காலம் கிளிநொச்சியில் இருக்கும்படி அவர்களோடு விட்டு விட்டு வந்தார்.

ஒருவேளை இராணுவத்தினர் அப்பிள்ளைகளைத் தேடி அங்கே வர நேரிட்டால் 'தங்களுக்கு எதுவுமே தெரியாது - அப்பிள்ளைகள் அங்கே வரவில்லை' எனச் சாதித்து விடலாமல்லவா?

2

இலங்கை (ஸ்ரீலங்கா) யிலிருந்த பிரித்தானிய தூதரகம், தலைநகரான கொழும்பில் கொள்ளுப்பிட்டியில் காலி வீதியருகே அமைந்திருந்தது. மூன்று மாடிகளைக் கொண்ட இக்கட்டிடத்தில் பிரித்தானிய உயர் கமிஷனரும் அவரது உதவியாளர்களும் பணிபுரிந்தார்கள். பெரிய பிரித்தானியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான அரச கருமங்களைக் கவனிப்பதும், இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக சம்பந்தமான விஷயங்களை ஒப்பேற்றுவதும், பிரித்தானியா செல்லும் பயணிகளுக்கு கடவுச் சீட்டு 'விஸா' வழங்குவதுமே அவர்களின் முக்கிய பணிகளாக இருந்தன.

அந்த ஸ்தாபனத்தில் பிரித்தானியா போகும் பயணிகளுக்கு 'விஸா' வழங்கும் பகுதியில் ஜெயராணியின் தந்தை பாஸ்கர் பணிபுரிந்து கொண்டிருந்தார். இலங்கை மக்களை நேர்முகம் கண்டு கடவுச் சீட்டு வழங்குபவர்களில் ஒரு சிலராவது இலங்கையர்களாக இருக்க வேண்டும் என்ற காரணத்தினாலோ என்னவோ அவர் இந்தப் பதவிக்கு நியமனம் பெற்றிருந்தார். கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக இப்பிரிவில் பணிபுரிந்து வரும் பாஸ்கர் அவரது அனுபவம் காரணமாக அந்தப் பிரிவின் உயர் அதிகாரியாக உயர்வு பெற்றிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழையை பிறப்பிடமாகக் கொண்ட பாஸ்கர் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் சென்னை தாம்பரம் கிறிஸ்தவ கல்லூரியில் உயர் கல்வி பயின்று கொண்டிருந்த சமயம், அதே கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த இலங்கைப் பெண்ணான விஜயாவுடன் பரிச்சயம் ஏற்பட்டது. நாளடைவில் காதலாக மாறியது.

பல்கலைக் கழகப் பட்டங்கள் பெற்று நாடு திரும்பியதும் பாஸ்கருக்கும் கொழும்பில் பிரித்தானிய தூதரகத்தில் பணி புரிய நியமனம் கிடைத்தது. விஜயாவுக்கு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் 'பயலோஜி' கற்பிக்கும் ஆசிரியை வேலை கிடைத்தது. அசப்பில் பழம் பெரும் நடிகை சாவித்திரி போல் தோற்றமளித்த விஜயா டீச்சரை கல்லூரி மாணவர்கள் 'மிஸ்ஸியம்மா' என்று அழைத்தார்கள்.

இருபது ஆண்டுகளுக்கு முன் பாஸ்கர் - விஜயா இருவரும் திருமணம் செய்து கொண்டார்கள். விஜயாவின் தந்தையார் பிரித்தானிய அரச ஆட்சிக் காலத்திலிருந்து அரச நில அளவையாளராகப் பணி யாற்றி வந்தவர். அவர்கள் கட்டுவன் கிராமத்தில் குடும்பமாக வாழ்ந்து வந்த மாடி வீடு மூத்த மகள் விஜயாவிற்குச் சீதனமாக வழங்கப்பட்டது. விஜயாவின் தங்கை நிர்மலா பின்னர் சாவகச்சேரியில் ஒரு கச்சேரி நிர்வாகஸ்தரைத் திருமணம் செய்து கொண்டு அங்கே போய்க் குடியேறினாள்.

பாஸ்கருக்குக் கொழும்பிலும், விஜயாவிற்குக் கிராமத்திலும் வேலை அமைந்தமையால் கணவன் - மனைவி தொடர்ச்சியாக ஓரிடத்தில் வசிக்க முடியவில்லை. கிராமத்து வீட்டை விற்றுவிட்டு கொழும்பில் குடும்பமாக வாழ்வது குறிக்கோளாக இருந்த போதும் நடைமுறை வாழ்க்கையில் அது சாத்தியப்படவில்லை. ஆரம்பத்தில் வருடத்திற்கு ஐந்தாறு தடவை கொழும்பிலிருந்து 'யாழ்தேவி' எக்ஸ்பிரஸ் வண்டி மூலம் ஊர் சென்று திரும்பிய பாஸ்கர் காலப் போக்கில் அடிக்கடி பிரயாணம் மேற் கொள்வதைக் குறைத்துக் கொண்டார்.

பாஸ்கர் - விஜயா தம்பதிகளுக்கு ஐந்து பிள்ளைகள். சந்திர குமார், ராஜ்குமார், மோகன் குமார் என்ற பெயர்களைக் கொண்ட ஆண் பிள்ளைகள் முறையே பதினெட்டு, பன்னிரண்டு, ஒரு வயதானவர்களாயும் - ஜெயராணி, காந்திமதி என்ற பெண்கள் முறையே பதினைந்து, எட்டு வயதானவர்களாயும் இருந்தார்கள். இவர்களைத் தவிர இக்கதை நடைபெற்ற காலத்தில் விஜயா எட்டு மாசக் கர்ப்பிணியாகவும் இருந்தார். விஜயா தன் பிள்ளைகளோடு கட்டுவன் கிராமத்திலும், பாஸ்கர் தனியனாகக் கொழும்பிலும் வாழ்க்கை நடத்த வேண்டியது நிர்ப்பந்தமாயிற்று.

கொழும்பில் கொள்ளுப்பிட்டியிலிருந்த பிரித்தானியத் தூதரகம் மூன்று மாடிகளைக் கொண்ட பெரியதொரு கட்டிடத்தில் அமைந்திருந்தது. தரை மட்டத்தில் முக்கியமான அதிகாரிகள் வசித்த பிளாட்டுகளும், மேல் மாடிகளில் அலுவலகக் கந்தோர்களும், கான்பரன்ஸ் ஹால்களும், வரவேற்பறைகளும் அமைந்திருந்தன. தரை மட்டத்திலிருந்த பிளாட் ஒன்றில் பாஸ்கர் குடியிருந்தார். அவருக்கு அருகிலிருந்த பிளாட்டில் டேவிட் மில்லர் என்ற ஆங்கிலேயர் குடியிருந்தார்.

டேவிட் திருமணமாகாதவர். அங்கே உதவி ஹை கொமிஷனராகப் பணி புரிந்தார். நீண்ட நாட்கள் ஒரே ஸ்தாபனத்தில் பணியாற்றியதன் காரணமாக டேவிட் பாஸ்கரின் அத்தியந்த நண்பராகிவிட்டிருந்தார். அருகருகே குடியிருந்தமையால் வார இறுதிகளில் இருவரும் சேர்ந்தே 'கிளப்' பிற்குப் போவார்கள்; சினிமா பார்ப்பார்கள். தங்களது வாழ்க்கையின் அந்தரங்கங்களை ஒருவரோடொருவர் பகிர்ந்து கொள்ளுமளவிற்கு நெருக்கமான நண்பர்களாயிருந்தார்கள்.

"உனது மனைவி விஜயா அகால மரண மடைந்துவிட்டாள்" என குமாரசாமியிடமிருந்து கிடைத்த தொலைபேசிச் செய்தி பாஸ்கரின் இதயத்தில் இடியாக இறங்கியது. சில நிமிடங்கள் ஸ்தம்பித்து கற்சிலையாக அமர்ந்திருந்தார். அவர் கேள்விபுற்ற அரைகுறைச் செய்திகளைக் கொண்டு உண்மையில் என்ன நடந்தது என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

தனது நண்பனான டேவிட்டிடம் சென்று தனது குடும்பத்திற்கு ஏற்பட்ட இழப்புகளைப் பற்றியும், தனது இரு பிள்ளைகள் கொழும்புக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்றும், அடுத்து என்ன செய்வது என்று தெரியவில்லை என்றும் பாஸ்கர் அங்கலாய்த்தார்.

"முதலில் கோட்டை ரயில் நிலையத்திற்குச் சென்று பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வா. அவர்களை உன்னுடன் உனது பிளாட்டில் தங்க வை. கேட்டிலிருக்கும் வாச்மனுக்கு அவர்கள் உன்னுடன் தங்குவார்கள் என்பதைச் சொல்லி வை. அவர்களிடம் நடந்த முழு விபரங்களையும் கேட்டறிந்து அப்புறம் என்ன செய்வது என்பதைத் தீர்மானிப்போம்" என யோசனை கூறினார் டேவிட்.

3

அன்றிரவு.

ஜெயராணியிடமும் ராஜ்குமாரிடமும் அனைத்து விபரங்களையும் கேட்டறிந்த டேவிட் மில்லர், பாஸ்கரைப் பார்த்துச் சொன்னார்:

"இது ஸ்ரீலங்கா இராணுவம் உங்களுக்குப் பிரச்சனை தரக்கூடிய விஷயம். ஊரில் உனது வீட்டில் இரண்டு இராணுவ வீரர்கள் கொலையுண்டு கிடக்கிறார்கள். அவர்கள் ஏன் இப்படி? எது சரி? எது பிழை? என்றெல்லாம் ஆராயப் போவதில்லை, இராணுவத்தினரைக் கொன்ற ஆட்களை வேட்டையாடுவார்கள். அவர்கள் துப்பறிந்து நீ வேலை பார்க்கும் இடத்தைக் கண்டுபிடித்து உன்னை விசாரணை செய்ய அதிக நாட்கள் ஆகாது. உன்னைத் தேடிப் பிடித்து விசாரணை செய்தால் உனது பிள்ளைகளைப் பிடித்து விடலாம் என எண்ணுவார்கள்.

எனவே இதில் தாமதிப்பதற்கு நேரமில்லை. உடனடியாக உனது பிள்ளைகள் இருவரையும் இங்கிலாந்திற்கு அனுப்ப ஏற்பாடு செய். ஜெயராணியிடம் பாஸ்போர்ட் கையசம் இருக்கிறது. ராஜ்குமாருக்கு நாளைக்கே 'அப்பிளிக்கேசன்' போட்டுவிடு; பாஸ்போர்ட் ஆபீஸில் எனக்குத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்; ஒரு நாளிலேயே பெற்றுவிடலாம்; விஸாவை நான் பதிந்து தருகிறேன். நாளைக் காலை 'எம்பஸி பிரையோரிட்டி'யில் 'பிரிட்டிஷ் ஏர்வேய்ஸ்' விமானத்தில் இரண்டு டிக்கெட் புக் செய்து விடு.

இங்கிலாந்தில் கிங்ஸ்ரன் நகரில் கணவனை இழந்த எனது சகோதரி எலிஸபெத் தனியாகத்தான் வசித்து வருகிறார். உனது பிள்ளைகளை அவருடன் சென்று தங்க ஏற்பாடு செய்து தருகிறேன். அவரே விமான நிலையத்திற்கு வந்து உனது பிள்ளைகளை அழைத்துப்போவார்."

அடுத்த இரு நாட்களும் சம்பவங்கள் துரித கதியில் நடைபெற்றன.

அவர்கள் கொழும்பு வந்து சேர்ந்த மூன்றாம் நாட் காலை- ஜெயராணியும், ராஜ்குமாரும் இலண்டன் செல்லும் 'பிரிட்டிஷ் ஏர்வேய்ஸ்' விமானத்தில் அமர்ந்திருந்தார்கள்.

4

பாஸ்கர் தனது பிள்ளைகள் இருவரையும் இலண்டனுக்குப் பயணமேற்றி அனுப்பி ஒரு வாரம் கழித்து அவருக்குச் சாவகச்சேரியிலிருந்து சகலன் குமாரசாமி தொலைபேசி அழைப்புக் கொடுத்திருந்தார்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பாஸ்கரின் பிள்ளைகளைத் தேடி தங்கள் வீட்டிற்கு வந்து விசாரித்ததாகவும், தாங்கள் அவர்களைப் பற்றிய தகவல் ஏதும் தங்களுக்குத் தெரியாது என வற்புறுத்திக் கூறியதாகவும், ஒருவேளை கட்டுவனூர் தீப்பிடித்து எரிந்தபோது அவர்களும் எரிந்து இறந்து போய் விட்டிருக்கலாம் என சந்தேகிப்பதாகவும் சொன்னோம் என்றார். இராணுவத்தினர் பாஸ்கரைப் பற்றியும் அவர் வேலை பார்க்கும் கந்தோர் பற்றிய விபரங்களைக் கேட்டறிந்ததாகவும், பாஸ்கரை விசாரணை செய்வதற்காக கொழும்புக்கு வர இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

பாஸ்கர் இந்த விவரங்களை நண்பர் டேவிட்டிடம் கூறியபோது அவர் சொன்னார்:

"பாஸ்கர், பிரித்தானிய எம்பஸி வளவிற்குள் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வந்து உன்னை விசாரிக்க முடியாது. அதற்கான 'இம்யூனிற்றி' (immunity) உனக்கு இருக்கிறது."

"பிரித்தானிய எம்பஸி வளவிற்குள் வந்து உன்னை விசாரிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் பிரித்தானிய அரசிடம் எழுத்து மூலமாக அனுமதி பெற வேண்டும். அதற்கு அவர்கள் முதலில் வழக்குப் பதிவு செய்து, நீதிபதி உன்னை விசாரிக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அந்த உத்தரவுப் பத்திரங்களை பிரித்தானிய அரசுக்குச் சமர்ப்பித்து அனுமதி பெற விண்ணப்பம் செய்யவேண்டும். இதற்கெல்லாம் பல மாதங்கள் பிடிக்கும்."

"ஆனால், நீ இந்தக் கம்பவுண்டை விட்டு வெளியே போகும் சமயம் அவர்கள் உன்னைக் 'கிட்னாப்' செய்து கொண்டு போக முடியும். இராணுவ ஒட்டுக் குழுக்களால் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு அப்புறம் காணாமல் போனவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய்."

"ஸ்ரீலங்காவிற்கான எங்கள் பிரித்தானிய எம்பஸியின் கிளை ஸ்தாபனம் ஒன்றை சென்ற மாதத்திலிருந்து சென்னையில் ஆரம்பித்திருப்பது உனக்குத் தெரியும். உனக்கு உடனடியாக அங்கே மாற்றல் போட்டுத் தருகிறேன். நீ அங்கே போய்விட்டால் உனக்குத் தகுந்த பாதுகாப்புக் கிடைக்கும். இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து இப்பிரச்சனை அடங்கிய பிறகு வேண்டுமானால் இங்கே திரும்பி வரலாம்"

"மிக்க நன்றி டேவிட்; அப்படியே செய்கிறேன். எனது நன்றியை எப்படித் தெரிவிப்பது என்று தெரியவில்லை"

"கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாக எங்களுக்கு விசுவாசமாக உழைத்திருக்கிறாய். இதைத்தானும் செய்து தரமாட்டோமா?" என்றார் டேவிட்.

5

அழுகையும் விம்மலும் கண்ணீரும் கம்பலையுமாக தனது குடும்பத்திற்கு ஏற்பட்ட அவல நிகழ்வுகளைக் கூறி முடித்தாள் காந்திமதி. கலங்கிய கண்களோடு அவள் கூறிய கதையை நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

"டாக்டர், நான் சொல்லிய இச் சம்பவங்கள் நடைபெற்று இப்போது எட்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன. இன்னும் என்னால் அதன் தாக்கத்திலிருந்து விடுபட்டு வெளியே வர முடியவில்லை.

ஒரு காலத்தில் - ஒரு பறவை கூடு கட்டி தனது குஞ்சுகளைப் பாதுகாப்பது போல எங்கள் அம்மா எனது அண்ணன்மார், அக்கா, தம்பி என்று நம் அனைவரையும் கூட்டி, அன்பை அள்ளி அள்ளிச் சொரிந்து எத்தனை எத்தனை ஆனந்தமாக எங்களையெல்லாம் வளர்த்தெடுத்தார்?

நான் தெய்வத்தைப் பார்த்ததில்லை.

நானறிந்த தெய்வம் - நான் கண்ணால் கண்ட தெய்வம் நேரே நின்று என்னோடு பேசிய தெய்வம் - எனது அம்மாதான்!

எதுவித பிரதிபலனையும் எதிர்பார்க்காது எங்கள் மேல் அளவற்ற அன்பைக் கொட்டித் தந்த தெய்வம் எங்கள் அம்மா!

அந்தத் தெய்வத்தை என் கண்முன்னால் காலால் உதைத்து, சிதைத்து, சீரழித்துக் கொன்ற இந்த இராணுவ அரக்கனை உயிருள்ளவரை என்னால் மறக்கவோ, மன்னிக்கவோ இயலாது."

"மனிதர்களாகப் பிறந்தவர்கள் குடும்பங்களாக வாழ்ந்து, உற்றாருடனும் சுற்றத்தாருடனும் அன்பாகப் பழகி, உலக வாழ்க்கையைப் பயனுள்ளதாகவும் இன்பமாகவும் கழித்து, வயதானபின் நிம்மதியுடனும் மனத்திருப்தியுடனும் இறந்து போக வேண்டும் என்பதே நாம் ஒவ்வொருவரும் எதிர்பார்க்கும் உலக நியதி.

அப்படியானதொரு இன்பமான, நிம்மதியான வாழ்க்கையை வாழ்வதற்கு எனது குடும்பத்தினரையோ, நான் பிறந்த கட்டுவனூர் மக்களையோ இந்த நாட்டின் அரசு அனுமதிக்கவில்லை.

என்னைக் கண்ணின் மணிபோல் காத்து வளர்த்த என்னருமைத் தாயாரை அவரது கர்ப்பிணிக் கோலத்தில் இந்த ஸ்ரீலங்கா இராணுவம் கொன்று போட்டது. ஒரு பாவமும் அறியாத பிஞ்சுக் குழந்தையான என் தம்பியை பரலோகு சேர்த்தது.

விமானத் தளத்தை விஸ்தரிப்பதற்காக எமது வீடுகளை அழித்து, குடும்பங்களைச் சின்னாபின்னமாக்கி சிதறடித்த தினத்தை எப்படி என்னால் மறக்க முடியும்?

இன்று எனக்கு அம்மா இல்லை - அப்பா இல்லை - அண்ணன்கள் இல்லை - அக்கா இல்லை - தம்பி இல்லை. அனைவருமே எனது உலகத்திலிருந்து மறைந்துவிட்டார்கள்.

இன்று நான் ஆதரவற்ற தனிமரமாய் நிற்கிறேன்."

"அம்மாவை நான் இழக்கும்போது எனக்கு வயது எட்டு. இன்று எனக்கு வயது பதினாறு. இந்த எட்டு ஆண்டுகளாக அந்த அரக்கன் அவிழ்த்துவிட்ட அட்டழியத்தை என்னால் ஜீரணிக்க இயலாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்.

எனக்கு இந்த வாழ்க்கையே வெறுத்துப் போச்சு.

விரக்தியின் விளிம்பில் நிற்கும் ஓர் அபலைப் பெண் நான்.

எனது குடும்பத்தைச் சின்னாபின்னப் படுத்திய இராணுவ அரக்கனைப் பழிவாங்கும் இலட்சியத்தோடு நான் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்து விட்டேன்".

அவளது கதையைக் கேட்கப் பரிதாபமாக இருந்தது.

அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது. எதிர்காலத்தையே தொலைத்துவிட்டு நிற்கும் இந்தப் பிஞ்சுப் பெண்ணிற்கு எப்படி ஆறுதல் கூறுவது?

"பிள்ளை காந்திமதி,

நீ என்னோடு கொழும்புக்கு வருகிறாயா? விரைவில் நான் இங்கிலாந்திற்குப் போக இருக்கிறேன். எப்படியும் உன்னை அங்கே அழைத்துக்கொண்டு போய், உனது சகோதரியைக் கண்டுபிடித்து அவரிடம் உன்னைச் சேர்ப்பித்து விடுகிறேன்"

"உங்கள் நல்ல மனசுக்கு நன்றி டாக்டர். ஆனால், அது சுலபமான காரியமல்ல. நான் புலிப்படையில் சேர்ந்திருப்பதற்கான பதிவுகள் பாஸ்போர்ட் கந்தோரில் இருக்கும்; பாஸ்போர்ட் பெறுவதில் பிரச்சனைகள் இருக்கும். மேலும் நான் புலிப்படையில் சேர்ந்து போர்புரிவதற்கான பயிற்சியும் பெற்றிருக்கிறேன். அவர்களின் அனுமதியில்லாமல் இப்படியே உங்களோடு வர இயலாது."

"சரி, உனது தொடர்பு விலாசத்தைத் தானும் தருவாயா?" என்று கேட்டேன்.

"நான் காலத்திற்குக் காலம் வெவ்வேறு முகாம்களில் பணிபுரியப் போய்விடுவேன்; எனவே நிரந்தர விலாசம் என்று ஒன்று இல்லை. முடியுமானால் உங்களைத் தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு விலாசத்தைத் தாருங்கோ. வசதிப்படும் போது நானே தொடர்பு கொள்ளுகிறேன்".

"எனது சித்தி - தாயாரின் தங்கை கமலம், இலண்டனில் விம்பிள்டனில் தனது கணவருடனும் பிள்ளைகளுடனும் வசித்து வருகிறார். அவருடைய விலாசத்தை எழுதித் தருகிறேன். அங்கே அனுப்பினால் நான் பெற்றுக்கொள்வேன். வசதி கிடைக்கும்போது தொடர்பு கொள்"

விலாசத்தை எழுதிக் கொடுத்தேன்.

எனது வாழ்நாளில் இது ஒரு நீண்ட இரவு.

இந்த இரவில் -

இந்த இளம்பெண் காட்டிய அன்பும்-

இவளது அவலமான வாழ்க்கையும் -

என்னை மௌனமாகப் பாதித்துவிட்டிருந்தன.

(தொடரும்)

'தாரைதப்பட்டை' மீண்டும் படப்பிடிப்பு

பரதேசிக்குப் பிறகு நடந்த பாலாவின் 'தாரை தப்பட்டை' படப்பிடிப்பு திடீரென நாயகன் சசிகுமாரின் கை எலும்பு முறிவு காரணமாக நிறுத்தப்பட்டு, இப்போது ஆரம்பமாகியுள்ளது. சரத்குமாரின் மூத்த சம்சாரம் பெற்று எடுத்த வரலட்சுமி நாயகியாக நடிக்கிறார்.

இப்போது ஹைதராபாத்தில் படப்பிடிப்பு நடக்கிறது. பின் கோவாவிலும், கடைசியாக தஞ்சாவூரிலும் படப்பிடிப்பு நடக்கும்.

ரஜினிக்கு நாயகி வித்யா பாலன்!

கலைப்புலி தாணு தயாரிப்பில், ரஞ்சித் இயக்கும் புதிய படத்தில் ரஜினிகாந்துக்கு ஜோடி வித்யாபாலன். முதலில் அவருக்கு ஜோடி இல்லை என்றார்கள். இல்லை, இருக்கு என்பது எல்லாம் ரஜினி விஷயத்தில் மிகச் சாதாரணம். ஏற்கனவே, கோச்சடையான், ராணா படங்களில் வித்யா பாலன் நடிப்பதாக இருந்தது. பின் இல்லை என்றானது. இப்போது புதிய படத்தில் நடிக்கப் போவதாக சொல்கிறார்கள். பார்ப்போமே!

ஜாலியா இருப்பதில் வல்லவர் ஆர்யா!

தான் நடிக்கிற படங்களில் தனக்கு ஜோடியாக நடிக்கிற நடிகைகளுடன் ஜாலியாக இருப்பதில் வல்லவர் நடிகர் ஆர்யா!

நடிகை டாப்சியிடம், 'டார்லிங்! உன் அழகின் ரகசியம் என்ன?' என்று கேட்டார்.

'உனக்கு வேறை வேலையே இல்லையா?' என்று அவர் பதில் அளிக்க, 'சரி எனக்கு வேலை இல்லை. ஆனால், நான் கேட்ட கேள்விக்கு என்ன பதில்?' என்று டாப்சியை கலாய்த்துள்ளார் ஆர்யா.

விஜய் சேதுபதியை வெட்கப்பட வைத்த நயன்!

விஜய் சேதுபதி - நயன்தாரா நடிப்பில் வெளிவர உள்ள படம் 'நானும் ரவுடிதான்'. இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் நடந்து முடிந்துவிட்டது!

'நயன்' எப்போதும் யாரையும் புகழமாட்டார். ஆனால், படப்பிடிப்பில் விஜய் சேதுபதி நடிப்பைப் பார்த்து பலரிடம் புகழ்ந்துள்ளார்.

இதை ஒருநாள் விஜய் சேதுபதியின் காதில்படும்படியாக நயன் கூற, ஒரு நிமிடம் விஜய் சேதுபதி வெட்கத்தில் தலைக்குனிந்துவிட்டாராம்!

நயன் வழியில் சமந்தா!

நயன்தாரா வழியில் சமந்தாவும் தன் முன்னாள் காதலருடன் இணைகிறார்.

நடிகர் சிம்புவை உருகி உருகிக் காதலித்துப் பிரிந்த நடிகை நயன்தாரா, அதற்குப்பின்னர் எந்தத் தொடர்பும் இல்லாமல் பார்த்துக் கொண்டார். பரவாயில்லை, காதல் முறிந்தால் என்ன, காதலர்களாக நடிக்கலாம்தானே என்று நயனைக் கேட்டார் டைரக்டர் பாண்டிராஜ்.

பழைய கதைகளைக் கிண்டிக் கிளறாமல், பணத்தைக் கொடுங்க, நடித்துவிட்டு போகிறேன் என்றார் நயன். சொதப்பல் இல்லாமல் சிம்புவுடன் நடித்தார்.

தற்போது, இதே வழியில் நடிகை சமந்தா, நடிகர் சித்தார்த்துடன் பல வருடங்களாக காதலித்து, முறிந்ததால் மனவருத்தத்தில் இருந்த சமந்தா, 'அரண்மனை -2'வில் மீண்டும் காதலர்களாக நடிக்கிறார்கள் - நிஜ வாழ்வில் பிரிந்தாலும்!

திரிஷாவுக்கு யோகம்!

தயாரிப்பாளர் வருணுடன் திருமணமாகி செட்டிலாகிவிடுவார் எனப் பல நடிகைகள் எதிர்பார்த்த திரிஷா திடீரென கல்யாணத்தை வேண்டாமென்றதால், நல்ல காலம் வரும் என்று எண்ணியவர்களுக்கு பேரிடியாகிவிட்டது என்று தமிழ் படவுலகில் பேச்சாக உள்ளது. இப்படித்தான் நயன்தாராவுக்கு 'காதலித்து, இன்னொருவருடன் குடும்பம் நடத்தி, 'முறிவு' ஏற்பட்டு வயது ஏற ஏற தமிழ் படவுலகில் செல்வாக்கு உயர்கிறதாம்! இதே பாணியைத்தான் பின்பற்றுகிறார்கள் மற்றும் சிலர்.

எஸ்பிபிக்கு 69

தமிழ் சினிமா ரசிகர்களை தனது இதமான குரலால் கடந்த 50 ஆண்டுகளாகக் கட்டிப்போட்டு வைத்துள்ள பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் 69வது பிறந்த தினம் 4.6.2015 அன்று. 1946 ஜூன் 4ம் தேதி ஆந்திராவில் பிறந்தவர். நடிகர், பாடகர், தயாரிப்பாளர் எனப் பலமுகம் இவருக்கு. 1980இல் கர்நாடக இசையை முழுக்க முழுக்க வைத்து எடுக்கப்பட்ட 'சங்கராபரணம்' படத்தில் பாடியதற்காக முதல் தேசிய விருது பெற்றார். 1996 இல் 'மின்சாரக் கனவு' படத்தில் 'தங்கத் தாமரை மகளே' பாடலை பாடியதற்காக தேசிய விருது பெற்றார். எம்.எஸ்.விஸ்வநாதன் முதல் ஜி.வி. பிரகாஷ் வரை அனைவரின் இசையிலும் பாடியிருக்கிறார். இதுவரை 40 ஆயிரம் பாடல்களை சினிமாவில் பாடியிருக்கிறார். இதுவரை இவர் பாடிய நான்கு மொழிகளிலும் தேசிய விருது பெற்று இருக்கிறார். 70 படங்களுக்கு மேல் நடித்திருக்கிறார். 40 படங்களுக்கு இசை அமைத்துள்ளார்.

'ஈழத்துமிழா? உதைக்க வேண்டும்!' 'மாஸ்' பட பிரச்னை

'ஈழத் தமிழ் பேசுகிறவனா? உன்னை உதைக்க வேண்டும்' என்று ஒரு வசனம் 'மாஸ்' படத்தில் வருகிறது. அதைக் கோடிட்டு, 'ஈழத் தமிழையும் ஈழத் தமிழர்களையும் கொச்சைப்படுத்துவதால், இப்படத்துக்கு வரிச் சலுகை கிடையாது, என்று ஒரு அதிகாரி எழுதியிருக்கிறார். பட தணிக்கைக் குழுவில் உள்ள ஐந்து அதிகாரிகளில் ஒருவர் பற்றி சினிமா பாடல் ஆசிரியர் சினேகன் இந்தத் தகவலை வெளியிட்டார். சென்னையில் நடந்த 'சாந்தன்' இசை வெளியீட்டு விழாவில் அவர் பேசும்போது குறிப்பிட்ட இந்த விஷயம் சந்தோஷமாக இருக்கிறது. கங்கை அமரன் மகன் வெங்கட்பிரபு இயக்கி, சூர்யா - நயன் நடித்த படம் மாஸ்.

'ஈழப் போராட்டம் என்னை பாதித்தது!'

திலீபன் படைரக்டர் மனம் திறக்கிறார்

இந்திய அமைதிப் படையிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து தண்ணீர் கூட அருந்தாமல் யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் இருந்து 11வது நாள் போராட்டப் பந்தலில் உயிர் துறந்தார்.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் போக்கை மாற்றிய திலீபனின் வாழ்வையும், மரணத்தையும் விறுவிறுப்பான திரைப்படமாக வடித்தெடுத்திருக்கிறார் இயக்குனர் ஆனந்த மூர்த்தி.

அவரே பேசுகிறார்:

நான் பெங்களூருவில் பிறந்த தமிழன். அங்கே ஓவியம் படித்துவிட்டு, இயக்குநர் கதிரிடம் 'காதல் தேசம்', 'காதலர் தினம்' போன்ற படங்களிலும், இயக்குநர் அமீரிடம் 'ஆதிபகவன்' படத்திலும், இயக்குநர் பாலாவிடம் 'பரதேசி'யிலும் பணிபுரிந்தேன். 'திலீபன்' எனது முதல் படம்.

எனக்கென தனிப் பாதையை வகுத்துக் கொள்ள நினைத்தேன். மதுரை தமிழர்கள், ராமநாதபுரம் தமிழர்கள், கோவை தமிழர்கள் என உலகிலுள்ள அனைத்து வகையான தமிழர்களைப் பற்றியும் படம் எடுக்க நம்மிடம் இயக்குநர்கள் உள்ளனர். ஈழத் தமிழர்களைத் தவிர! அவர்களது விடுதலைப் போராட்டம் என்னை பாதித்தது.

அப்போது திலீபனின் வாழ்க்கை என் மனதில் ஒட்டிக் கொண்டது. நான் சினிமா துறைக்கு வந்து திரைப்படம் எடுக்கலாம் என்ற நிலைக்கு வந்தேன். அப்போது என் மனதிலுள்ள கதைகளை அசைபோட்டேன். ஈழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றி யாரும் படம் எடுக்கவில்லையே. உடனே திலீபன் என் நினைவுக்கு வந்தார். அவரைப்பற்றி ஆய்வு செய்ய ஆரம்பித்தேன். அப்படித்தான் எல்லாம் ஆரம்பித்தது. அவரது தலைமுறையைச் சேர்ந்த பலருக்கு தெரிந்திருக்கும். அவர் எப்படி இறந்தார் என்று தெரிந்திருக்கும். அவர்களை திருப்திப்படுத்தும் வகையில் திரைக்கதை எழுதுவதே எனக்கு சவாலாக இருந்தது.

திரைக்கதை எழுதும்போது மலைப்பாக இருந்தது. அனைத்தும் எளிதாக முடிந்தது. எழுதி முடித்தவுடன் இதுவரை பார்த்திராத ஒரு நாயகனைப் பற்றிய திரைக்கதையாக அது இருந்தது. கண்டிப்பாக இந்தத் திரைப்படம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் என நான் நம்புகிறேன். எழுச்சி பெறும் நாயகன், அவனது இறப்பு என விடுதலைப் புலிகளுக்காகவும், தமிழர்களுக்காகவும் மாண்ட நாயகன் ஒருவனின் கதையாக இது இருக்கும்.

திலீபன் படத்தை உருவாக்குவதற்காக இலங்கை சென்று வந்திருக்கிறேன். பலர் என்னுடன் பேசியிருக்கிறார்கள். சிலர் என்னை அழ வைத்தனர். அப்படி ஒரு பெண்மணி, 1987இல் இறந்த போராளி ஒருவரின் தாயார். திலீபன் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்டதாகச் சொன்னார். நான் ஒரு மாவீரனின் தாய் என்று இறுமாப்புடன் சொன்னார். நீயும் என் மகனைப்போல என்றார். உன் காலைத் தொட்டு கும்பிட வேண்டும் போல இருக்குது என்று அழுதார், நானும் அழுதேன். இன்னும் சிலருடன் பேசினேன். தனி ஈழம் வரும் என்று நம்புகின்றனர். அவர்கள் போராட்டத்தை விட மாட்டார்கள். போராடும் முறை மாறிவிட்டது. ஆனால், நோக்கம் மாறவில்லை.

நடிகர் நந்தாவை நான் 2001-ஆம் ஆண்டு சந்தித்தேன். அப்போது அவரிடம் திலீபனைப் பற்றிய படம் குறித்தும், அதில் நீங்கள் சரியாக பொருந்துவீர்கள் என்றும் கூறினேன். மேலும் தயாரிப்பாளர் கிடைத்தவுடன் அணுகுவதாகவும் சொன்னேன். அவர் நடிப்பதில் ஆர்வமாக இருந்தார். 2006-ஆம் ஆண்டு இயக்குநர் பாலா தயாரிப்பதாக இருந்தது. நந்தாவுக்கு இதனால் அளப்பற்ற மகிழ்ச்சி. ஆனால், அது நடக்காமல் போனது. தொடர்ந்து 2011-ஆம் ஆண்டு வேறொரு தயாரிப்பாளரோடு ஆரம்பித்தது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேடத்தில் நடிக்க ஸ்ரீதர் சுப்பிரமணியன் கிடைத்தது சுவாரசியமான கதை. உண்மை கதாப்பாத்திரங்களைப் போலவே முக ஜாடை உள்ளவர்களை தேடினோம். அப்போது ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் விருந்தினராக வந்திருந்த ஸ்ரீதரைப் பார்த்தபோது, இவர் அந்த வேடத்துக்கு பொருத்தமாக இருப்பார் என்று தோன்றியது.

இந்த படத்தில் நடிக்க பல சிக்கல்களைத் தாண்டி நடிகர்களைத் தேடி, படத்துக்குத் தேவையான பொருட்களையும் தேடிப் பிடித்த என் உதவியாளர்களுக்கு நான் நன்றி கூற விரும்புகிறேன். தாங்கள் பார்த்த அனைவரிடத்திலும் அவர்கள் பேசினார்கள். தேர்வு கடினமாக இருந்தாலும் கடைசியில் நாங்கள் நினைத்தது நடந்தது.

"வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்த ஈழத் தமிழர்களின் வாழ்க்கைக்கு நெருக்கமான ஒன்றை செய்ய வேண்டும் என நினைத்ததால் பலவற்றை இழந்தேன். தமிழனாக பிறந்ததற்கு என் கடமையைச் செய்தேன் என்று நினைப்பேன்!" என்று டைரக்டர் ஆனந்தமூர்த்தி சொன்ன வார்த்தைகள் நெஞ்சைத்தொட்டன. ■

ரோஜா போல்ற படங்களில் நடிக்க ஆசை... ஆசை!

'அம்புலி' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் நாயகியாக அறிமுகமானவர் நடிகை சனம் ஷெட்டி. தொடர்ந்து 'கதம் கதம்' படத்தில் நடித்தவர். இப்போது இரண்டு தமிழ் படங்களில் நடித்து வருகிறார்.

"தமிழில் எனக்கு மணிரத்தினம் இயக்கத்தில் வெளிவந்த 'ரோஜா' படம் போன்ற உணர்வுபூர்வமான படத்தில் நடிக்க ஆசை. அந்தமாதிரி கதைகள் வந்தால் 'மிஸ்' பண்ணமாட்டேன்" என்று தன் ஆசை என்ன என்று சொல்கிறார்.

'சவாரி', 'வெள்ளையாக இருக்கிறவன் பொய் சொல்ல மாட்டான்' போன்ற படங்களில் இப்போது நடித்து வருகிறார் இவர்.

கமல் கையால் மிளிரும் திரிஷா!

எத்தனை பேருக்கு இந்தப் பாக்கியம் கிடைத்ததோ? ஆனால், திரிஷா தனக்கு கிடைத்த 'பாக்கியத்தை' ஊரைக் கூட்டி, உலகைக் கூட்டி தனது இணையத் தளத்தில் அறிவித்துள்ளார் இப்படத்தின் மூலம். கமல்ஹாசன் திரிஷாவுக்கு மேக்கப் போடும் படம்தான் அது. ஒரு தொழில்முறைக் கலைஞர்போல அவ்வளவு அக்கறையாக மேக்கப் போடுகிறார்.

திரிஷா முகத்தில் தெரிந்தது வெறும் சிரிப்பு மட்டுமல்ல, பெருமிதம் கலந்த பூரிப்பு!

கமலின் தூங்காவனம் புதிய படத்தில் நடிக்கிறார் திரிஷா. ஏற்கனவே 'மன்மதன் அம்பு' படத்தில் நடித்திருக்கிறார். மேக்கப் போடுவதில் மட்டுமல்ல, கமல் சகலகலா வல்லவர் என்பது திரிஷாவுக்குத் தெரியாதா என்ன?

ஷங்கர் இயக்கத்தில் இந்தியன் பாகம்2 உருவாகலாம் என்று கிசுகிசுக்கிறது கோடம்பாக்கம் மட்டம்.

கொட்டுது கொட்டுது லட்சுமிக்கு!

கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிச்சுக்கொண்டு கொட்டுது என்பார்களே... அது முழுக்க முழுக்க உண்மையாகியிருக்கிறது லட்சுமி மேனன் விஷயத்தில்!

கிட்டத்தட்ட அரை டஜன் படங்களுக்கு மேல் கைவசம் உள்ளன. எல்லாமே முன்னணி நாயகர்கள், இயக்குனர்கள்!

'பீட்சா' பட இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் இயக்கும் இரண்டாவது படத்திலும் நடிக்கிறார். கதை கேட்பதில் கூட லட்சுமிக்கு அக்கறை இல்லை. இயக்குனர், தயாரிப்பாளரை வைத்து அவர் படங்களை ஓப்புக் கொள்வாராம்!

தாராள மனசு ஸ்ருதிக்கு!

கமல்ஹாசன் பெற்றெடுத்த அருமைப் புதல்வி ஸ்ருதி ஹாசன் பத்திரிகை ஒன்றின் அட்டைப் படத்திற்காக படு கவர்ச்சியாகப் போஸ் கொடுத்துள்ளார். பரவாயில்லை, படங்களில் கவர்ச்சி காட்ட ஸ்ருதி மறுத்ததில்லை. பத்திரிகை அட்டையை விரும்பிய நேரத்தில் வாசகர்கள் பார்த்து ரசிக்கட்டுமே என்ற தாராள மனசு ஸ்ருதிக்கு!

உணவும் மருத்துவமும்

ஹோமியோபதி டாக்டர் ஆர்.தியாகராஜன் பேசுகிறார்

நீங்கள் நாளாந்தம் சாப்பிடுகிற உணவு பற்றிய ஒரு சிறு ஆய்வை ஹோமியோபதி வைத்திய நிபுணர் டாக்டர் ஆர்.தியாகராஜன் இந்த இதழில் உங்களுடன் பகிர்ந்துகொள்கிறார்.

அன்றாட வாழ்வில், குறிப்பிட்ட உணவுகள் நம்மைப் பாதிக்கின்றன என்பதை அவரே விளக்குகிறார்.

"சமீபத்திய இந்திய உணவு ஆராய்ச்சிக் கழகத்தின் முடிவுகளில், நாம் உண்ணும் உணவுகள் பற்றிய குறிப்புகள் அச்சத்தையும், அதிர்ச்சியையும் உண்டாக்குகிறது. நாம் உண்ணும் உணவுகள் நல்லவையா, கெட்டவையா?, சத்தானவையா, சத்தில்லாதவையா? ஆரோக்கியமானதா, ஆரோக்கியமற்றதா? என்ற பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

உணவுப் பொருட்கள் சந்தையில், உலகெங்கும் பல நாடுகளில் பெரும் பங்கினை வகிக்கும் ஒரு பன்னாட்டு வியாபார நிறுவனத்தின் 'நூடில்ஸ்' உணவு, உடல் ஆரோக்கியத்துக்குக் கெடுதல் விளைவிக்கக்கூடிய, ரசாயனப் பொருட்கள் குறிப்பிட்ட அளவுக்கு மேல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அந்த 'நூடில்ஸ்' விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வளவு காலமும் இதனை உண்டவர்களுக்கு, பேதிர்ச்சியை அளித்துள்ளது.

கடந்த 20 ஆண்டுகாலமாக உலகெங்கிலுமுள்ள மக்கள் உண்ணும் உணவில் பெரிய அளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பெருமளவு மக்கள் பாக்கெட்டுகளிலும், போத்தல்களிலும், மற்றும் டின்களிலும் அடைக்கப்பட்ட உணவு வகைகளை (Packed Preserved Food) விரும்பி உட்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

Fast Food என்ற துரித உணவகங்கள் உலகெங்கும் பல்கிப் பெருகிவிட்டன. வேறு வேறு உணவுக் கலாச்சாரங்களும் ஊடுருவிவிட்டன. இதனால், உலகளாவிய உணவு மாற்றம் நம்முடைய ஆரோக்கியத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி, நோயாளிகளாகப் பலரை மாற்றிவிட்டது. சமீபகால மக்களிடையே பெருகிவரும் அலர்ஜி, டயபட்டீஸ், மற்றும் புற்றுநோய் போன்றவை கவனிக்கத்தக்கவை.

சராசரியாக, மனித உடல், மருத்துவத்தேவைகள் இன்றி, நூறு வருடங்களுக்கு மேல் வாழக்கூடிய தகுதியுடன் உருவாக்கப்படுகிறது. நம் முன்னோர்கள் அவ்வாறான நீண்ட நெடுங்காலம், நோய் நொடியின்றி நூறாண்டுகள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். நம் தலைமுறையில் மட்டும் ஏன் இந்தளவு பாரிய அளவிலான நோய்த்தாக்கமும் மருத்துவமும் ஏற்பட்டுள்ளது? கண்டிப்பாகச் சிந்திக்க வேண்டும்!

பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கங்களிலிருந்து நாகரீகமயக்கத்தில் நச்சு உணவுக் கலாச்சாரத்தை நோக்கி பெருவாரியான உலக மக்கள் ஓடிக்கொண்டிருக்கிறபோது, இவை எதையுமே கணக்கு எடுக்காமல், குறிப்பிட்ட சதவீத மக்கள், அதே பாரம்பரிய வாழ்க்கைமுறை, உணவு பழக்கவழக்கத்தில் ஆரோக்கியமாக நோயின்றி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை கவனிக்க வேண்டும்.

நாம் அனைவரும் அறிந்த ஒருவர் இங்கிலாந்து ராணி எலிசபெத் மகாராணியார். 90 வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் அவர் திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறார். அவரது உணவுப் பழக்க வழக்கமே இதற்கு முக்கிய காரணம். மாமிசம், மது அருந்துவது, உணவு பழக்கத்தில் இருந்தாலும், தரமானதும் அளவானதும், பாரம்பரிய பழக்க வழக்கங்களும் ஆரோக்கியத்துக்கு காரணமாகிறது. எந்த நாட்டிற்கு அவர்களோ, குடும்ப உறுப்பினர்களோ விஜயம் செய்தாலும், தண்ணீர் முதற்கொண்டு சமையற்காரர்வரை உணவு சம்பந்தப்பட்ட சகல விஷயங்களையும் தம்மோடு கொண்டு செல்வதை வழக்கமாக வைத்துக்கொண்டுள்ளனர். இதுவே 70 சதவீதமான ஆரோக்கியத்தின் அடிப்படை. இதேபோன்று உலகமெங்கும் மிகுந்த ஆரோக்கியத்துடன் 80 வயதைத் தாண்டி எந்தவித மருத்துவ சிகிச்சையுமின்றி பலர் வாழ்ந்து வருகிறார்கள். இதற்கு சிறந்த உணவுப் பழக்கமும் ஒரு முக்கிய காரணம்.

சாதாரணமாக, லண்டனிலுள்ள ஒரு சூப்பர் மார்க்கெட்டுக்கு போய் பார்த்தால், பெருவாரியான அரிசி, பருப்பு, உணவுப் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதைப் பார்க்கலாம். சிறந்த ஹோட்டல் சத்துக்கள் இருப்பதே இதற்குக் காரணம். கடந்த ஐந்தாண்டுகளில் மேலைத் தேச மக்கள் இந்த அரிசி வகைகளை உண்ண ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஆனால் -

நம்மவர்களோ 'இக்கரைக்கு அக்கரை பச்சை' என்பதுபோல, மேலை நாட்டு உணவுகளில் மிகுந்த மோகம் கொண்டுள்ளோம்.

பிரித்தானியர்களும், ஐரோப்பா தேசத்தவர்களும், இந்தியா - இலங்கை போன்ற நாடுகளின் மீது ஆக்கிரமிப்பு கொண்டதன் முக்கிய காரணம் அங்கு விளையும் சிறந்த மருத்துவ குணமிக்க பொருட்களைக் கொண்டு வருவதற்கே என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

நாம் எமது வீட்டிலும், வெளியிலும் ரசாயனங்கள் கலக்கப்பட்ட துரித உணவு வகைகளையும், பாக்கெட் உணவு வகைகளையும் பெருவாரியாக உட்கொண்டு, நோய்க்கு இலக்காகின்றோம். இலங்கை, இந்திய மக்கள் இதனால் டயபட்டிக்ஸ், அலர்ஜி, புற்றுநோய் போன்ற நோய்களுக்குள்ளாகிறோம். உணவுகளில் கலக்கப்பட்டுள்ள ரசாயனப் பொருட்கள் நம் உடலில் புகுந்து பெரியளவிலான ரசாயன மாற்றங்களை உண்டாக்கி, உள்நாட்டுப்போர் போன்ற சூழ்நிலையை உருவாக்கிவிடுகிறது. இதன் பின்விளைவுகளே தற்காலத்தில் குழந்தை முதல் முதியோர் வரை Auto Immune Disorder என்று அழைக்கப்படும் அலர்ஜி தோல் வருத்தங்கள், Dry Skin, ஆஸ்த்துமா, பெண்களுக்கு உண்டாகும் மாதவிடாய் பிரச்சினைகள், சினைப்பை நீர் கட்டிகள் (Pc OD), குடல் அலர்ஜி, Irradable Bowel syn Drome (IBS), டயபட்டிக்ஸ், மூட்டு வருத்தங்கள், புற்றுநோய் கட்டிகள் போன்றவற்றுக்கு முக்கிய காரணமாக அமைகின்றன.

மேற்கூறிய காரணங்களை மிகுந்த கவனத்தில்கொண்டே கடந்த 10 வருடங்களாகவே, நாம் சிகிச்சை அளிக்கும் அனைத்து நோயாளிகளிடமும் வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவுகளை உட்கொள்ளும்படி வலியுறுத்திக் கூறிவருகிறோம். நாமே நமது உணவைத் தயாரிக்கும்போது, அதில் சேர்க்கப்படும் பொருட்களின் தன்மை தெளிவாகத் தெரியும். வெளியே தயாரிக்கப்படும் உணவு வகையில் சுவைக்கே பிரதான இடம் அளிக்கப்படுகிறது. ஆரோக்கியம் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

ஹோமியோபதி மருத்துவம், மேலே குறிப்பிட்ட ரசாயனப் பொருட்களினால் ஏற்படும் அனைத்துவிதமான நோய்களுக்கும் மிகச் சிறந்த தீர்வுகளைக் கொடுக்கக்கூடியது. இந்த மருந்துகளால் எந்தவித பக்க விளைவுகளும் ஏற்படுவதில்லை.

நம் வீட்டில் சமைத்த உணவு போன்றது, ஹோமியோபதி. 200 வருடங்கள் பாரம்பரியமிக்க, கெடுதல் அற்றது. சரியான உணவு முறையைத் தேர்ந்தெடுத்து, ஹோமியோபதி சிகிச்சை முறை எல்லாவித நோய்களிலிருந்தும் மீண்டு வரமுடியும்.

டாக்டர் ஆர்.தியாகராஜனின் இலவச ஆலோசனை களுக்கு: 020 8744 1553

ஆஸ்துமா



ஹோமியோபதி மருத்துவம்

+

உங்கள் ஒத்துழைப்பு

100% தீர்வு

ஆஸ்துமா நோயாளிகள் ஏற்கனவே உட்கொள்ளும் ஆங்கில மருந்துகளுடன் ஹோமியோபதி மருந்துகளையும் உட்கொண்டால் கண்பாதிப்பு, தோல் மற்றும் பிறப்பு உறுப்பு அரிப்பு, நரம்புகள் பாதிப்பு, ஆண்மை குறைபாடு, கிட்னி பாதிப்பு போன்றவைகளை தவிர்க்கலாம்.

உயர்தர மருத்துவம் ▪ பாதுகாப்பான மருந்துகள் ▪ விரைவான சேவை

சிறப்பு சிகிச்சைகள்

- உயர் இரத்த அழுத்தம் (B.P/HyperTension)
- கொலஸ்ட்ரால் (Cholesterol)
- சிறுநீரக கோளாறுகள் (Kidney Diseases)
- மூட்டு வலி (Arthritis)
- தோல் வியாதிகள் (Skin Diseases)
- ஹார்மோன் பிரச்சனைகள் (Hormone Disorders)
- மாதவிடாய் கோளாறுகள் (Menses Disorders)
- செக்ஸ் பிரச்சனைகள் (Sex Disorders)
- குழந்தையின்மை (Infertility)
- டயாபட்டிஸ் (Diabetes)

இலவச மருத்துவ ஆலோசனைக்கு

0208 144 1553

HOMOEO CARE

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

போன்: 0208 144 1553

வெப்சைட்: www.homoeocare.com

இமெயில்: homoeocare@rediffmail.com

CROYDON இல் நம்மவர் தங்க நகைமாளிகை

JK gold House & Fashion House

26.07.2015 புதிய நகைச்சீட்டு ஆரம்பம்

- புத்தம் புதிய டிசைன்களில் தங்க நகைகள்
- கண்கவர் ஆடைகள்
- அலங்காரப் பொருட்கள்
- நகை அடகு பிடித்தல்
- பணமாற்றுச் சேவை

எதிர்வரும் JULY 26 முதல் புதிய அதிர்ஷ்ட லாப நகைச்சீட்டு இழுப்பு ஆரம்மாகிறது. உங்கள் பெயர்களை 15.07.2015க்கு முன் பதிவு செய்து நீங்களும் ஒரு அதிர்ஷ்டசாலி ஆகிக் கொள்ளுங்கள்

JK gold House & Fashion House
314-316 London Road, Croydon CR0 2TJ
Tel : 020 86844577
(Best Food Super Market முன்பாக)

தமிழ் மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி

BARRISTER S. J. JOSEPH

LLB(Ceylon) LLB Hons(Lond) MA (Business Law)
Bar-at-Law (Middle Temple)

பாரிஸ்டர் செ.யோ.யோசேப்

சொலிசிற்றர் இல்லாமலே நேரடியாக உங்கள் வழக்குகளை ஆராய்ந்து நீதிமன்றத்தில் ஆஜராகஉரிமை பெற்றுள்ளார்.

வழக்கை ஆராய்தல், நீதிமன்றத்தில் வாதாடல் ஆகிய இரண்டையும் ஒருவரே செய்வதால் உங்கள் வழக்குச் செலவு குறைவாகும்

AREAS OF PRACTICE

- Immigration and HR Law
- Public Law [Judicial Review]
- Employment Law
- Commercial Law
- Criminal Law
- Family Law
- Landlord and Tenant Law
- Equity and Trust Law
- Company & Partnership Law
- International Trade Law

பயிற்சி பெற்ற சட்டங்கள்

- குடிவரவு சட்டம்
- மனித உரிமைகள் சட்டம்
- பொதுச் சட்டம்
- தொழில் சட்டம்
- வர்த்தகச் சட்டம்
- குற்றவியல் சட்டம்
- குடும்பச் சட்டம்
- வாடகைச் சட்டம்
- நம்பிக்கைச் சட்டம்
- கம்பனி பங்காளர் சட்டம்

BARRISTERS' CHAMBERS OF SEL-JOB JOSEPH
39, Hermitage Road, London N4 1LU
Tel: 0208 809 3083
Mobile 07831 594270

TIME TRAVEL

Call us now for the best rates to

SRI LANKA, MALDIVES, DUBAI, MALAYSIA, INDIA & MANY MORE..

COCHIN	£405
MADRAS	£415
BANGALORE	£427
KUALA LUMPUR	£435
COLOMBO	£455

الطيران العماني
OMAN AIR

FREE £20
MARKS & SPENCER GIFTCARD*

Terms & conditions apply. Subject to availability.
** Customer must book the flight and atleast one night stay at hotel to get £20 Marks and Spencer gift voucher.*

IATA

Visit us or call us at

020 3475 3560
www.timetraveluk.com

RAYNERS LANE
432 Alexander avenue
Harrow, Middlesex
HA2 9TW

KINGSBURY
530A Kingsbury road
London
NW9 9HE

ஸ்ரீ கோபிநாத்

பதில்

அது வேறு உலகம்!

நம்மைவிட வயது முதிர்ந்த எத்தனை சாதாரண மனிதர்களிடம் நமக்கு நட்பு இருக்கிறது? பெரியவர்களோடு நட்பு பாராட்டுவது கஷ்டமாகத் தெரியலாம். ஓர் உலகத்தைப் புரிந்து கொள்வதற்கான முயற்சி சில கஷ்டங்களோடு நடந்தாலென்ன?

அப்படி நட்புப் பாராட்டி ஆகப்போவது என்ன? நிறைய ஆகும்! நீங்கள் யோசித்திராத பல பரிமாணங்கள் அது சொல்லித் தரும். நெருக்கடி நிலைமைகளை நிர்வாகம் செய்து கொள்கிற அறிவைத் தரும். சமூக விழுமியங்களின் உண்மைகளைச் சொல்லும். இதைக் கற்றுத் தருகிற அந்த வயதில் முதிர்ந்த மனிதர் மாபெரும் ஞானியாகவோ, உலகறிந்த ஒருவராகவோதான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை!

கணினிக்குள் தலையை நுழைத்துக் கொண்டு உலகத்தைத் தேடுகின்ற நாம், பெரியவர்களின் நட்பிலும், அதைத் தேடலாம். அது வேறு ஓர் அனுபவம்! வாழ்க்கைப் பாடம்... சோர்ந்து போகின்ற மனசுக்கு ரத்தம் பாய்ச்சுகின்ற பாடம்.

பெரியவர்கள் பெரியவர்களோடும், இளைஞர்கள் சக வயதினரோடும் மட்டும் சேர்ந்து பயணித்தால் அறிவுப் பரிமாற்றம் எப்படி நடக்கும்?

'There must be a expiry date for blaming elders' என்று என் நண்பர் ஒருவர் அடிக்கடி என்னிடம் சொல்வார். அவர்களின் உலகத்தைப் புரிந்து கொள்வதற்குச் செலவிட முயற்சிக்கலாம். அது இன்னும் பல வாயில்களைத் திறக்கும்.

ஒரு ஞானி கடவுளிடம் வேண்டிக் கொண்டாராம்: "இறைவா என்னால் எந்தெந்த விஷயங்களை மாற்ற முடியுமோ அதனைச் செய்வதற்கு உரிய துணிச்சலைக் கொடு. என்னால் எதை எல்லாம் மாற்ற முடியாதோ அவற்றை ஏற்றுக்கொள்கிற பக்குவத்தைக் கொடு!" - உண்மையில் இதுதான் நிதர்சனம்.

உங்கள் கட்டுப்பாட்டில், உங்கள் ஆளுகைக்குள் இல்லாத விஷயங்களை உடனடியாக மாற்றிவிட வேண்டும் என்று கனம் இறங்காதீர்கள். அது அர்த்தமற்ற முயற்சி!

நம் சக்திக்கு உட்பட்ட விஷயங்களில் முதலில் மாற்றங்களைக் கொண்டுவர முயற்சிப்போம்! பிறகு அடுத்த நிலைக்கு பயணப்படுகிற சூழல் தானாகவே கைகூடும்!

ஒன்று மட்டும் நினைவிருக்கட்டும் - உங்களுக்குத் தக்கபடி இந்த உலகம் ஒரு நாளும் மாறப்போவதில்லை!

வாழ்க்கைக் காதல்!

காதலுக்காக வாழ்வது, காதலிலே வாழ்வது, காதலாக வாழ்வது என நிறையக் காதல்கள் உண்டு. எதிர்காலத்தைத் திட்டம் போடுகிற காதல், வேலைக்கு ஆள் எடுக்கிற மாதிரி அளந்து, யோசித்து நடக்கிற காதல், 'அப்பா அம்மா தொந்தரவு இல்லை' என்று முடிவு எடுக்கிற காதல் எனப் பல காதல்கள் உண்டு. ஆனாலும் அதிக வெளிப்பாடுகள் இல்லாவிட்டாலும், உன்னை எவ்வளவு பிடிக்கும் தெரியுமா என்றெல்லாம் சொல்லாவிட்டாலும் ஆழமாக வேரூன்றுகின்ற வாழ்க்கைக் காதல் ரொம்பவும் அழகானது.

'சிகரம் தொட்ட மனிதர்கள்' நிகழ்ச்சிக்காக நடிகர் சிவகுமாரிடம் பேசியபோது, ஒரு நெகிழ்வான விஷயம் சொன்னார்: "15 வருட உழைப்பு. தட்டிங், தட்டிங் என்று ஓடி ஓடி உழைத்துத் திரும்பிப் பார்க்கிறபோது, என் பிள்ளைகள் வளர்ந்து இருந்தார்கள். படித்துக் கொண்டிருந்தார்கள். நான் எனது வேலையில் திளைத்திருந்தேன். என்னை என் ஆசைகளின் பின்னாலும், கலை ஆர்வத்தின் பின்னாலும் சுதந்திரமாக செல்லும் வழிதந்துவிட்டு, தனி மனுஷியாக என் பிள்ளைகளை வளர்த்து, குடும்பத்தை நிர்வகித்து, என்னையும் கவனித்துக்கொண்டு எனக்காகவே வாழ்கிறாள் என் மனைவி என்று புரிந்தபோது, கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை!"

ரசிப்பதற்கு ஒருத்தி
இருக்கிறாள் என்பதைவிட
வேறென்ன வேண்டும்
வாழ்க்கையை ரசிக்க!

அதிர்ஷ்டத்தைத் தேடிச் செல்ல வேண்டும்

தெரியாத இடத்துக்குச் செல்லும் போது வழி கேட்பதற்கே கூச்சம் உண்டு நமக்கு. கடைசியில் போக வேண்டிய இடத்துக்கு எதிர்த் திசையில் சில மைல்கள் சென்ற பிறகு யோசிப்போம்... யாரிடமாவது கேட்டிருக்கலாமென்று!

இது போட்டிகள் நிறைந்த உலகம். நாம் எதைத் தேடுகிறோமோ அதற்கான முழுத் தகுதியையும் அமைத்துக்கொண்டால் மட்டும் போதாது. வாய்ப்புகளைக் கேட்டுப் பெறுகின்ற ஆற்றலையும், மனம் தளராத மனோபாவத்தையும் வளர்த்துக்கொண்டுதான் ஆக வேண்டும்!

செல்வாக்குள்ள ஒருவரைப் பிடித்து, அப்பா வேலை வாங்கித் தருகிற காலம் எல்லாம் முடிந்துவிட்டது! நமக்குத் தேவையானதை தேடிப் பெறுகின்ற காலம் இது. வாய்ப்புக்கள் கொட்டிக்கிடக்கிற காலம்.

அதிர்ஷ்டம் நம்மைத் தேடி வராது. நாம்தான் அதிர்ஷ்டத்தைத் தேடிச் செல்ல வேண்டும்.

ஆங்கிலக் கவிதை ஒன்று. யார் எழுதியது என்று தெரியவில்லை.

'நான் சிறுவனாக இருந்தபோது
இந்த உலகை மாற்ற
ஆசைப்பட்டேன்
நடக்கவில்லை.
இளைஞன் ஆனபோது,
ஊரைத் திருத்த முனைந்தேன்.
முடியவில்லை.
குடும்பத் தலைவன் ஆனபோது
மனைவியையாவது
திருத்த விழைந்தேன்.
இயலவில்லை.
தந்தை ஆனபோது
பிள்ளைகளையாவது
மாற்றிவேண்டும்
என்று துடித்தேன்.
அவர்கள் என் பேச்சைக்
கேட்கவில்லை.
மரணப் படுக்கையில்தான்
எனக்கு ஒன்று புரிந்தது.
இவ்வளவு முயற்சிகள்
செய்ததற்குப் பதிலாக
நான் கொஞ்சம்
மாறியிருக்கலாம் என்று.
ஆனால் நேரம் கடந்துவிட்டது!

உங்களுக்குத் தக்கபடி உலகம் மாறப்போவதில்லை!

- இந்தக் கவிதை ஒரு மனிதனின் இயலாமையைச் சொல்வதுபோல இருந்தாலும், இந்த உலகில் சில விஷயங்களை மாற்றி அமைப்பது நம் சக்திக்கு உட்பட்டதாக இல்லை என்ற உண்மையை உணர்த்துகிறது!

சமூக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற அக்கறையில், நாம் எடுக்கிற முயற்சிகள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்ற மனோபாவம்தான் பிரச்சனை!

ஸ்ரீமதி யோகா தில்லைநாதனின் கானக்குயில்-2015

வெற்றி பெற்றோர்

22வது ஆண்டாக 27.6.2015 சனி லண்டன் கிறீன்போர்ட் நகர மண்டபத்தில் நடந்த யோகா தில்லைநாதனின் 'கானக்குயில் - 2015' இசை நிகழ்வில் ரசிகர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கானக்குயில்கள் முடிவுகள்:

பால கானக்குயில்
1. மதுலானி பெர்னாண்டோ
2. றொசான் மோகனகுமாரன்
3. அபேஜா பிரேம்குமார்

இளைய கானக்குயில்
1. சுதர்ஷினி ஜெயதாஸ்
2. சாலினி தர்மேந்திரன்
3. சௌமியா நிர்மலகுமாரன்

கானக்குயில் - ஆண்கள்
1. கபிலன் செல்வமுருகானந்தன்
2. கிருஷ்ணன் கிருபாகரன்
3. ஜெரிசன் ஜெகதீஸ்வரன்

கானக்குயில் - பெண்கள்
1. கருண்யா சண்முகதாஸ்
2. தமிழினி மேனன்
3. ஷக்யா பானு தாவூட்

(மாலைப் பொழுதில் சில மணி நேரங்கள் உள்ளங்களை மயக்கிய நம்மவர் இசை நிகழ்ச்சியை பற்றிய ஆக்கம் அடுத்த இதழில் வெளிவரும்.)

என்ன உலகமடா?

Doctor ஸ்ரீதரன்

குலம்

அன்று ஞாயிற்றுக்கிழமை. நேரம் மாலை ஏழு மணி. நானும் எனது நண்பனும் வீட்டிற்கு அருகேயுள்ள ஓட்டல் ஒன்றில் உல்லாசமாக மது அருந்திக் கொண்டிருக்கிறோம்.

சாதாரணமாக இருக்கும் போது - புட்டு தின்ற பூனை போல திரு திரு என முழித்துக் கொண்டு - எதுவுமே பேசாமலிருக்கும் எனது நண்பனுக்கு சிறிது மது உள்ளே போனால் போதும் - உலகில் இல்லாத சந்தேகங்கள் எல்லாம் வந்து விடும் அவனுக்கு. கிளாசைக் கையில் வைத்து உருட்டியவாறே கேட்கிறான்.

ஒரு சில விடயங்களுக்கு ஒரு சமூகம் கொடுக்கும் அர்த்தமற்ற - முட்டாள்தனமான முக்கியத்துவங்களே அந்த சமூகத்தின் அன்றாட நடைமுறைகளை வழிநடாத்துகின்றன என்று நீ அடிக்கடி கூறுவதைக் கேட்டிருக்கிறேன். அதை சற்று தெளிவாக கூறு பார்க்கலாம்.

எனது கிளாசை வெறுமையாக்கி விட்டு நண்பனுக்கு கூறினேன்:

நம்மவர்கள் தாய் நாட்டில் இருந்த போது அவர்களின் முன்னேற்றத்திற்காக உதவியாக இருந்த ஒரே ஒரு விடயம் - உத்தியோகம் தரும் கல்வி. இயற்கை வளங்கள் எதுவுமில்லாத ஒரு தழலில் - அடக்கப்பட்ட ஒரு சிறுபான்மை இனத்திற்கு வாழ வழி வகுப்பது உத்தியோகம் தரும் கல்வி மட்டுமே.

திறமையான படிப்பு - சிறந்த உத்தியோகம் - அதிக பணம்- வேண்டிய வாழ்க்கை வசதிகள் - சமுதாய அங்கீகாரம் - இதுவே நம்மவரின் தாரக மந்திரமாக இருந்தது.

ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் - ஒரு குறிப்பிட்ட தூழலில் இதை தவிர வேறு வழியில்லை நம்மவர்களுக்கு.

ஆனால், காலம் மாறி - நாடு மாறி - தூழலும் மாறிய பின்பும் நம்மவர்கள் பலரின் தாரக மந்திரம் மட்டும் மாறவில்லை. அவர்களின் பிள்ளைகளின் மன அமைப்பு - விருப்பு வெறுப்புகள் - எதுவாக இருந்தாலும் சரி - அவர்கள் கூறுவது - படி - படி - படி - இரவும் படி - பகலும் படி - பாடசாலையில் படி - டியூஷனில் படி - வீட்டில் படி - அவனது சோதனை முடிவு இது - இவனது சோதனை முடிவு அது - இவனையும் அவனையும் விட உன்னுடைய சோதனை முடிவுகள் சிறந்ததாக அமைய வேண்டும்.

இப்படி நம்மவர்கள் தமது பிள்ளைகளை விடிந்ததிலிருந்து இரவு வரை ஒரு பந்தயக் குதிரையைப் போல விரட்டுவது கல்வியில் உள்ள மதிப்பினால் அல்ல - கல்வியில் உண்மையான மதிப்பு வைத்திருப்பவர்கள் இப்படி நடந்துக் கொள்ள மாட்டார்கள். பணத்தின் மீதுள்ள ஆசையினாலும் அல்ல - பணம் தான் வேண்டுமெனில் நியாயமான - நீதியான வழியில் பணம் சம்பாதிப்பதற்கு இந்த நாட்டில் ஏராளமான வழிகள் உண்டு.

அப்புறம் எதற்காகத்தான் இந்த அநியாயத்தை செய்கிறார்கள். அதற்குக் காரணம் தான் நீ கேட்டதற்கு பதில்!

கிணற்றுத் தவளைகள்

ஓவியக் கலைஞன் சங்கரின் ஓவியத் திறமையில் தன் மனதைப் பறிகொடுத்து அவனை காதல் திருமணம் செய்து கொண்டவள் டாக்டர் கோகிலா. திருமணம் முடிந்து இப்போழுது நான்கு வருடங்களாகின்றன. தம்பதிகளின் வாழ்வில் ஆசை முடிந்து - மோகம் கலைந்து - இப்பொழுது யதார்த்தம் தெரிய ஆரம்பிக்கிறது.

கலைஞனுக்கு அவனது வீடு - ஓவியம் - இவை இரண்டையும் தவிர இந்த உலகில் வேறு எதுவுமே தெரியாது.

நாலு பேர் கூடும் இடத்தில் தனது கணவன் எதுவுமே பேசாமல் அமர்ந்திருப்பது கோகிலாவுக்கு ஒரு மிகச் சிக்கலான பிரச்சனை - நீண்ட காலக் கவலை. நேற்றுக்கூட அவர்களிடையே இதுபற்றி ஒரு பெரிய வாக்குவாதம். கோகிலா உரத்த குரலில் அதட்டுகிறாள்:

வீட்டிற்குள் உட்கார்ந்து ஓவியத்தை மட்டும் வரைந்து கொண்டிருப்பது மட்டும் வாழ்க்கை இல்லை. ஊரில் - உலகத்தில் என்ன நடக்கிறது என்று தெரிய வேண்டும். நீங்கள் ஒரு பத்திரிகை படிப்பதில்லை - டி.வி. செய்திகள் கேட்பதில்லை. நேற்று இலண்டனில் நடந்த மிகப் பெரிய ரயில் விபத்தில் எத்தனை பேர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? ஒரு சராசரி மனிதனை விட கேவலமாக வாழும் ஒரு சரியான கிணற்றுத் தவளை நீங்கள்.

சங்கர் ஒரு அமைதியான - ஆழமான நீரோட்டம். மனைவியின் கூச்சலுக்கு அமைதியாக - நிதானமாக - கலைஞனின் பதில்:

கோகிலா! இங்கு நான் மட்டுமா கிணற்றுத் தவளை? நாம் பார்ப்பவர்கள் எல்லாருமே கிணற்றுத் தவளைகள் தானே! அவர்கள் வாழும் கிணற்றின் சுற்றளவு மட்டும் தான் மாறுபடுகிறதே தவிர கிணற்றுக்கு வெளியே என்று இங்கு யாருமே இல்லை. எல்லாம் தெரிந்தவன் என்று இந்த உலகில் யார் தான் இருக்கிறார்கள்? எல்லாம் தெரியும் என்று சொல்பவர்களுக்கு எவ்வளவு தெரியும்? எல்லாவற்றிற்கும் மேலாக எதற்காக எல்லாம் தெரிய வேண்டும்?

அதனால் எனக்கு என்ன லாபம்? காலையிலிருந்து மாலை வரை - பிறந்ததிலிருந்து இறக்கும் வரை - எதற்குமே உதவாத - அர்த்தமற்ற - வீணான விடயங்களை - எதற்கென்று தெரியாமல் - ஏதோ ஒரு காரணத்திற்காக சேகரித்துக் கொண்டே இருக்கிறார்கள் சில பயித்தியங்கள்.

புகையிரதம் என்று ஒன்று ஓடினால் விபத்து என்று ஒன்று நடக்கும் - விபத்து நடந்தால் மனிதர்கள் இறப்பார்கள். ஐயோ! அங்கே அது நடந்து விட்டது! ஐயையோ! இங்கே இது நடந்து விட்டது! அதில் அவ்வளவு பேர்கள் இறந்தார்கள்! இதில் இவ்வளவு பேர்கள் இறந்தார்கள்! பத்திரிகை விற்பதற்காக அவன் இதை எல்லாம் எழுதுகிறான். பணம் கொடுத்து வாங்கி இதைப் படித்து நீ கண்ட லாபம் என்ன? எத்தனையோ வருடங்களாக இப்படிப்பட்ட குப்பைகளையே அவன் எழுதுகிறான். இந்தக் குப்பை ஒரு போதும் மாறியதில்லை. திகதி மட்டுமே மாறுகிறது. சராசரி மனிதர்கள் இந்தக் குப்பைகளைப் படித்து விட்டு தாங்கள் கிணற்றுக்கு வெளியே இருப்பதாகப் பிதற்றித் திரிகிறார்கள்.

நான் இருக்கும் கிணறு எனக்குத் தீராத மகிழ்ச்சியைத் தருகிறது. நான் இதை விட்டு வெளியே வர விரும்பவில்லை . எனக்கு தேவையான விடயங்கள் - நான் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் - நிச்சயமாக என்னைத் தேடி வரும் - வரட்டும். கிணற்றை விட்டு உண்மையில் நான் வெளியேறினால் - என்னால் வெளியேற முடியுமானால் அன்று எனது பெயர் : புத்தன் !

கணவன்

பேராசிரியர் ரகுராமனின் அறிவாற்றலையும் அவர் புரிந்த சாதனைகளையும் பாராட்டி - அவர் பணிபுரியும் பல்கலைக்கழகம் இன்று அவருக்கு அதி உயரிய விருது ஒன்றை அளித்து அவரைக் கௌரவித்திருக்கிறது. விரல் விட்டு எண்ணக் கூடியவர்களாலேயே பெறக் கூடிய அந்த அரிய - உயரிய விருது கிடைத்த பெருமையிலும் - அளப்பிலா மகிழ்ச்சியிலும் - மிகப் பலமாகப் பாடிக்கொண்டே வீட்டினுள் நுழைந்த பேராசிரியரை வழமையான மங்கல உரையுடன் வரவேற்கிறாள் அவரது மனைவி கமலா:

ஊரையும் உலகையும் ஏமாற்றும் உங்கள் அறிவாற்றலின் வள்ளலும் வண்டவாளங்களும் எனக்கு மட்டும் தான் தெரியும். ஒழுங்காக வீட்டில் ஒரு காரியம் பார்க்கத் தெரியாது. இந்த லட்சணத்தில் உங்களுக்கு ஒரு பேராசிரியர் பட்டம் வேறு! உங்களிடம் படிப்பவர்கள் எல்லாம் எப்படி வாழ்க்கையில் உருப்படப் போகிறார்கள் என்று நானும் தான் பார்க்கப் போகிறேன். தயவு செய்து இன்று பல்கலைக்கழகத்தில் நடந்தவற்றை எல்லாம் கூறி எனது பிராணனை வாங்காமல் சீக்கிரமாக கடைக்குச் சென்று இரவுச் சமையலுக்குத் தேவையான பின்வரும் மளிகைச் சாமான்களை வாங்கி வரவும்.

பேராசிரியருக்கு இது போன்ற மங்கல வரவேற்புரை ஒன்றும் புதிதல்ல. ஆனால், இன்று - அதுவும் இப்படியான உயரிய விருது பெற்ற இன்று கூட இப்படிப்பட்ட ஒரு வரவேற்பை அவர் நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை. வந்த கோபத்தில் அவரும் பதிலுக்கு மங்கலம் பாடுகிறார்.

மளிகைச் சாமான்கள் - சமையல் - சாப்பாடு - தூக்கம் - இவற்றைத் தவிர - மூளை - அறிவு - சிந்தனை - இப்படிப்பட்ட சொற்கள் தமிழில் இருப்பது உனக்குத் தெரியுமா? இந்த ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் என்னிடம் புத்தி கேட்கிறார்கள் - உன்னைத் தவிர! உன்னால் கேட்க முடியாத காரணம் உனது தலைக்குள் மூளைக்குப் பதிலாக சோறு தான் இருக்கிறது.

சிறு தூறல் மழையாகி - பெரு மழையாகி - இடி - மின்னல் - முழக்கத்துடன் - தொடர்கிறது. ஏன் இப்படி இவர்கள் நடந்து கொள்கிறார்கள்? எதற்காக ஒரு பேராசிரியரின் அறிவாற்றலை அவரது மனைவி மதிக்கவில்லை? எதற்காக ஒரு பேராசிரியர் இவ்வளவு அல்பமாக நடந்து கொள்கிறார்?

ஒவ்வொரு ஆணும் - ஒவ்வொரு பெண்ணும் - எத்தனை எத்தனையோ பரிமாணங்கள் கலந்த ஒரு முழுமை. பிறப்பிலிருந்து இறப்பு வரை சுற்றிச் சுழலும் இந்தப் பரிமாணங்கள் கணவன் - மனைவி என்ற பெயரில் ஒன்றை ஒன்று எதிர்கொள்ளும் போது அங்கு பிரசன்னமாவது அவரவரின் கீழ்த்தரமான சிந்தனைகள் - கஞ்சல் தனமான செய்கைகள் - உறண்டல் குணங்கள் - பலவீனங்கள் - ஒழுக்கக்கேடுகள் - மிருகத்தனமான நடத்தைகள் - அல்பத்தனங்கள். கணவனின் இந்தப் பரிமாணங்களை ஒருமுறை தரிசித்த மனைவியின் கண்களுக்கு அவனின் மற்றைய பரிமாணங்கள் வேஷங்களாக தெரிகின்றன. மனைவியின் இந்தப் பரிமாணங்களை ஒருமுறை தரிசித்த கணவனின் கண்களுக்கு அவளின் மற்றைய பரிமாணங்கள் போலிகளாக தெரிகின்றன.

பல பல பரிமாணங்களில் பரிமாணமிக்க வேண்டியவர்கள் ஒரே ஒரு பரிமாணத்திற்குள் செக்கு மாடுகளாகிறார்கள்.

முத்துவிழாக் காணும் மறத்தமிழன்

ஐ.தி.சம்பந்தன்

முத்துவிழாக் காணும் நாயகன் சம்பந்தனுடன் எனக்கு ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் அறிமுகம் என்றால் எவரும் லேசில் நம்பமாட்டார்கள். ஆனால் அது சத்தியமான உண்மை.

1960களின் இறுதிக்கட்டம், ஐ.தி.சம்பந்தன் அவர்கள் இலங்கைத் துறைமுக அதிகார சபையில் எழுதுவினைஞராகப் பணி புரிந்துகொண்டு இருந்தார். நான் இலங்கை வங்கித் தலைமையகத்தில் எழுதுவினைஞராகச் சேர்ந்த சமயம் தமிழரசுக் கட்சியின்பால் கொண்ட ஈர்ப்பின் காரணமாக கொள்ளுப்பிட்டியில் உள்ள தந்தை செல்வநாயகம் வீட்டிற்கு நான் அடிக்கடி சென்று வருவது உண்டு. அங்குதான் நான் முதன் முதலாக ஐ.தி.சம்பந்தனைச் சந்தித்தேன்.

அக்கால கட்டத்தில் அவர் அரசியலைவிட தொழிற்சங்கவிடயங்களில் ஈடுபாடு உடையவராக இருந்தார். அப்போது அவருக்கு திருவாளர்கள் கோஷ்வரன், இராமநாதன், இராசரத்தினம், சிவஞானசுந்தரம் போன்ற தொழிற்சங்கவாதிகளின் நெருங்கிய தொடர்பு இருந்தது. இவர்கள் சம்பந்தனை மொழிவழித் தொழிற்சங்கத்தினை ஆரம்பிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அதன்படி அரச கூட்டுத்தாபன ஊழியர் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதற்குப் பக்கபலமாக திருவாளர்கள் அ.ஜேசுதாசன், ஜெயராம், கணபதிப்பிள்ளை, சொக்கலிங்கம் ஆகியோர் விளங்கினர். எமது நாயகன் ஐ.தி.சம்பந்தன் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். 1974ஆம் ஆண்டு தமிழ்த் தொழிற்சங்க கூட்டணியின் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். 1964ஆம் ஆண்டிலிருந்து 1983ஆம் ஆண்டு இனக்கலவரம்வரை இவர் அரசியல், தொழிற்சங்கம், சமயம் ஆகிய துறைகளில் தீவிரமாக ஈடுபட்டார்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரக்காலம் வரை இலங்கைத்துறைமுக அதிகார சபையில் பணியாற்றினார். அன்னார் சிங்கள மொழி கற்காத காரணத்தால் பத்துக்கு மேற்பட்ட சம்பள உயர்வுகளையும் பதவி உயர்வுகளையும் இழந்தார் என்பது கவனத்துக்குரியது. எனினும் அவர் தாம்கொண்ட இலட்சியங்களில் பலவற்றைச் சாதித்துள்ளார் என்றால் அக்கூற்று சற்றும் மிகையாகாது. அதற்குத் துணையாக நின்றது அவரது பாரியார் செல்வநிதி. இன்று அவர் நம்மைவிட்டுப் பிரிந்திருந்தாலும். அவரது நினைவுகள் அலைமோதுகின்றன. நாம் திருமணம் செய்ய முன்பு இளைஞனாக இருந்த காலத்தில் நானும் ஐ.தியும் கூட்டங்களில் பேசிவிட்டு அவரின்வீட்டுக்குப் போகும் போது இன்முகத்துடன் வரவேற்று உணவு உபசரித்தவர் அல்லவா அவர். ஒவ்வொரு ஆண்மகனின் வெற்றியின் பின்னாலும் ஒரு பெண் இருப்பார் என்ற ஆன்றோர் கூற்று ஐ.தி.சம்பந்தனின் நூற்றுக்கு நூறு உண்மை என்று அடித்துக் கூறலாம்.

1970களில் ஐ.தி.சம்பந்தன் (இலங்கைத் துறைமுக அதிகார சபை) ஈழவேந்தன் (இலங்கை மத்திய வங்கி) கோவை மகேசன் (சுதந்திரன் ஆசிரியர்) நால்வரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையில் புகையிரதம் ஏறி மட்டக்களப்பு, கல்முனை, வாழைச்சேனை, பொத்துவில், வவுனியா, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் என்று கூட்டங்களில் பேசிவிட்டு திங்கட்கிழமை காலை வேலைத்தளங்களுக்குச் செல்வது ஒரு இனிமையான சுகமான அனுபவம். இவர்கள் நால்வரிலும் நான்தான் அப்போது திருமணம் ஆகாதவன். நினைக்க இனிக்கிறது, மனம் பூரிக்கிறது.

ஈழவேந்தனுடனும் ஐ.தியுடனும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒரே அறையில் 94 நாட்கள் இருந்ததை எண்ணிப்பார்க்கிறேன். எம்முடன் நா.சந்திரமோகன், பேபி.பரராஜசிங்கம், முருகையா, நீர்கொழும்பு சவுந்தரராஜன், உதய..... கொழும்பு கொம்பனி வீதி சதானந்தன் என ஏறத்தாழ 70 பேர் வரையில் பயங்கரவாதச்சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டிருந்தோம்.

நான் தினமும் இரவில் நீண்ட நேரம் ஏதாவது வாசித்துவிட்டுத்தான் உறங்கப்போவேன். முன்பே உறங்கிவிட்ட ஈழவேந்தனும், ஐ.தியும் அதிகாலையில் எழுந்து என்னைச் சிரமப்பட்டு எழுப்புவார்கள். அதிகாலை என்றால் சிறைச்சாலை கழிவறைகள் சற்றுச் சுத்தமாக இருக்கும். பின்பு தேவாரம் பாடு, திருவாசகம் கூறு, கந்தசஸ்டி சொல்லு என்று கஸ்ரப்படுத்துவார்கள். அப்போது கடவுள் நம்பிக்கை குறைந்தவனாக இருந்த நான் அவர்களின் வயதுக்கும் அனுபவத்திற்கும் மதிப்பளித்து அவர்கள் சொன்னதைச் செய்தேன். அச்சமயம் பார்த்து கந்தசஸ்டி வந்தது. விரதம் இருப்போம். பாலும் பழமும்தான் ஆகாரம் என்றார்கள். சிறைச்சாலை நிர்வாகம் மறுத்தது. பாலும் பழமும் தர சிறைச்சாலைச் சட்டம் அனுமதிக்காது என்றார்கள் சிறைச்சாலை நிர்வாகிகள். அதுவரை கந்தசஸ்டி பற்றியோ விரதம் பற்றியோ சிந்திக்காமல் இருந்த நான் இந்த முடிவால் வீறுகொண்டு எழுந்தேன். ஒரு மனு தயாரிக்கப்பட்டது. எமது உணவுக்கான அன்றாட செலவை இரவில் பாலும் பழமுமாகத் தாருங்கள் என்று அந்த மனுவில் கேட்டிருந்தோம். அனைவரும் மனுவில் கையெழுத்திட்டிருந்தோம். முதல் கையெழுத்து ஐ.தி.சம்பந்தனுடையது. சிறைச்சாலை நிர்வாகம் படியிறங்கி வந்தது. ஐ.தியின் புண்ணியத்தால் இன்றும் நான் ஒவ்வொரு வருடமும் கந்தசஸ்டி உபவாசம் இருக்கிறேன்.

மறத்தமிழன் ஐ.தி.சம்பந்தனின் ஆளுமை பன்முகப்பட்டது. ஒரு தொழிற்சங்கவாதியாக, எழுத்தாளனாக, நூல் வெளியீட்டாளனாக, "இலண்டன் சுடரொளி ஆசிரியராக", நல்ல மேடைப் பேச்சாளராக, சமயத் தொண்டனாக, சிறைமீண்ட செம்மலாக.... இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம்.

தமது எண்பது வயதிலும் இன்றும் இளைஞனாக சுறுசுறுப்பாக இயங்கும் செயல்வீரனாகத் திகழும் ஐ.தி.சம்பந்தன் பல்லாண்டு, பல்லாண்டு காலம் நோய்நொடியில்லாமல் வாழ்ந்து தமிழ் பேசும் மக்களுக்கு தமிழ்த்தொண்டு, சமயத்தொண்டாற்ற வேண்டும் என வாயார, மனமார வாழ்த்துகிறேன்.

ஐ.தி.சம்பந்தன் அவர்கட்கு எண்பது வயது பூர்த்தியாகிவிட்டதை அறிகின்ற அவருடன் தொடர்புள்ள ஒவ்வொருவருக்கும் பெரும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. குழந்தை உள்ளமும் தன்னலமற்ற சேவையும், ஈழத்தமிழர் சமஉரிமையோடு வாழ வேண்டியதற்கு உழைத்தல் ஆகியனதான் ஐ.தி.சம்பந்தனின் உடன் பிறந்த சிறந்த பண்புகள். அன்னார் திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம், திரு.கு.வன்னியசிங்கம், திரு.அ.அமிர்தலிங்கம், இன்றைய இரா.சம்பந்தன் ஆகிய தமிழ்த் தலைவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி அவர்களுடன் தோளுக்குத் தோள்நின்று ஈழத்தமிழருக்காகப் போராடியுள்ளார். சுடரொளிப் பிரசுரங்கள் மூலம் பல படைப்புக்களை வெளிக்கொணர்ந்துள்ளார்.

அன்னாரின் படைப்புக்கள் பல.ஆயினும் "கறுப்பு யூலை குற்றச்சாட்டு" எனும் வரலாற்று ஆவணப் பதிப்பு தலைதூக்கி நிற்கிறது. ஐ.தி.சம்பந்தன் மலையகத் தமிழரின் குறைகளை நீக்கவும் அரும்பாடுபட்டுள்ளார்.

திரு.ஐ.தி.சம்பந்தன் அவர்கள் தமிழ் மக்களின் அரும் செல்வம். இச்சான்றோன் இன்னும் பல ஆண்டுகள் நல்ல உடற்சுகத்துடன் வாழ்ந்து எல்லோருக்கும் நிழல்தரும் விருட்சமாகத் திகழவேண்டும் என வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

இனிய இசையான சாருமதி

இசை என்ற இன்ப வெள்ளத்தில் மூழ்கி எழுவது எனக்கு மிகவும் பிடிக்கும். இதனால்தான், டிசம்பர் மாதத்தில் தமிழ்நாட்டுக்கு பறந்துவிடுகிறேன்.

புகழ்பெற்ற சங்கீதக் கலைஞர்களின் கச்சேரிகளைக் கேட்டு ரசிப்பேன். காலை முதல் இரவு வரை, எத்தனை மணித்தியாலங்கள் என்றாலும் சலிப்பதில்லை.

மியூசிக் அகடமியில் பெரிய பாடகர்களது கச்சேரிகள் முதல் சென்னையிலுள்ள சபாக்களில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்க்கத் தவறுவதில்லை. குறிப்பிடக்கூடிய பரதநாட்டிய நிகழ்ச்சிகளையும் பார்ப்பேன்.

என்னோடு உள்ள மதிப்பின் காரணமாக, தங்கள் கச்சேரிகளுக்கு அழைப்பார்கள். முடிந்தளவு செல்வேன். எனது அழைப்பில், லண்டனுக்கு வந்து நிகழ்ச்சிகள் நடத்தியவர்கள், என்மீது அன்பு வைத்திருக்கிறார்கள். இந்த வகையில் கர்நாடக இசைக்கு பெருமை சேர்ப்பவர்களில் இசைத் தம்பதிகளாக வலம் வருபவர்கள் திருச்சூர் ராமச்சந்திரன் - சாருமதி. இருவருடனும் நெருக்கமாகப் பழகியிருக்கிறேன். கணவரைப் பற்றி என் நினைவுகளை ஏற்கனவே உங்களோடு பகிர்ந்து கொண்டு விட்டேன். அவர் துணைவியார் கலைமாமணி சாருமதியை நினைத்துப் பார்க்கிறேன்.

பன்னிரண்டு வயதில் எம்.எல்.வியின் மாணவியாக தன் இசை வாழ்க்கையை 1963 ஆம் ஆண்டில், ஆரம்பித்தவர் சாருமதி. நீண்ட நெடுங்காலம், 90 ஆம் ஆண்டு வரை, எம்.எல். வியிடம் சாரு தொடர்ச்சியாக சிஷ்யை என்ற பெருமையுடன் வாழ்ந்திருக்கிறார்.

கர்நாடக இசையின் கம்பீரத்துக்கும், சொக்கவைக்கும் இந்துஸ்தானி இசைக்கும், இழுத்த இழுப்புக்கெல்லாம்- எல்லா 'ஸ்தாயி'லும் சுருதி பிசகாமல், லயம் தப்பாமல் பாடக்கூடியவராக சாருமதி மிளிர்ந்த ரகசியம் எம்.எல்.வியிடம் தொடர்ச்சியாக எடுத்துக்கொண்ட சங்கீதப் பயிற்சியாகவும் இருக்கலாம்.

அவரது கச்சேரிகளை அப்போதே நான் கேட்பதுண்டு.

1994 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். லண்டனுக்கு சாருமதி வந்து ஒரு மாதம் வரை தங்கியிருந்து, ஆறு இடங்களில் கச்சேரிகளை நடத்திச் சென்றார். அவர் இங்கு வருவது முதல் அங்கு செல்வதுவரையான எல்லா ஏற்பாடுகளையும் கவனித்து, அனுப்பி வைத்தேன்.

நம் நாட்டின் சங்கீத வித்தகி நாகேஸ்வரி பிரமானந்தாவும் ஏற்பாடுகளுக்கு உதவினார்.

எங்கள் வீட்டில் தங்கியிருந்து தனது இசைப் பயணத்தை நடாத்தி முடிக்க சாருமதிக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்தேன்.

நான் அப்போது லண்டன் சிவன் கோயிலின் நிர்வாகச் சபைத் தலைவராக இருந்தேன்.

லண்டன் சிவன் கோயிலின் வளர்ச்சியில் மிகக் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டோம். கோயில் நிதிக்காக சாருமதியின் கச்சேரியை அத்தருணத்தில் ஏற்பாடு செய்தோம். மிக வெற்றிகரமான இசை நிகழ்வாக நடந்து முடிந்தது.

லண்டனுக்கு வெளியே பர்மிங்ஹாம் பாலாஜி கோயில் கும்பாபிஷேக நிகழ்ச்சியிலும் சாருமதியின் இசை நிகழ்ச்சியை நடாத்த ஆலய இயக்குனர்களில் ஒருவரான டாக்டர் சோமசுந்தரராஜாவும், மற்றொரு அன்பரான ராவ் அவர்களும் கேட்டிருந்தார்கள். அங்கு வாழும் வழக்கறிஞர் அருணாசலமும் ஒத்தாசை காட்டினார்.

வசதியான எனது வாகனத்தில் சாருமதியுடன், அவரது மகள் சுபஸ்ரீயையும் அழைத்துக் கொண்டு சென்றேன். பக்கவாத்தியமாக மிருதங்கம் வாசிக்க காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி, வயலின் லக்ஷ்மி ஜெயன் ஆகியோரும் வந்தார்கள்.

பல ஆண்டுகள் கழிந்தாலும் அந்தப் பயணம் மனதோடு வாழ்கிறது. கலைஞர்களுடன் பேசிப் பழகுவதிலும், அவர்களது அனுபவங்களைக் கேட்பதிலும் பொழுது போவது தெரிவதில்லை.

பாலாஜி கோயில் கும்பாபிஷேகத்தில் சாருமதியுடன் அவரது மகளும் பாடிய நிகழ்வு பலரையும் கவர்ந்தது. இதன் பின்னர் வழக்கறிஞர் அருணாசலம் வீட்டில் இரவு சாருமதி கச்சேரி முக்கியமான இசைப்பிரியர்களுக்காக நடாத்தப்பட்டது. இதமான இசையைப் போன்றே வழக்கறிஞர் அருணாசலத்தின் துணைவியார் கமலாவின் உபசரிப்பையும் மறக்க முடியாது.

சூட்டிங்கிலும் சாருமதியின் இசைக் கச்சேரி நடந்தது.

சரளமான குரல்வளம் சாருமதியின் தனித்துவம். சுருதி சுத்தம், தாள ஞானம், பாவம், சொற் சுத்தம்

போன்றவற்றுடன், நல்ல இசை ஞானமும், கற்பனையும், சாதகமும் அவரிடம் நிறைந்துள்ளதை அவதானிக்க முடியும். போதுமான பயிற்சியும், கடினமான உழைப்பும் சாருமதியிடம் நிறையவே இருந்தன.

இசை உலகில் பிரபலமாக விளங்கிய சங்கீதக் கலாநிதி எம்.எல்.வசந்தகுமாரியிடம் சாருமதி இசை பயிலும் சந்தர்ப்பத்தைப் பெற்றது, அவர் வெற்றிகரமான இசைப் பயணத்துக்கு வழிவகுத்தது என்று கூடச் சொல்லலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக திருச்சூர் ராமச்சந்திரன் இவருக்குக் கணவராகக் கிடைத்தது பேறாகும்.

சுருதியும், லயமும் என அவர்கள் இணைந்து வாழ்க்கையை இனிய இசையாக்கிக் கொண்டார்கள் என்று கூடச் சொல்லலாம்.

பல்லவி பாடுவதில் டி.கே.பட்டாம்மாளுக்குப் பின்னர் குறிப்பிடக்கூடியவராகத் திகழ்கிறார் சாருமதி. தானே இயற்றி, இசை அமைத்து, பாடுவதில் வல்லவர். அம்புசம் கிருஷ்ணா இயற்றிய 'நமோ நாராயணா...' கர்னாட ரஞ்சனி ராகத்தில் இசை அமைத்துப் பாடி பலராலும் போற்றிப் பாடுகிற பாட்டாக வந்துள்ளது.

ஹிந்துஸ்தானி இசையில் சாருமதிக்கு உள்ள பெரும் ஈடுபாட்டைக் கவனித்து இருக்கிறேன். பொருளை நன்கு புரிந்துகொண்டு பாடுவார், அதில் மனம் லயித்து, பூரணமாக அனுபவித்துப் பாடுவார். சாகித்தியங்களை சாருமதியால் உச்சரிப்பில் பிழையின்றி, அதன் பொருள் சிதையாமல் முழு ஈடுபாட்டுடன் பாடமுடிகிறது.

பாடும் கிருத்திகள்- கமகாஸ் அசைவுகள்- கற்பனா சக்திகள் சாருமதியின் முழுமையான சங்கீத ஞானத்துக்கு சாட்சி பகரும்.

ஏவிளம் ராஜேஸ்வரி அம்மா வீட்டில் நான் விருந்தாளியாக தங்கியிருந்தபோது திருச்சூர் - சாருமதி குடும்பத்தாருடன் ஏற்பட்ட நட்பு இன்று வரை நீடிக்கிறது.

தங்கள் இல்லத்திலும் திருச்சூர் தம்பதி என்னை அன்போடு உபசரித்து மனம் நிறையப் பேசியவை எல்லாம் மறக்க முடியாதவை.

சங்கீத குடும்பமான கே.விஸ்வநாதன் - அலமேலு விஸ்வநாதன் தம்பதியின் மகளான சாருமதி, டைரக்டர் கே.சுப்பிரமணியத்தின் பேராமகள்; பத்மா சுப்பிரமணியத்தின் ஒன்றுவிட்ட சகோதரி.

2010ம் ஆண்டு, லண்டனில் நமது மன்றம் நடாத்திய ஜி.எல்.பி. நூற்றாண்டு விழாவில் திருச்சூர் ராமச்சந்திரன், சாருமதி, அவர்களது மகள் சுபஸ்ரீ ஆகியோரை அழைத்து கௌரவித்திருந்தோம். இரண்டு நாள் நடந்த ஜி.எல்.பி. விழாவில் இவர்கள் இசைக் கச்சேரியும் இடம் பெற்றது. பிரபலமான பாடகர்கள் சுதா ரகுநாதன், பூஷணி கல்யாணராமன் ஆகியோரும் அவ்விழாவில் கச்சேரி நிகழ்த்தினார்கள்.

திருச்சூர் ராமச்சந்தின் - சாருமதி ஆகியோர் இயற்றி இசை அமைத்து, பாடிய 'கிருஷ்ணா அமிர்த தரங்கினீ' என்ற நாட்டிய நாடகத்தில் அவர்களே பங்குபற்றினர். 'சுவாதித்திருநாள்' பாத்திரத்தில் திருச்சூர் தோன்றினார். மகள் சுபஸ்ரீயும் பங்கேற்றார்.

சாருமதி மிகச் சிறந்த ஒரு சங்கீத ஆசிரியை. தன்னிடம் பயிலும் மாணவர்கள் நேர்த்தியாக, பிழையின்றி பாட வேண்டுமென்பதில் கண்டிப்பானவர். அர்ப்பணிப்புடன் கடமை புரியும் ஒரு ஆசிரியை என்ற பெயர் இவருக்கு உண்டு.

இந்தியாவின் 50 வது குடியரசு தினக் கொண்டாட்டத்தில் இவரே 'தேஸ்' ராகத்தில் யாத்து இசை அமைத்த 'ராகம் -தானம்- பல்லவி' மிகுந்த பாராட்டைப் பெற்றது. கலை விமர்சகர் 'சுப்புடு' இதனை விபந்துரைத்தார்.

தமிழர்களும், இந்தியர்களும் வாழும் உலக நாடுகள் எங்கும் இவர் சென்றுள்ளார். தமிழ்நாடு அரசின் உயர் விருதான் 'கலைமாமணி' விருது பெற்றவர். ஆம்-

சங்கீத சாம்ராஜ்யத்தில் சாருமதிக்கும் ஓரிடமுண்டு. ■

ஈழத்தமிழரின் அவல வாழ்க்கைக்கு உலகின் மிகப் பெரிய சினிமா விருது!

வன்னி யுத்தமும், முன்னாள் போராளியின் வாழ்க்கையினையும், அவரின் சமூக நலனையும் அடிப்படையாக வைத்து தீபன் என்னும் தலைப்பில் திரைப்படம் வெளியாகியுள்ளது. ஈழத்தமிழரின் அவல வாழ்க்கையைக் கூறும் திரைப்படம் ஒன்று உலகின் மிகப்பெரிய விருதுக்குத் தேர்வாகியிருப்பது இதுவே முதல்முறையாகும்.

இந்த தீபன் திரைப்படத்துக்கு Palme d'or என்ற கேன்ஸ் விழாவின் உயர் விருது அளிக்கப்பட்டுள்ளது. 'தீபன்' (Dheepan) எனப் பெயரிடப்பட்ட இந்தப் படத்தை பிரான்ஸ் நாட்டின் பிரபல இயக்குநரான Jacques Audiard என்பவர் இயக்கியுள்ளார்.

விடுதலைப் புலிகளையும், அவர்தம் போராளிகளையும் சர்வதேசம் பயங்கரவாதிகள் என்னும் முத்திரை குத்தி இன்றுவரை அம் முத்திரையை அகற்றாமலேயே இருக்கின்றது. இந்நிலையில் ஒரு போராளி, சமூகத்தின் மீது எவ்வளவு அக்கறை கொண்டுள்ளான் என்பதை வெளிக்காட்டும் திரைப்படம் ஒன்றினை பிரான்ஸ் நாட்டு இயக்குநர் ஜக்குயெஸ் அடியர்ட் இயக்கியுள்ளார்.

புலம்பெயர்ந்த நாடுகளில் ஈழத்தமிழ் அகதிகள் சந்திக்கும் புறச்சூழல் சார்ந்த பிரச்னைகளையும், அகச்சூழலில் அவர்கள் எதிர்கொள்ளும் அலைக்கழிப்புக்களையும், மனப்போராட்டங்களையும் பேசக்கூடிய முதல் ஐரோப்பியத் திரைப்படம் ''தீபன்'' என்று பரவலாகப் பார்க்கப்படுகிறது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தபின் அங்கிருந்து பிரான்ஸுக்குத் தப்பித்துச் சென்று புதிய வாழ்க்கையை அமைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளி ஒருவரின் வாழ்க்கையே இவ்வாறு தீபன் என்னும் பெயரில் படமாக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தில் தீபனாக வரும் கதாநாயகன், விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் இணைந்து தனித் தமிழீழத்திற்காகப் போராடுகிறார். இந்தப் போராட்டத்தில் பல துன்பங்களைச் சந்தித்த அவர், பின்னர் தனது தாய்த் தேசத்தை விடுத்துப் போலியான கடவுச்சீட்டு மூலம் பிரான்ஸில் உள்ள பாரீஸ் நகருக்கு வருகிறார்.

இலங்கை யுத்த சூழ்நிலைகளைக் காட்சிக் களமாக வைத்து தீபன் படத்தின் இயக்குநர் அடியார்ட், படத்தை இயக்கி பிரான்ஸ் கேன்ஸ் திரைப்பட விழாவில் வெளியிட்டுள்ளார். இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிந்து போரினால் பலியான விடுதலைப் புலிகளின் உடல்களுக்குச் சிதையூட்டுவதாகப் படம் தொடங்குகிறது.

அகதிகள் முகாமில் பெண் ஒருவர் யாரும் உரிமை கூறாத குழந்தைக்காகக் காத்திருக்கிறாள். பின்னர் குழந்தை கிடைத்ததும், விடுதலைப் புலியைச் சேர்ந்த தீபனைக் காப்பாற்றுவதற்காகத் தாங்கள் அனைவரும் ஒரே குடும்பம் எனப் பொய் கூறி பிரான்ஸ் நாட்டுக்குத் தப்பிச்செல்கின்றனர்.

அங்கு தீபன் தனது பழைய அடையாளங்களை எல்லாம் மறைத்து கட்டிடத்தைக் காவல் காப்பவராக வேலை செய்கிறார். தீபனின் மனைவியாக நடிக்கும் யாழினிக்கு ஒரு வீட்டில் சமையல் மற்றும் துணி துவைக்கும் வேலை கிடைக்கின்றது.

இந்நிலையில் அவர்கள் மூன்று பேரிடமும் உண்மையிலேயே பாசம் மற்றும் நெருக்கம் ஏற்படுகின்றது. இந்நிலையில் சிறையிலிருந்து விடுதலையாகும் ப்ராமின் கதாப்பாத்திரம் படத்தின் போக்கையே மாற்றி விடுகின்றது.

தன்னைக் கடத்தல் கூட்டத்தின் தலைவனாக அறிவித்துக்கொள்ளுகிறார் ப்ராமின். இந்தக் கூட்டத்தை அழிப்பதற்காக தீபன் மீண்டும் கொரில்லா முறையில் தாக்கத் திட்டமிடுகின்றார். இதற்குப் பிறகு நடக்கும் கதையை மிகவும் விறுவிறுப்பாகப் படமாக்கியுள்ளார் அடியெர்ட்.

இந்தத் திரைப்படத்தில் நாயகனாக ஜேசுதாசன் அந்தோனிதாசன் என்னும் இயற்பெயர் கொண்ட பிரபல எழுத்தாளர் ஷோபா சக்தி, நாயகியாக தமிழ்நாட்டைச் சேர்ந்த மேடைநாடகக் கலைஞர் காளீஸ்வரி சிறினிவாசன், சிறுமியாக கிளாடின் விநாசித் தம்பி ஆகியோர் நடித்திருந்தனர். தமிழ் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்ட ஷோபா சக்தி, யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டிக் கிராமத்தைச் சேர்ந்தவர். பிரான்ஸில் வாழ்பவர்.

ஒருவகையில் தனது சொந்த வாழ்வின் போராட்டங்களின் பெரும்பகுதியை இந்தத் திரைப்படத்தின் கதாநாயகன் தீபன் பாத்திரம் சித்தரிப்பதாக இந்தத் திரைப்படத்தில் தீபனாக நடித்திருக்கும் ஷோபா சக்தி கூறியுள்ளார்.

கேன்ஸில் இந்தத் திரைப்படத்தைப் பார்த்த முன்னணித் திரை விமர்சகர்கள் பலரும் இந்தத் திரைப்படத்தையும், ஷோபா சக்தி மற்றும் காளீஸ்வரியின் நடிப்பையும் பெரிதும் பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலக அரங்கில் மிக உயரியதாகக் கருதப்படும் கான்ஸ் பட விழாவில் தங்கப்பனை விருதை ''தீபன்'' படம் வென்றுள்ளது, இலங்கைத் தமிழர்கள் மத்தியில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது. இம்முறை சிறந்த திரைப்படத்துக்கான விருதுக்கு 19 திரைப்படங்கள் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சர்வதேசத் திரைப்படப் போட்டியில் ஹாலிவுட்டின் முன்னணித் திரை நட்சத்திரங்கள் நடித்த திரைப்படங்கள் பல போட்டியில் இருந்தன. அவற்றையெல்லாம் பின்னுக்குத்தள்ளிவிட்டு, முற்றிலும் புதுமுகங்களும், தொழில்முறை திரைப்பட முன் அனுபவமற்ற நடிகர்களும் நடித்த தீபன் திரைப்படம் இந்தச் சிறப்பு விருதினை வென்றிருப்பது ஐரோப்பிய திரை விமர்சகர்கள் பலரையும் பெரும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

''தீபன்'' படத்தின் இயக்குநர் அடியார்ட், இதற்கு முன் மூன்றுமுறை கான்ஸ் விழாவில் போட்டியிட்டுள்ளார். 1996 - ஆம் ஆண்டு ''எ செல்ஃப் மேட் ஹீரோ'' (A Self Made Hero) படத்துக்காக சிறந்த திரைக்கதைக்கான விருதைப் பெற்றார். 2009 ஆம் ஆண்டு ''புரொஃபட்'' (Prophet) படத்துக்காக நடுவர்கள் தேர்வு சிறப்புப் பரிசைப் பெற்றார்.

ஈழத் தமிழர்களின் வாழ்க்கைப போராட்டத்தைப் பார்ப்பவர்களின் கண்களில் கண்ணீரை வரவழைக்கும் விதமாகப் படம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இலங்கைத் தமிழர்களைப் பற்றித் துணிச்சலாக ஒரு படம் எடுத்து அவர்களின் உண்மை வலிகளைப் பதிவு செய்த இயக்குநர் பாராட்டுக்குரியவர்.

சுமார் 109 நிமிடங்கள் ஓடும் இத்தத் திரைப்படம் தமிழ், ஆங்கிலம் மற்றும் பிரான்ஸ் மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற 68ஆவது கென்னெஸ் திரைப்பட விழாவில் ''தீபன்'' திரைப்படமும் திரையிடப்பட்டது.

இப்படத்தில் ஈழத்தமிழர்களின் வாழ்க்கை, போரின்போது அவர்களின் போராட்டம் மற்றும் அந்தப் போர்க்கொடுமைகளிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள வெளிநாடுகளுக்கு சென்று அங்கும் பல துன்பங்களை அனுபவிக்கும் ஒரு உணர்வுபூர்வமான கதை பிற இயக்குநர்கள், விமர்சகர்கள் மற்றும் தெரிவுக் குழு உறுப்பினர்களை மெய்சிலிர்க்க வைத்துள்ளது.

அது மட்டுமல்லாமல், இறுதித் திரைப்பட விழாவில் போட்டியிட்ட 19 திரைப்படங்களை பின்னால் தள்ளி ''தீபன்'' திரைப்படம், பிரான்ஸ் நாட்டின் உயரிய "Palme d'Or" என்ற விருதையும் பல பரிசுகளையும் வென்று சாதனை படைத்துள்ளது.

பிற நாடுகளுக்கு தஞ்சம் கோரி செல்பவர்களின் மனநிலை அவர்களின் வாழ்க்கை முறை பற்றி விரிவாக எடுத்துக்கூறிய இந்தப் படத்தை கேன்ஸ் திரைப்பட விழாவில் பல முன்னணி விமர்சகர்கள் படத்தை பார்த்துவிட்டு அதில் நடித்தவர்களையும் படத்தையும் பெரிதும் பாராட்டியது குறிப்பிடத்தக்கது. தீபனுக்கு கிடைத்த விருது பல நல்ல படங்களை உலக சினிமாவிற்குக் கொண்டுவர வழிவகுக்கட்டும்.

உலகையே திரும்பிப் பார்க்க வைத்துள்ள இந்தத் திரைப்படம் ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி பிரான்ஸ் நாட்டில் வெளியாக உள்ளது.

– நன்றி: ஞானம்

வவுனியூர் இரா.உதயணன்

மகள் தந்தைக்காற்றும் உதவி

வானத் தரையில் தவழ்ந்து மெல்ல நகர்ந்து, சிரித்து, கால் இடறி விழுந்து கடலில் மௌனித்துப் போகும் சூரியன் யன்னலினூடாக எட்டிப் பார்க்கத் தொடங்கினான்.

கோடை காலமது. பிரியங்கா இன்னமும் கட்டிலில் புரண்டு புரண்டு படுத்திருந்தாள். அவளது பாடசாலை சிநேகிதிகள் அவளுக்குச் சொல்லிக் கொடுத்த யோசனையை நினைத்தவண்ணம் மீண்டும் புரண்டு படுத்தாள்.

"பிள்ள பள்ளிக்கூடம் போக நேரமாச்சு. எழும்புடி. இண்டைக்கு நான் வேலைக்குப் போகேக்க கொண்டு போய் விட்டுட்டுப் போறன்." - தாய் சாந்தி தேனீர் கோப்பையை கட்டிலருகில் இருந்த மேசையில் வைத்துவிட்டு முதுகில் தட்டி சொல்லிவிட்டுச் சென்றாள்.

ஆனால், பிரியங்காவோ கண்களைத் திறக்கவில்லை.

"இண்டைக்கு நான் பள்ளிக்கூடம் போகப் போறதில்லை. என்ற 'பிரண்ட்ஸ்' சொன்னதை செய்து முடிக்க வேணும்" அவள் மனம் நினைத்துக் கொண்டது.

- கீழே சமையலறையிலிருந்து சாந்தி மீண்டும் கத்தினாள்.

"பிரியங்கா! எழும்பி வெளிக்கிடு. நான்தான் இண்டைக்கு உன்னை பள்ளிக்கூடத்தில் விட்டுட்டு போகப் போறன்"

கட்டிலில் படுத்திருந்தபடியே "ஐ ஆம் நோட் கோயிங் டு ஸ்கூல் டுடே அம்மா!" பிரியங்கா கத்திச் சொன்னாள்.

"என்னடி ஆச்சு உனக்கு, ஏன் போகேல்ல?"

"வயிறு சரியாக குத்துது அம்மா" மீண்டும் பெரிதாக சத்தம்போட்டு சமையலறையிலிருந்த சாந்திக்கு பதில் சொன்னாள் பிரியங்கா.

அவள் மனதில் மூன்று நாட்களாக எரிந்து கொண்டிருந்த கோபம் இன்னும் தணியவில்லை. பிரியங்காவுக்கு இப்பொழுது வயது பதினைந்துதான். ஆனால், ஆடம்பரமாக உடுப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டவள். அத்துடன் ஆறு மாதங்களிற்கு ஒரு முறை தனது கைத்தொலைபேசியை மாற்றுபவள்.

மூன்று நாட்களுக்கு முதல் நடந்து முடிந்த சம்பவம் அவளுக்கு தகப்பன் மீது ஆத்திரத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

எத்தனையோ முறை டாக்டர் சாம்பசிவம், பிரியங்காவின் அப்பா பிரியங்காவை திட்டியிருக்கிறார். எச்சரிக்கை கூட செய்திருக்கிறார்.

அலங்கரித்துக் கொண்டு பாடசாலைக்கு போவதை விட்டிட்டு படிப்பில் கவனத்தை செலுத்து என்று பலமுறை கூறியும் பிரியங்கா அதை பொருட்படுத்தவில்லை.

அன்று புதன்கிழமை, காலை ஆறு மணிக்கே குளித்து விட்டு வந்து கண்ணாடியின் முன் அமர்ந்தவள் ஏழு மணி வரை மேக்கப் போடுவதில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தாள். உதட்டுப்பூச்சை அழகாக உதடுகளில் பூசி அலங்கரித்து கண்ணாடியில் அழகு பார்த்துக்கொண்டிருந்தபோது அவளது அறைக்கதவை தட்டிவிட்டு அறைக்குள் எட்டிப்பார்த்த டாக்டர் சாம்பசிவம் அவள் இன்னமும் கண்ணாடியின் முன் அமர்ந்திருப்பதை கண்டுவிட்டு திட்டியபடியே அவளருகில் சென்று கன்னத்தில் பளாரென ரெண்டு அறை அறைந்தார். அவ்வளவுதான், அவளது இரு கன்னமும் சிவந்துவிட "உனக்கு எத்தனையோ முறை சொல்லி எச்சரித்தனான்" என்று சொல்லிக்கொண்டே வெளியே வந்தார் டாக்டர் சாம்பசிவம்.

மூன்று வயதில் ஒரு நாள் சாப்பாட்டை கோபத்தில் பிளேட்டுடன் தட்டிக் கொட்டியதற்கு அடி வாங்கியதின் பின் டாக்டர் சாம்பசிவம் ஒரு நாளும் பிரியங்காவின் மீது கை வைத்ததில்லை.

பிரியங்கா அரை மணிநேரம் அறையிலிருந்து அழுதாள். தாய் சாந்தி ஒரு கம்பனியில் அக்கவுண்டன்ட்டாக வேலை செய்வதால் அன்று விடியற்காலை அதிக வேலை இருப்பதாகக் கூறி ஆறு மணிக்கே வேலைக்குப் புறப்பட்டுவிட்டாள்.

டாக்டர் சாம்பசிவத்திற்கு மகளின் செய்கையை யோசிக்கும்போது கோபம் கோபமாக வந்தது.

தன் ஊரில் படிக்கிற காலத்தில் பெண் பிள்ளைகள் 'மேக்கப்' போட்டு 'லிப்ஸ்டிக்' பூசி பாடசாலைக்குப் போனதை அவர் காணவில்லை.

இங்கு பிறந்து வளர்ந்த தன்ற மகளின் அலங்கரிப்பை பார்த்துப் பார்த்து பொறுமையிழந்த சாம்பசிவம் அன்று மகள் மீது கை வைத்தது. இந்த நாட்டு சட்டதிட்டங்களின் படி பிழையான விஷயம் என்பதை உணர அவருக்கு அதிக நேரமெடுக்கவில்லை. அரைமணித்தியாலங்களின் பின்பு அவளது அறைக்குச் சென்றவர் அழுது கொண்டிருந்த பிரியங்காவின் தலையைத் தடவி. "நீ பள்ளிக்கூடம் போதும்போது இப்படி அலங்கரித்துக் கொண்டு போகக்கூடாது அம்மா. இயற்கையாகவே கடவுளும் உனக்கு அழகான முகத்தை தந்திருக்கும்போது, செயற்கை அழகு உனக்கு தேவையில்லை அம்மா!" என்று பொறுமையாகச் சொல்லி, பிரியங்காவை அறைந்ததிற்கு மன்னிப்பும் கேட்டார். அது மாத்திரமல்லாமல் அன்று பிரியங்காவை பாடசாலைக்குக் கொண்டுபோய் எட்டுமணியளவில் இறக்கியவரும் அவர்தான்.

ஆனால், பிரியங்காவோ தந்தை சாம்பசிவம் மீண்டும் புத்தி சொல்லி மன்னிப்புக் கேட்டதற்கு பதில் ஒன்றும் சொல்லவில்லை.

"இவர் எப்படி என் மேல கை வைப்பது? இவருக்கு என் மேல கை வைக்க எப்படி முடியும்." என்று நினைத்தவளாய் பாடசாலை மதிய இடைவேளையின்போது தனது சிநேகிதிகளுக்கு நடந்த கதையை சொல்லி முடித்தாள் பிரியங்கா.

சிநேகிதிகளும் பிரியங்கா சொன்னதை கேட்டுவிட்டு "உன்ற அப்பா உன்னை அடித்திருக்கக்கூடாது. அவருக்கு நீ நல்ல பாடம் படிப்பிக்க வேணும்" என்று அறிவுறுத்தினார்கள். பிரியங்காவின் ஒரு சிநேகிதி மட்டும். "அவர் உன்ற அப்பாதானே எல்லாம் உன்ற நன்மைக்காகத்தானே செய்வார். நீ செய்ததும் பிழைதானே. பாடசாலைக்கு அலங்கரித்து லிப்ஸ்டிக் பூசி வரவேண்டியதில்லைதானே. பெற்றோர் எப்பொழுதும் பிள்ளைகளின் நன்மைக்காகத்தான் எதையும் செய்வார்கள்" என்று சொல்லி முடித்தாள்.

பிரியங்காவோ, அவர் என்ற அப்பதான். ஆனால், என்ற சுதந்திரத்தில், உரிமைகளில் எப்படி அவர் தலையிட முடியும். மற்ற சிநேகிதிகள் சொல்வது சரியென்று வாதாடினாள்.

மற்ற சிநேகிதிகள் சொன்னபடி தந்தைக்கு நல்ல பாடம் படிப்பிக்க வேணும் என்று நினைத்தவள். இன்று வயிற்றுக் குத்து என்று தாய் சாந்திக்கு சொல்லிவிட்டு இன்னமும் படுத்திருந்து திட்டம் போட்டுக் கொண்டிருந்தாள்.

ஏழரை மணிக்கு பிரியங்கா தன்னுடன் வராததால் சாந்தி வேலைக்குப் புறப்பட்டுவிட்டாள்.

டாக்டர் சாம்பசிவம் குளித்துவிட்டு தோய்த்துலர்ந்த ஆடையை அணிந்து சாமியறைக்குச் சென்று கடவுளை வேண்டிக்கொண்டு, பிரியங்காவின் அறைப்பக்கமாக வந்து, "என்னம்மா சுகமில்ல?" என்று கேட்டார்.

பிரியங்கா கட்டிலில் எழும்பியிருந்து தகப்பனைப் பார்த்தாள். கட்டிலில் அவளது கைத்தொலைபேசியும் படுத்திருந்தது.

"நீங்கள் என்னை எப்படி அடிக்க முடியும்"

'அதுதான் அன்றே 'சொரி' சொல்லிவிட்டேனே அம்மா".

அப்பொழுது நேரம் எட்டு மணியைத் தாண்டியிருந்தது. பிரியங்காவின் அறையில் சதாசிவம் சதைத்துக் கொண்டு நிற்கும்போது யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

மாடியிலிருந்து படிகளில் இறங்கிச் சென்று கதவைத் திறந்தார் டாக்டர் சாம்பசிவம். அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. இரண்டு பொலீஸ்காரர்கள் வாசலில் நின்றிருந்தார்கள்.

ஒரு பொலீஸ்காரன் உள்ளே போய் கதைக்கலாமா என்று கேட்க 'வாருங்கள்' என்று உள்ளே அழைத்தார் டாக்டர் சாம்பசிவம்.

உள்ளே வந்தவர்கள் டாக்டர் சாம்பசிவத்தை ஏற இறங்கப் பார்த்தார்கள்.

"உங்கள் மகளிடம் இருந்து புகார் வந்திருக்கிறது. உங்கள் கைகளில் விலங்கு மாட்டப் போறம்" என்று ஒரு பொலீஸ்காரன் சொல்ல சாம்பசிவத்திற்கு உலகமே தலைகீழாகச் சுற்றியது.

"என்ற மகளா... என்ன புகார்..." சாம்பசிவம் பொலீஸ்காரனை கேட்டார்.

"பாடசாலைக்குப் போகாமல் வயிற்றுக் குத்துடன் படுத்திருந்த உங்கள் மகளை கொஞ்ச நேரத்திற்கு முன்பு நீங்கள் பலவந்தப்படுத்தியதாக உங்கட மகள் புகார் செய்திருக்கிறார்".

அறையிலிருந்து பிரியங்கா தலைவிரிகோலமாக மாடிப்படிகளில் இறங்கி கீழே வந்தாள்.

டாக்டர் சாம்பசிவம் அவளையே பார்த்தவண்ணம் நின்றிருந்தார்.

"இவர்தான் என்ற அப்பா... என்னை..." பிரியங்கா ஆங்கிலத்தில் சொல்ல.

ஒன்றுமே சொல்லாமல் தனது இரண்டு கைகளையும் நீட்ட வந்த பொலீஸ்காரனில் ஒருவன்.

"நீங்கள் ஏதும் சொல்லவேணுமென்றால் பொலீஸ் ஸ்டேசனுக்கு வந்து சொல்லலாம்" என்று சொல்லிக் கொண்டு இரு கைகளிலும் விலங்கை மாட்டினான்.

"நான் உன்ற நன்மைக்காக அடித்ததற்காக எனக்கு நல்லதொரு பரிசு தருகிறாய் மகளே... என்றோ நீ விட்ட பிழையை உணரும்போது நான் இருக்க மாட்டன்." சொல்லிவிட்டு பொலீஸ்காரர்கள் பின்னே நடந்தார் டாக்டர் சாம்பசிவம் ஒரு சந்தேகக் கைதியாக!" ■

மெலிந்த உடல் என்னும் மோகம்

• இளைய அப்துல்லாஹ்

சுவிசுக்குப் போனபோது, ஜெனிவாவில் ஒரு பிடி சோறு சாப்பிட வேண்டும் என்று நானும் என் மனைவியும் கடை கடையாக அலைந்தோம். இது ஜெனிவாவைச் சுற்றிப் பார்க்கப் போனபோது நடந்தது. ஒரு மாதிரி ஒரு மொறொக்கோ காரின் கெபாப் கடையில் சோறு இருந்தது. பெரிய பெரிய அரிசி எங்கிருந்து இறக்கினார்களோ தெரியாது. வாயில் ஆசையோடு வைத்தால் 'சப்' என்று இருந்தது. அந்தச் சோறு, எனக்கெல்லாம் மூன்று நேரத்தில் ஒரு நேரம் சோறு உள்ளிறங்க வேண்டும். ஊர்க் குத்தரிசியை நினைத்தால் இன்னும் நாவில் நீர் ஊறுகிறது!

கொழும்பில் இருக்கும் போது சிறிகதிரேசன் ரோட்டில் இருக்கும் யாழ்ப்பாணம் சாப்பாட்டுக் கடையில் குத்தரிசி சோறும் மீன் குழம்பும் சாப்பிட்டது இன்னும் ருசி அடி நாக்கில் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

இப்பத்தைய பிள்ளைகள் சோறை வெறுக்கிறார்கள்.

அளவாக சாப்பிட்டு உடம்பை 'சிக்' என்று வைத்திருப்பதை விட்டு விட்டு 'டயட்' என்ற பெயரில் உடம்பை பாரமில்லாமல் ஆக்குகிறார்கள். அதனால் பல நோய்கள் அண்டும் ஆபத்து இருக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியைப் பற்றி கவலைப்படாமல் உடலை மெலிய வைப்பதில் மட்டுமே ஆர்வம் கொள்கின்றனர்.

மெலிந்த இடை, பெரிய மார்பு, ஒல்லியான உடல்வாகு என்ற நிலைமைதான் மேற்குலகில் பெண்கள் மத்தியில் உள்ள வாய்ப்பாடு.

ஆனால், எமது ஊர்ப்பிள்ளைகள் இந்த மூன்றையும் அடைவதற்கு ஆலாய்ப் பறக்கிறார்கள்.

இந்திய, இலங்கை ஆண்களுக்கு கொஞ்சம் குண்டான, மார்பு பெருத்த பெண்களைத்தான் பிடிக்கிறது. சினிமாவிலும் பாருங்கள். நமீதா, முன்பு குஷ்பு என்றுதான் ரசிக ஆண்கள் இருக்கிறார்கள்.

'டயட், டயட்' என்று உடலை மெலிய வைப்பது மட்டுமில்லாமல் வளரும் இளம் பெண்கள் மிகவும் ஆரோக்கியம் பேண வேண்டும். அதோடு சத்தான உணவும் சாப்பிட வேண்டும். இல்லாவிடில் அவர்களின் உடலுக்கு பேரிடர் வந்து விடும்.

உடம்பும் மெலிந்து இருக்க வேண்டும். ஆனால், சுறுசுறுப்பாகவும் இருக்க வேண்டும் என்பதே வைத்திபர்களின் ஆலோசனை.

இளைய பெண்களே 17 வயதில் உங்கள் எலும்புகள், தோல், உயரம், வளர்ச்சி கிட்டத்தட்ட இறுதிக் கட்டத்திற்கு வருகிறது. ஆகவே இந்தக் காலங்களில் நல்ல சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும்.

பெண்களைப் பொறுத்தமட்டில் உடலின் கொழுப்புச் சத்து மிகவும் முக்கியம். அதாவது இனப் பெருக்க உறுப்புகள் அமைப்பாக வளர்வதற்கு மிகவும் முக்கியம். இளம் பெண்கள் (நான் சொல்வது 13 முதல் 17, 18 வயது வரையானோர்) மெலிதாக இருக்க வேண்டும் என்பதற்காக சரியான சாப்பாடு சாப்பிடாமல் விட்டால், முதலில் பூப்பெய்தலில் பிரச்சினை ஆரம்பிக்கும்.

பிறகு மாதவிலக்குப் பிரச்சனைகள் ஏற்படும். சரியான சத்துணவுகளை சாப்பிடாமல் விடுவதன் காரணமாக இரும்புச் சத்தும் கால்சியமும் உடம்பில் குறைந்து பெரும் பிரச்சினைகள் ஏற்படும்.

வளரும் பிள்ளைகளினுடைய ஒவ்வொரு நாள் சக்திக்கும் 2500 கலோரி தேவை. இது குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மரச்சத்து ஒவ்வொரு நாளும் எடுத்துக் கொள்ள வேண்டும். அரிசி அல்லது கோதுமை மாய்பண்டங்கள் நல்லது. இதில் 10 முதல் 12 வயதுடைய பிள்ளைகள் நாளொன்றுக்கு 320 கிராம் வரை சாப்பிட வேண்டும். 13 முதல் 15 வரையான பிள்ளைகள் 350 கிராம் அளவில் சாப்பிட வேண்டும். அதற்காக தினமும் தராசு வைத்து நிறுத்திக் கொண்டிருக்கத் தேவையில்லை.

ஒருநாள் அளவு பார்த்தால் தினமும் அந்த அளவு சாப்பிடலாம்தானே. பருப்பு, பயறு வகைகள் தினமும் 70 கிராம் சாப்பிட வேண்டும். அப்பொழுதுதான் புரதம் கிடைக்கும். இறைச்சி, மீன் ஒவ்வொரு நாளும் ஒரு பெரிய துண்டு அதாவது 60 கிராம் அளவில் சாப்பிட வேண்டும்.

மரக்கறிக்காரர் என்றால் பட்டாணிக் கடலை 50 கிராம் சாப்பிடுங்கள். கட்டாயம் 10 முதல் 18 வயதுள்ள சிறுமிகள் நாளொன்றுக்கு ஒரு லிற்றர் பால் குடிக்க வேண்டும். ஒரு நாளைக்கு நான்கு கிளாஸ் பால் குடியுங்கள். அது ஒரு லிற்றர் பாலுக்கு சமனாகி விடும். ஒவ்வொரு நாளும் உணவில் கீரை சேர்க்க வேண்டும். பப்பாளிப்பழம், மாம்பழம், வாழைப்பழம் தினமும் சாப்பிடுங்கள். ஆகவே உடல் மெலிந்து போக சாப்பிடாமல் பட்டினி கிடந்து ஒன்றும்

உடம்பும் மெலிந்து இருக்க வேண்டும். ஆனால், சுறுசுறுப்பாகவும் இருக்க வேண்டும் என்பதே வைத்தியர்களின் ஆலோசனை.

ஆகப் போவதில்லை. நோயெதிர்ப்பு சக்தியைக் கூட்ட வேண்டும். அல்லது நோய் வந்து அதனை மாற்ற முடியாமல் அவதிப்படுவீர்கள்.

ஒரு பெண்மணி. கல்யாணம் முடிக்கிற வயது. உடல் மெலிந்து இருக்க வேண்டும் என்பதற்காக காலையில் சாப்பிட மாட்டா. சாப்பிட்டாலும் ஒரே ஒரு பாண் துண்டு. பகலுக்கு தூப் மட்டும் குடிப்பா. அதுவும் கடையில் விற்கின்ற உடனடி தூப் பாக்கெட்டை வாங்கி வந்து தண்ணியில் தூடாக்கி குடிப்பா. இரவு சாப்பிடுவதில்லை.

வயிற உள்ளே போய் அழகாகத்தான் இருந்தா.

ஆனால், வந்தது ஒரு நோய். துவண்டு விழுந்து விட்டா. அந்த நோயிலிருந்து இன்னமும் மீளவே இல்லை.

வயிற்றில் புண் வந்துவிட்டது. கை நடுக்கம், வாந்தி என்ன உணவை இப்பொழுது சாப்பிட்டாலும் உடனடியாக வயிற்றாலை போய்விடும். ஒரு சிறங்கை மருந்து உட்கொள்ள வேண்டிய நிலைக்கு வந்து விட்டா இப்பொழுது.

அதோடு இன்டர்நெற்றில் போய் தளக்கு என்ன வருத்தம் என்று வெப்சைட்டுகளில் தேடி வருகிறா. அவா ஏற்கனவே மனது பலவீனம் உடையவா. வெப் சைட்டில் அவவினது வருத்தத்திற்குப் பெயர் தெரியாத நோய்கள் எல்லாம் இருக்கிறது என்று எழுதியிருக்கிறதைப் பார்த்து விட்டு இப்பொழுது மனப் பிரமை பிடித்தவ மாதிரி இருக்கிறா. "இன்டர்நெற்றில் போய் நோய் அறிகுறிகளைத் தேடுவதை நிறுத்து" என நான் ஏசினேன்.

வெப்சைட்டில் பொதுவான அறிகுறிகளும் நோயும்தான் போட்டிருப்பார்கள். அது அப்படியே இருக்கும் என்று உடனடியாக நம்புவது மடத்தனம்.

எனது நண்பன் ஒருவனுக்கு இரவுக் காய்ச்சல். தொடர்ச்சியாகவே இருந்தது. இதற்கு இங்கே லண்டனில் வைத்து மருந்து எடுத்தான்.

அவனின் மனிசி வெப்சைட்டில் போய் இரவுக் காய்ச்சல் என்ன நோய் என்று தேடினால் அது கான்சருக்கான அறிகுறி என்று இருந்தது. மனிசி குழம்பி, நண்பர் குழம்பி தனக்கு கான்சர் என்று அழுது இப்படி அல்லாடிக் கொண்டிருக்கும் பொழுது குடும்ப வைத்திபர் ஏசி அனுப்பியிருக்கிறார். முதலில் வெப்சைட்டில் நோய் அறிகுறியை வைத்துத் தேடுவதை நிப்பாட்டச் சொல்லி.

யாருக்குத்தான் செத்துப் போக விருப்பம்? கான்சர் என்று பயந்தவன் தற்போது உசாராகி வேலை செய்கிறான்.

உலகம் முழுவதும் இளம் பெண்கள் மெலிந்த தோற்றமுள்ளவர்களாகவே இருக்க விரும்புகிறார்கள். அதற்கு சரியான போதுமான உணவு, நடைப்பயிற்சி, தேகப்பயிற்சியின் முக்கியத்துவத்தை உணர்கிறார்களில்லை, வெறுமனே இலகுவான முறை என்று சாப்பாட்டை ஒதுக்கிறார்கள். இது பெரிய பக்க விளைவுகளை ஏற்படுத்தும். எமது சிலோன் பெண்கள் கலியாணம் முடிக்கும் வரை எலும்பும் தோலுமாக இருப்பார்கள். மெலிந்து துடி இடையோடு இருப்பார்கள். என்ன மாயமோ மந்திரமோ கலியாணம் முடிந்து ஒரு பிள்ளை பெற்றவுடன் குண்டாகிப் பருத்து விடுவார்கள். ஆனால், வெள்ளைக்காரர் ஐந்து, ஆறு பிள்ளைகளைப் பெற்றாலும் அதே மெலிவாகத்தான் இருக்கிறார்கள்.

உடல் என்பது கைக்குள் வைத்துப் பாதுகாக்க வேண்டிய பொக்கிசம். அதனை சீரழிய விடக்கூடாது.

'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்' என்பது உடலைப் பொறுத்தவரை பொய்யானதல்ல. ■

சக்தி சக்திதாசன்

நான் ஒரு மனிதன்!

ஆத்திகம்... நாத்திகம்

கடவுள் இருக்கின்றாரா?.... இல்லையா?

இக்கேள்விகள் என் மனதில் சதிராடிக் கொண்டிருந்த காலங்கள்தான் இதுவரையிலான என் வாழ்க்கையில் பெரும்பகுதியாக கழிந்திருக்கின்றன.

சரி இதற்கான விடையை இப்போதாவது கண்டுபிடித்து விட்டேனா? என்றால் அதற்கு விடையும் இல்லை என்பதுவே!

சரி அப்படியானால் அப்போதைக்கும் இப்போதைக்கும் இடையிலான வித்தியாசம்தான் என்ன?

வினாக்கள்... வினாக்கள்...

நான் கடவுள் இல்லை, அது எல்லாம் மூடநம்பிக்கை என்று திடமாக நம்பிய காலங்கள் நான் கடந்துவந்த வாலிப வயதில் உண்டு.

ஆனால், அவற்றிற்குரிய வாதங்கள் சரியா? தவறா? என்பதில்தான் தெளிவு இருக்கவில்லை.

மனதைத் தொட்டு மனசாட்சிக்கு விரோதமில்லாமல் சொல்ல வேண்டுமானால் அது எனது அப்போதைய வாலிப முறுக்கு என்றுதான் சொல்ல வேண்டும்.

இரும்பைக் கூடக் கடித்து ஜீரணிக்க முடியும் எனும் ஆணவம் கொண்டிருந்த எனக்கு கடவுள் என்றொரு அனைவர்க்கும் பொதுவான அதீத சக்தியின் மீது அவநம்பிக்கை கொள்வது ஒன்றும் பெரிய விஷயமாக இருக்கவில்லை.

வாராவாரம் வெள்ளிக்கிழமை தோறும் கோவிலுக்கு போவது ஒன்றையே தமது பிரதான வேலையாகக் கொண்டிருந்த என் பெற்றோரையும் என் மனைவியையும் மைந்தனையும் கோவிலினுள் இறக்கிவிட்டுவிட்டு கோவில் வாசலுக்கு வெளியே காத்திருந்து அவர்களை திரும்ப அழைத்துச் செல்லும் நிலையிலிருந்து இன்று எப்போது சென்னை சென்றாலும் தப்பாமல் அண்ணாமலையாளின் தரிசனம் தேடி ஓடும் இந்நிலைக்கு நான் மாறியதின் பின்னணிதான் என்ன?

எம் கையில் எம் கட்டுப்பாட்டில் இல்லாத பல நிகழ்வுகள் எம்மீது சுற்றுப்புறச் சூழல்களினால் நிகழும் போது ஆணவம் கொண்ட ஒரு மனிதனின் மனதில் முதலில் ஏற்படுவது விரக்தியே!

காரணமில்லாமல் காரியமா? இது ஏன் நடந்தது? இது எனக்கு ஏன் நடந்தது? இந்தக் கேள்விகள் எமது மனதைத் துளைக்கும்போது எம்மையறியாமல் எம்மை நாமே புடம்போட்டுக் கொள்ளும் தேவையேற்படுகிறது.

விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டு எப்படியும் வாழலாம் எனும் நிலைக்கு போகாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்று எண்ணுவதற்கேற்ப எமது சிந்தைகளைச் சீர்படுத்த ஓர் துடுப்பற்ற படகிற்கு துடுப்புத் தேவைப்படுவதைப் போல எமது வாழ்க்கையிலும் ஒரு நம்பிக்கை தேவைப்படுகிறது.

அந்நம்பிக்கையை கண்ணுக்குத் தெரியும் மனிதர் மீது வைத்துப் பழகும் போது அவர்கள் அந்நம்பிக்கையைச் சிதைக்கும் வகையில் நடக்கும் போது மனம் மேலும் உடைந்து போகிறது.

அதேசமயம் முகமறியாமல் ஏற்பட்ட உறவுகள், எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து வாழ்வில் உடன்பிறவாச் சொந்தங்களாக தம்மை என்னோடு இணைத்துக் கொண்டவர்களின் அருமையைப் பெருமையை உணர்ந்து கொள்வதற்காகத்தான் நம்பிக்கையை சிதைப்பவர்களையும் எம் வாழ்வில் எமக்கும் அப்பாற்பட்ட சக்தி கொண்டு வந்து இணைக்கிறது எனும் தொடர்பு புரிகிறது.

யாரோ ஒரு சிலர் எமது மனதை உடைத்துவிட்டார்கள் என்பதற்காக எம்மைச் சுற்றியிருப்பவர்கள் அத்தனைபேரும் அப்படிப்பட்டவர்கள் என்று எண்ணிவிடக்கூடாது என்பதற்கான உதாரணங்கள் பலவற்றை எம் வாழ்க்கையில் நிறுத்தியிருக்கும் உண்மை புலனாகிறது.

இவையெல்லாவற்றையும் தேவையான சமயங்களில் எம் வாழ்வில் நிகழ்த்துவது எது? அல்லது யார்?

இக்கேள்வியின் விடைதான் என்னுடைய இன்றைய மாற்றமோ?

உருவமற்ற ஒரு அதீத சக்தியில் வைத்து அதற்கு ஒரு மானசீக உருவம் கொடுத்து அன்பெனும் வழிபாட்டு மலர்களைத் தூவி பூஜிக்கும்போது அங்கே ஒரு தெளிவு பிறக்கிறது.

தெய்வநம்பிக்கையின் பேரால் மூடநம்பிக்கைகளை வளர்ப்பவர்கள் தமது சுயலாபங்களுக்காக செய்யும் செயல்களே இவை இரண்டுக்குமிடையிலான முரண்பாட்டை வளர்க்கின்றது.

மனித மனம் அனைத்தும் தெய்வீகப் பண்புகளும் மிருகப் பண்புகளும் கலந்த ஒரு கலவைதான்.

இக்கலவையில் எவற்றின் விகிதம் கூடிய அளவில் இருக்கிறதோ அதன் பிரதிபலிப்பே எமது வெளியுலகச் செயல்கள். ஆனால், மிருகப் பண்புகளை அடக்கி அன்புடன் கூடிய தெய்வீகப் பண்புகளை வளர்த்துக் கொள்ள இந்த அதீத சக்தியில் கொண்டுள்ள நம்பிக்கை உதவுகிறது.

கோபம், ஆத்திரம் என்பன உள்ளத்தில் ஓங்கும்போது அமைதியுடன் கூடிய ஒரு சாந்தியைப் பெறுவதற்கு இத்தெய்வீகச் சிந்தனைகள் உதவுகின்றன என்பது உண்மைதான்.

உலகின் எந்த மூலையில் நடக்கும் செயலுக்கும் ஒரு பக்க விளைவு எங்கோ ஓரிடத்தில் நிகழத்தான் செய்கின்றது. என்ன! பல சமயங்களில் இவற்றைத் தொடர்புபடுத்திப் பார்க்கக்கூடிய மனோபாவம் எம்முள் இருப்பதில்லை. அதனால் எமது கவனத்தை விட்டுத் தப்பிச் செல்கின்றது.

எனது பதிவுகள், எனது கட்டுரைகள் அதுவும் முகநூலில் நான் பதிவு செய்வது அநேகமாக என்னைச் சார்ந்தே எழுதப்பட்டிருக்கும்.

ஏனெனில் உள்ளத்து உணர்வுகளின் ஆரம்பம் எம்முள் இருந்தே தொடங்குகின்றது.

எதையும் நாம் யதார்த்தரீதியாக ஆராயும்போது அதை நம்முள் நிகழ்த்தும்போது முதலாவதாக அது உண்மையானதாகவும் இரண்டாவதாக எமது உள்ளத்தின் கறைகளைக் கழுவுவதாகவும் அமைவதே இதற்குக் காரணம்.

"உனது அழுக்குகளை பொது இடத்தில் களையாதே" என்று ஒரு கருத்து உண்டு. ஆனால், உலகியல் சம்பந்தமான வாழ்வியல் சம்பந்தமான பதிவுகளின் போது சிலசமயங்களில் எமது வாழ்க்கையின் அழுக்குகளைக் களைந்து காட்டும்போது அதைப்படிப்பவர்களின் மனதில் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுவது உண்மை.

எனது எழுத்துக்கள் அனைத்தும் என் மானசீகக் குரு கவியரசர் கண்ணதாசன் பாணியில் அமைந்திருக்க வேண்டும் என்று விரும்புபவன் நான். ஏனெனில் அவரின் எழுத்துக்கள் என் மனதில் உருவான பல மாற்றங்களுக்கு காரணமாக இருந்திருக்கின்றன. பல விடையற்ற கேள்விகளுக்கு விடை பகிர்ந்திருக்கின்றன.

இவ்வுலகில் நான் அடைந்தவை எல்லாம் நான் கேட்டுப் பெற்றவை அல்ல. நான் யாரைப் பெற்றோராக அடைய வேண்டும் என்றோ அவர்கள் யாரைத் தன்னுடைய மகவாகப் பெற வேண்டும் என்றுமோ கேட்டுப் பெறவில்லை.

அடைந்த துன்பங்கள், கிடைத்த இன்பங்களை அறிந்துகொள்ள ஏற்ற காரணிகளாக அமைந்தன என்பதுவே உண்மை.

மதம் என்பது ஒரு அணிகலனே அன்றி ஆடையல்ல. அவ்வணிகலனை அணிந்திருக்கிறோம் என்பதற்காக மற்றொரு அணிகலன் அணிந்திருப்பவரைக் குறைவாக மதிப்பிடுவது எவ்வகையில் நியாயமாகும்?

ஆக மொத்தம் ஆத்திகம் என்பதும் ஆன்மிக உணர்வு என்பதும் மனிதாபிமானத்தின் அடிப்படைக் காரணிகளாக அன்பின் வழிவந்தவையாக இருக்க வேண்டுமே அன்றி ஒரு வெறியாக மாறிவிடக்கூடாது.

ஆன்மிக உணர்விற்கு மதவேறுபாடு கிடையாது. அது அனைவர்க்கும் பொதுவானது. அதேபோல தெய்வநம்பிக்கை என்பதும் மதச்சார்பற்றதாக மனிதாபிமானத்தின் வேராக அமைந்திருப்பது அவசியம்.

நான் ஒரு இந்து என்று சொல்லும் அதேநேரம் கிறிஸ்தவம், இஸ்லாம், யூதம், புத்த மதம் எனும் அனைத்து மதங்களிலும் கூறப்பட்டுள்ள அற்புத அன்பு வழியிலான தத்துவங்களை ஆழமாகப் படித்து இன்புறுபவன் என்பதில் பெருமை கொள்கிறேன்.

நான் ஒரு இந்து என்பதற்கு முன்பாக நான் ஒரு மனிதன் என்பதுவே எனக்கு முக்கியமானது.

இதை எனது அன்பு வாசகர்களாகிய புதினம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமையடைகிறேன்.

SUBARA
BUSINESS CENTRE

SUBARA
Smart In Management

- LIFE INSURANCE
- INCOME PROTECTION
- ACCIDENT PROTECTION
- CRITICAL ILLNESS COVER
- HOME INSURANCE
- LANDLORD'S COVER
- BLOCK MANAGEMENT
- BUILDING MAINTENANCE
- SECURITY SYSTEMS
- UTILITY SERVICES

GET OUR EKARD

4 Weald Lane
Harrow
Middlesex
HA3 5ES

www.subara.co.uk
info@subara.co.uk

0844 887 1664
020 3119 1111

லண்டன் ஹரோவில் புதுமையான புகுவிழா

நாள்கு தமிழ் நண்பர்கள் சுதா, மகிபன், றொசான், திபா ஆகியவர்கள் இணைந்து SUBARA என்ற புதிய வர்த்தக மையம் ஒன்றை, லண்டன் ஹரோ பகுதியில் கடந்த மாதம் 14ம் திகதி புதுமையான புகுவிழாவாக நடாத்தினார்கள். மதியம் 12 மணி முதல் 2 மணி வரை அந்தப் புதிய வர்த்தக நிறுவனத்தின் ஆரம்ப விழா வித்தியாசமானதாகவும், சிறப்பானதாகவும், கோலாகலமானதாகவும் நடந்தது, சாதிக்கப் போகிற நம்மவர்களின் ஆரம்ப விழா என்றுகூட நினைக்க வைத்தது.

புலம் பெயர்ந்த நம்மவர்கள், தாம் வாழும் நாடுகளில் தமது ஆக்கபூர்வமான சேவையில் வெற்றிக்கனிகளைப் பறித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலேய நிறுவனங்களில் உயர்பதவிகளை வகிப்பதோடு, ஆங்கிலேயர்களே வியக்கும் வண்ணம் சிகரங்களைத் தொட்டு, தமிழர் பெருமைக்கு சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றனர். அப்படியான நான்கு அனுபவசாலிகளான ஷிஹிங் லெஜி நண்பர்களாக காப்புறுதித் துறைக்குள் தங்களை இணைத்து, காக்கும் கரங்களாக, ஒரே கூரையின் கீழ் நம்மவருக்குச் செயலாற்ற முன்வந்துள்ளனர்.

இந்த நிறுவனம் பத்தோடு பதினொன்றல்ல; போட்டி போட உருவானதல்ல! நம்மவர் தேவையை அறிந்து சேவையாற்ற உதயமாகியுள்ளது இந்த SUBARA BUSINESS CENTRE. அன்றைய விழாவுக்கு அழைக்கப்பட்ட பலனாளிகள் அத்தனை பேரும் வாடிக்கையாளர்கள்.

SUBARA நண்பர்கள் நால்வர். திபாகரன் தெட்சணாமூர்த்தி – மகாலிங்கம் சுதாகரன் – மகிபன் தேவராஜா– றொசான் குருஸ்

அன்றைய பிரதம விருந்தினர் Subara நண்பர்களின் முகாமையாளர் செறியன். சிறப்பு விருந்தினர்கள் உழைப்பால் உயர்ந்த தொழில் அதிபர் சற்குணராஜா, அன்பழகன், மற்றும் நான்கு நண்பர்களிடமும் காப்புறுதி பெற்றவர்கள் சமூகமளித்திருந்தனர்.

திபாகரன் தெட்சணாமூர்த்தி தலைமை வகித்தார். நிகழ்வை அருமையாக நகர்த்திச் சென்றார். மகாலிங்கம் சுதாகரன் அழகு தமிழில் நால்வரின் இணைப்பில் புதிய நிறுவனத்தின் உருவாக்கம் பற்றியும் - ஆற்றப் போகின்ற சேவை பற்றியும் எடுத்து உரைத்தார். றொசான் வர்த்தக மையத்தின் பணிகளைச் சொன்னார். பிரதம விருந்தினர் காப்புறுதியின் அவசியத்தை விளக்கினார். மதிபன் நன்றி கூறினார். பிரதம விருந்தினர் வர்த்தக மையத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார். நான்கு நண்பர்களும் ஆரம்ப விழாவின் அடையாளமாக பலூன்களைப் பறக்க விட்டனர்.

200 விருந்தினர்கள் பங்கு கொண்டு சிறப்பித்த இவ்விழாவினால் லண்டன் தமிழர்களுக்கு கிடைத்துள்ள, எதிர்காலத்தில் ஆற்றப்போகும் சேவை அளப்பரியதாக அமையும் என நம்பலாம். எதிர்காலச் சந்ததிக்கு பயனளிக்கப்போகும் SUBARA நிறுவனம், அதன் நிறுவனர்களில் ஒருவரான சுதாகரனின் எதிர்பார்ப்பான நிறுவனத்தின் ஒருவருட நிறைவில், ஆயிரம் பயனாளிகளுடன் கொண்டாட வேண்டும் என்ற அவாவும் நிறைவேற வாழ்த்துவோம்! ■

பிரதம விருந்தினர் செறியன் தம்பதி நாடா வெட்டி திறந்து வைக்கிறார்கள்.

புகுவிழாவில் மங்கள விளக்கேற்றிய சிறப்பு விருந்தினர்கள் சற்குணராஜா தம்பதி – அன்பழகன் தம்பதி.

பிரதம விருந்தினர் செரியன் உரை நிகழ்த்துகிறார்.

விழாவில் கலந்துகொண்ட பயனாளிகள்.

உணவுகளை உண்டு மகிழும் விருந்தினர்

SUBARA நண்பர்கள் பலூன்களைப் பறக்க விடுகின்றனர்.

நாம் எடுக்கின்ற முடிவுகளைப் பொறுத்துத்தான் நாம் செய்கின்ற காரியங்கள் வெற்றியளிக்கின்றனவா அல்லது மாறாக தோல்வியில் முடிகின்றனவா என்பதை எமது சொந்த அனுபவத்தை வைத்துத்தான் கூற முடியும்.

விமானப் பயணம் என்பது முன் ஒரு காலத்தில் சமுதாயத்தின் மேல் மட்டத்தில் உள்ளவர்கட்கு மட்டும்தான் என்ற நிலை மாறி, சாதாணமானவருக்கும் நடைமுறை சாத்தியமாகிய பின்னரும், அதற்கு ஏற்படக் கூடிய செலவு சிறிய தொகையல்ல என்பதை நாமெல்லோரும் அறிவோம்.

தூரப்பயணம் என்றாலே அதிலும் குறிப்பாக விமானப்பயணம் என்றாலோ பல ஆதங்கள் ஏற்படுவது மனித இயல்பு. பிரயாணத்தை இடைஞ்சல்கள் இன்றி தொடங்குவதற்கு நல்ல பிரயாண முகவர் (Travel Agent) தேவை. நாளாந்த மளிகைக்கடை அனுபவம் நாம் வேண்டிய பொழுது கடைகளை மாற்றிக் கொள்ள முடியும். விமானப்பயணம் அத்தி பூத்தாற் போல் செய்கின்றவர்கள் ஏராளம் ஏமாற்றத்தினை தவிர்ப்பதற்கு இத்துறையில் நீண்டகால அனுபவமும், நிதானமும் வழி நடத்தல்களும், நியாயமான விலைகள், பொருத்தமான ஆலோசனைகள், இனிய தமிழ், ஆங்கிலத்துடன் சிங்களத்திலும் சரளமாக உரையாடி சினேகபூர்வமான சேவையினை வழங்கி வரும் ஒரே நிறுவனம் ஏ- லங்கா ரவல் லிமிரெட். இது ஓர் விமானப் பயணியின் உண்மையான அனுபவம்

– சிவபரிமேலழகர்.

FOR ALL YOUR TRAVEL NEEDS, TICKETS, VISAS ETC.,

Contact : Wimal/Viji A-Lanka Travel Ltd.

171 Tooting High Street, Tooting

London SW17 OSZ

Telephone Number 020 8672 5551,

Mobile 07956 206 709

மலிவு விலையில் "நிர்வாணம்"

பெற்றோரின் நிர்வாணத்தில் நிர்வாணமாகப் பிறந்து நிர்வாணத்தை ரசிக்கும் நாம், டாக்டர் ஸ்ரீதரன் காட்டும் நிர்வாணத்தைக் காணக் கூசுகிறோம். இங்கு ஆடை அணிந்த பலர் நிர்வாணமாக இருக்கிறார்கள். ஆடை இல்லாமல் அலங்காரமாகவும் சிலர் இருக்கிறார்கள்.

நிர்வாணம்தான் உண்மை, அதை மறைக்க முடியாது.

– அமரர் வித்துவான் க.ந.வேலன்

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் ஒவ்வொருவரும் டாக்டர் ஸ்ரீதரனின் எழுத்துக்களைப் படித்து உண்மைகளை உணர வேண்டும் என்ற ஆவலில் 'நிர்வாணம்' என்ற நூலைப் 'புதினம்' வெளியிட்டுள்ளது. இந்நூலை தபால் செலவு உட்பட 5 பவுண்களுக்கான காசோலையை **PUTHINAM** என்ற பெயருக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி: **PUTHINAM, 38, MOFFAT ROAD, LONDON SW17 7EZ**

ஆவரங்கால் சின்னத்துரை மறைவு

பிறந்த தாய் மண்ணில் மடியவேண்டும் என்ற ஆசையோடு வாழ்ந்து வந்த ஆவரங்கால் சின்னத்துரை அவர்கள் யூன் 4ம் திகதி லண்டனிலிருந்து ஆவரங்கால் ஊருக்குச் சென்றிருந்தார். அங்கு சென்று நான்கு நாட்களுக்குள் இறைவனடி எய்தினார் என்ற செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம். ஒரு கொள்கைவாதியாக, இலட்சியவாதியாக வாழ்ந்து தமது 89வது வயதில் இறைவனடி எய்தினார்.

தந்தை செல்வா அகில இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை ஸ்தாபித்த காலத்திலிருந்து ஒரு ஸ்தாபக உறுப்பினராக, தொண்டனாக இன்று வரையும் அரசியலில் தீவிரமாக உழைத்து வந்த பெருமகனார். தமிழ் அரசுக் கட்சியினால் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் துணைத் தலைவராகவும் செயற்பாட்டாளராகவும் பணியாற்றி வந்தவர்.

தமிழ் அரசுக் கட்சித் தலைவர்கள், தந்தை செல்வா, கோப்பாய் கோமகன் வன்னியசிங்கம், அமிர்தலிங்கம், டாக்டர் நாகநாதன் ஆகிய தலைவர்களுடன் நெருக்கமாக அரசியலில் ஈடுபட்டு உழைத்து வந்தவர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பிரித்தானிய கிளையை அமைப்பதற்குத் தீவிரமாக ஈடுபட்டவர். அதன் வளர்ச்சிக்காகப் பெரும் பங்காற்றியவர். பிரித்தானிய கிளையின் போசகருமாவார்.

நீண்டகாலமாக ஒரே அரசியல் கொள்கையோடு உறுதியாகவும் நேர்மையாகவும் உழைத்து வந்த முதிய அரசியல்வாதி ஆவரங்கால் சின்னத்துரை அவர்களின் மறைவு தமிழ் மக்களுக்கு பேரிழப்பாகும், குறிப்பாக தமிழ் அரசுக்குப் பாரிய இழப்பாகும்.

அன்னாரது இறுதிக்கிரிகை 14-06-2015 அன்னாரது ஆவரங்கால் இல்லத்தில் நடைபெற்றது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் பிள்ளைகளுக்கும் உற்றார் உறவினருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரித்தானிய கிளை ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

– த.தே.கூட்டமைப்பு (பிரித்தானிய கிளை)

லண்டனில் சர்வலோகேஸ்வரிக்கு பாராட்டு

"மனிதப் பண்புகளோடு, சமூக சேவை ஆற்றிவருபவர் சர்வலோகேஸ்வரி. முதியவர்களை ஒன்றுசேர்த்து நாட்டியம் போன்ற கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றச் செய்தார். ஆங்கில மொழியைக் கையாள்வதில் அவதியுறும் தமிழ் மக்களுக்கு பொது இடங்களில் உதவினார். இவரது சேவைக்காக கிங்ஸ்ரன் மேயரால் விருது வழங்கப்பட்டது" என்று லண்டன் Sutton 'தோமஸ் வேல் சென்ரரில்' நடந்த சர்வலோகேஸ்வரி ஆனந்தகுமாரராஜாவுக்கு நடந்த பாராட்டு விழாவில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார். 70வது பிறந்ததின விழாவை ஒட்டி இப் பாராட்டு விழா நடைபெற்றது.

சட்டன் தமிழ் நலன்புரிச் சங்கத்தோடு ஆரம்பித்த முதியோருக்கான சர்வாவின் சேவைகள் பல்வேறு பகுதிகளுக்கும் விரிந்து கிடப்பது அவரது சமூக சேவைக்குச் சான்றாகும் என்று டாக்டர் பகீரதன் அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

தனது தாயார், முன்னோர்கள் ஆற்றிய அளப்பரிய சேவைகளின் பின்னணியில் சேவைகளை தொடர்ந்து ஆற்றிவருவது பெருமை அளிப்பதாகப் பெறா மகன் கோமான் விஷ்ணு தங்கராஜா கூறினார்.

கவுன்சிலர் தயாளன், ஆசிரியை ராஜநாயகி தியாக ராஜா, கமலா ஜெயபாலன், நவஜோதி யோகரட்ணம் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். 'சமூகஜோதி', 'சேவைத் திலகம்' ஆகிய பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. குடும்ப உறுப்பினர்கள், ஹரோ மேயர் சுரேஷ் கிருஷ்ணா ஆகியோர் வாழ்த்தினர். ப.வை.ஜெயபாலன் நிகழ்ச்சிகளை தொகுத்தளித்தார்.

லண்டனில் ஆரம்பமான 'வீனஸ் தமிழ்' இணையம்!

லண்டன் ஈஸ்ட்ஹாமில் அமைந்திருக்கும் முருகன் ஆலயத்தில் 'வீனஸ் தமிழ்' இணையத்தளத்தின் ஆரம்ப நிகழ்வு மிகவும் சிறப்பாக, விசேட பூசையோடு இடம் பெற்றது. இவ்வைபவத்தில் 'லிபரா' இயக்குனர்களில் ஒருவரான யோ, ரதீசனின் தந்தையார் த.யோகநாதன் இப்புதிய இணையத்தளத்தை முதல் பார்வையாளராக கணனியை அழுத்தி ஆரம்பித்து வைத்து, முதல் விளம்பரத்திற்கான சிறப்புப் பணத்தைக் கொடுத்து, ஆசியும் வழங்கினார்.

'வீனஸ் தமிழ்' இணையத்தளத்தின் இயக்குனர் பிரியாலயம் தூரைஸ், அவரது சகோதரர் மு.மகேஸ்வரன், ஆலயத்தின் பிரதம குரு கைலை நாகநாதக் குருக்கள் ஆகியோர் 'லிபரா' த.யோகநாதனுடன் படத்தில் உள்ளனர். பிரதம ஆசிரியர் வண்ணைத் தெய்வம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார்.

உலகின் முதலாவது தமிழ் பிரதமர் வீராசாமி நாகமுத்து

தென்அமெரிக்காவிலுள்ள கயானா குடியரசின் புதிய பிரதமராகக் கடந்த மாதம் 26ம் திகதி பதவியேற்ற திரு.மோசஸ் வீராசாமி நாகமுத்து (67), உலகில் பிரதமர் பதவியை வகிக்கும் முதலாவது தமிழர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். பல ஆண்டுகளுக்கு முன்னர் தொழிலாளர் குடும்பமாக கயானாவில் குடியேறியவர்கள் குடும்பத்தில் வந்த இவர், இந்தியாவின் தமிழகத்திலிருந்து வந்த வம்சாவளித் தமிழராவார்.

சுமார் 177 ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயரால் கரும்புத் தோட்டத்தில் கூலிகளாக வேலைசெய்ய கயானாவுக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள் இவரது மூதாதையர். கயானாவின் மொத்த சனத்தொகையில் 44 சதவீத ஆட்கள் இந்திய வம்சாவளியினர். இவர்களில் தமிழர் மூன்று சதவீதம் மட்டுமே. முதலில் ஆசிரியராகவும், பின்னர் சட்டத்தரணியாகவும் விளங்கிய இவர், நல்லதொரு எழுத்தாளருமாவார்.

1964ல் கயானாவின் மக்கள் முன்னேற்றக் கட்சியில் இணைந்து 1992 ஆம் ஆண்டிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த திரு.நாகமுத்து, நான்கு ஜனாதிபதிகளின் கீழ் பல்வேறு அமைச்சுப் பதவிகளைத் தொடர்ந்து வகித்துள்ளார். 2011ல் மாற்றத்துக்கான கயானாவின் கூட்டணிக் கட்சியில் சேர்ந்த இவர் அதில் போட்டியிட்டு வெற்றிபெற்று இப்போது பிரதமராகியுள்ளார்.

இதற்கு முன்னர் எந்தவொரு நாட்டின் பிரதமராகவும் தமிழர் ஒருவர் இருந்ததில்லை. சிங்கப்பூர் குடியரசின் தலைவராக எஸ்.ஆர்.நாதன் இருந்துள்ளார். சிலர் துணைப் பிரதமராக இருந்துள்ளனர். அமைச்சர்களாக இலங்கை, இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர், பிஜி, தென்னாப்பிரிக்கா, மொரீஷியஸ் ஆகிய நாடுகளில் தமிழர்கள் பலர் இருந்துள்ளனர்.

(நன்றி: கனடா தமிழர் தகவல்)

லண்டனில் நடந்த விநோதனின் 'தவிச்சமுயல்' நூல் வெளியீட்டு விழா

"முப்பது ஆண்டு கால ஈழயுத்தத்தில் சிக்குண்டு, பரிதவித்துப்போன தென்மராட்சிக் கிராமங்களின் சிதைவினை மிக நேர்த்தியாக விநோதரன் தன் சிறுகதைகளில் சித்தரித்திருக்கின்றார். யுத்த நெருக்கடிக்குள் சிக்கி நொருங்குண்டுபோன விவசாய மக்களின் ஆறாத ரணங்களை விநோதரன் தன் அனுபவ ஒளியில், எழுத்து வன்மையின் ஆற்றலோடு பதிவு செய்திருக்கிறார். அவரது 'ஒரு வழி' என்ற சிறுகதை 15 ஆண்டுகளின் பின் தன் சொந்தக் கிராமத்தைப் பார்க்கத் திரும்பிய ஒருவரின் மனப்பதிவுகளை அழகாக வெளிப்படுத்தியிருக்கிறது" என்று பிரபல விமர்சகர் மு.நித்தியானந்தன், லூப்ஷியாம் லண்டன் சிவன் கோவில் மண்டபத்தில் சமீபத்தில் நடந்த ந.விநோதரனின் 'தவிச்சமுயல்' என்ற சிறுகதை நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

என்.கெங்காதரன் தலைமை வகித்தார். புலம் பெயர் மண்ணில் வாசிப்பு மங்கிக் கொண்டு செல்வதாக தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்.

விநோதரன் சிறுகதைகள், தென்மராட்சி மக்களின் நிலை குறித்து கண்ணீர் விட வைக்கிறது என்றார் திருவேணி சதீஸ்குமார்.

கனடா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இளைய தலைமுறை எழுத்தாளர்கள் பங்களிக்கும் அளவிற்கு லண்டனில் குறைவாகவே உள்ளது என்றார் 'மூன்றாம் மனிதன்' எம்.பௌசர்.

ராஜினி நடராஜா பேசுகையில், விநோதரனின் எழுத்துக்களை பாராட்டினார்.

ஏற்புரை நிகழ்த்திய நூலாசிரியர் ந.விநோதரன், தனது சொந்த அனுபவங்களில் தான் சந்தித்த துயரங்களின் அற்ப விலைக்குத் தன் உயிர் பேரம் பேசப்பட்ட அபத்தமான சூழலின் பின்னணியில் எழுதப்பட்ட சிறுகதைகளே தனது கதைகள் என்று தெரிவித்தார்.

- நவஜோதி யோகரட்ணம்

ஆச்சரியம் தரும் அற்புதம் மானிட உடல்!

- எமது உடலில் உள்ள நரம்புகள் மூளைக்குச் செய்திகளை மணிக்கு 260 மைல் வேகத்தில் எடுத்துச் செல்லும் ஆற்றல் வாய்ந்தவை!
- ஒவ்வொரு நிமிடமும் முன்னூறு மில்லியன் செல்கள் எமது உடம்பில் இறந்து போகின்றன!
- அதே சமயம் உடலில் முன்னூறு பில்லியன் செல்கள் புதிதாக உருவாகின்றன!
- எமது வெளித் தோல் 27 தினங்களுக்கு ஒரு தடவை புதிதாக மாற்றம் பெறுகின்றது!
- சராசரி மனிதனில் இருந்து தினமும் 60 இல் இருந்து 100 வரையான எண்ணிக்கையில் மயிர்கள் உதிர்ந்து கொண்டே இருக்கின்றன!
- கபாலத்தில் இருந்து ஐம்பது வீதமான மயிர் உதிர்ந்த பின்னரே வழுக்கை தோன்றியதாக அறிகின்றோம் !
- உடலில் உள்ள இரத்த நாளங்கள் ஏறக்குறைய அறுபது ஆயிரம் மைல் நீளம் கொண்டதாகும்!
- எமது நுரையீரலில் அமைந்துள்ள அறைகளின் உள்பக்கமான வெளி 750 சதுர அடி பரப்பு அளவு உடையது!
- மனித உடலில் உள்ள சிறு குடல் இருபது முதல் இருபத்துமூன்று அடி நீளம் கொண்டது!
- மூக்கு ஏறக்குறைய ஐம்பதாயிரம் வேறுபட்ட வாசனைகளை நினைவில் இருத்தும் திறன் கொண்டது!
- உடலில் உள்ள எலும்புகளின் மொத்தத்தில் கால் பங்கு எலும்புகள் பாதத்தில் அமைந்து உள்ளன!
- கைகளில் அமைந்துள்ள இரேகைகள் ஒவ்வொருவருக்கும் தனித்துவமாக உள்ளது போலவே நாவில் உள்ள இரேகைகளும் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமாகவே காணப்படும்!

- சந்தமன்

எஸ்.சிவலிங்கராஜா

தருக்கமும் தமிழ் புலமையும் இணைந்த இனிக்காதா இலக்கணம் ?

செல்லத்தம்பி சிறீக்கந்தராசா எழுதிய **இனிக்காதா இலக்கணம்** என்ற நூலைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. குமரன் இல்லம் வெளியிட்ட இந்நூலைப் பார்த்ததும் யார் இந்தச் சிறீக்கந்தராசா என அறியும் ஆர்வம் உண்டானது. சிறீக்கந்தராசா என்ற பெயர் சாதாரணமாகச் ஸ்ரீஸ்கந்தராஜா என வழங்குவதே வழக்கம். அந்த வழக்கத்திற்கு மாறாக இவரின் இயற்பெயரைப் பார்த்தபோதே இவருள் 'ஏதோ ஒரு தத்துவம்' இருக்க வேண்டும் என்று உணர்ந்துகொண்டேன்.

சிறீக்கந்தராசா யாழ்ப்பாணத்தில் உள்ள பழமைவாய்ந்த கிராமங்களில் ஒன்றான புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். புலவர் + ஒலி = புலோலி ஆயிற்று என்று உரைப்பாரும் உளர். வடமராட்சியின் தமிழ், ஆங்கிலக் கல்விப் பாரம்பரியத்தில் ஊறி மேற்கிளம்பியவர்களிலே திரு.சிறீக்கந்தராசாவும் ஒருவர் என அறிந்துகொண்டேன். ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன் இவர் எழுதிய "சட்டமும் தமிழும்" என்ற நூலைப் படித்திருக்கிறேன். அதிற் பெரியபுராணத்துத் தடுத்தாட்கொண்ட புராணத்திலே வரும் "ஆட்சியின் ஆவணத்தில் அயலார் தங்கள் காட்சியில்" எனவரும் பாடலை மேற்கோள் காட்டி விளக்கி இருந்தார். "யாரடா இந்த அப்புக்காத்து" என்று என்னளவில் எண்ணிக்கொண்டேன் அவ்வளவுதான்.

ஈழத்துத் தமிழ்க்கல்வி வரலாற்றிலே மரபுவழித் தமிழ்க்கல்வியை முறையாக வளர்த்த நமது காலத்தவரான கந்தமுருகேசனிடம் இவர், வரன்முறையாகத் தமிழ் பயின்றவர். 'ஆன்றவிழ்ந்தடங்கிய சான்றோனான' கந்தமுருகேசன் புதுமையும் புரட்சியும் புலமையும் சங்கமிக்கும் ஆளுமையாக விளங்கியவர். கந்தமுருகேசன் ஆழமாக இட்ட அத்திவாரத்திலே சிவன் கருணாலய பாண்டியனார் சுவர் எழுப்பினார். ஐயன்பெருமாள் கோனார் கூரை வேய்ந்தார். சிறீக்கந்தராசா பலமான அத்திவாரத்தில் எழுந்த அழகான மாளிகையானார். வித்துவான் வேலன் இந்த மாளிகையிலே உலாவிவந்தார்.

பருத்தித்துறை பற்றனைத் தமிழ்க் கல்லூரியிலே தொடங்கிய ஆங்கிலமொழி, இலக்கியக்கல்வி இந்தியா, இங்கிலாந்து எனப் பலதேசங்களிலும் பயணித்துக் கொண்டிருக்கிறது. சுயதேடல் இவரின் சுகமான அனுபவமாகும்.

ஈழத்து இலக்கணவரலாறு வைரம் பாய்ந்தது. நீண்ட நெடுங்காலமாக மரபுவழியாகத் தொடர்ந்து வந்த இலக்கணக் கல்வியின் சுவடுகளைக் கனகசபாபதியோகி எனும் கூழங்கைத் தம்பிரானுடாகக் காணமுடிகின்றது. தமிழ் இலக்கணப் பாரம்பரியத்திற்கு இலங்கைத் தமிழ் அறிஞர்கள் அளப்பரிய பணியை ஆற்றி இருக்கின்றனர். இந்த வகையிலே ஆறுமுகநாவலர், நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை, ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, உடுப்பிட்டி சிவசம்புப்புலவர், வல்வை வயித்தியலிங்கம்பிள்ளை முதலான பலரைக் குறிப்பிடலாம்.

தொல்காப்பியக் கடலுள் துளைந்து இறங்கிச் சுழியோடிப் பல முத்துக்களை மேலேகொணர்ந்தவர் வித்துவசிரோமணி சி.கணேசையராவார். கணேசையரின் தொல்காப்பிய உரைவிளக்கக் குறிப்பினைப் பாரட்டாத தமிழகத்து இலக்கணப்



கந்த முருகேசனார் கட்டிய அத்திவாரத்தில் எழுந்த செ.சிறீக்கந்தராசா என்ற மாளிகை

பேரறிஞர்களே இல்லை எனலாம். ஆனால், நம்மவர் சிலர் கணேசையரை மறந்து அல்லது விட்டு, ஈழத்து இலக்கண வரலாறு எழுதுவதையும் காணமுடிகிறது.

மொழியியலிலும் தமிழ் இலக்கணமரபிலும் புலமைவாய்ந்த அறிஞர்களும் ஈழநாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வைரம் பாய்ந்த தமிழ் இலக்கணப் பாரம்பரியம் கொண்ட ஈழத்துத் தமிழ் இலக்கணமரபுப் பின்னணியிலேதான் நாம் "இனிக்காதா இலக்கணம்" எனக் கேட்கும் சிறீக்கந்தராசாவை நோக்க வேண்டும்.

இதுவரை காலமும் தமிழில் 'இலக்கண வினாவிடை' என்ற பெயரிலேதான் நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால், சிறீக்கந்தராசா 'இனிக்காதா இலக்கணம்?' என்ற வினாவை எழுப்பி, இதோ பயின்று பாருங்கள், இலக்கணம் இனிக்கும் என்று கூறி இந்த நூலைத் தந்திருக்கின்றார்.

இந்த நூல் இரண்டு பாகங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. முதற்பாகம் அடிப்படை இலக்கணம் என்று அமைகின்றது. நாற்பது தலைப்புக்களில் ஏறத்தாழ நூறு பக்கங்களில் அமையும் இந்தப் பகுதி பெரும்பாலும் புலம்பெயர் மாணவர்களை மனங்கொண்டே எழுதப்பட்டுள்ளது. புலம்பெயர்ந்த மாணவர்கள் மட்டுமன்றித் தமிழ்மொழி இலக்கணத்தைக் கற்ற, கற்க விரும்பும் ஆர்வலர்களுக்கும் வழிகாட்டியாக அமையும் என நம்புகிறோம்.

தமிழ்த் தலைப்புக்களோடு ஆங்கிலத்திலும் தலைப்புக்களைத் தருதல் புலம்பெயர் மாணவர்களுக்கு மாத்திரமின்றித் தமிழைப் பயிலவிரும்பும் பிறநாட்டு மாணவர்களுக்கும் இந்நூல் பெரிதும் உதவும் எனலாம்.

தருக்கமும் இலக்கணமும் நமது தமிழ் மரபிலே ஒன்றாகவே பயணித்து வந்துள்ளன. இலக்கணத்தை நுட்பமாக அறியத் தருக்கநூலறிவும் அவசியம் எனக் கருதப்பட்டு வந்துள்ளது. இந்த மரபின் தொடர்ச்சியாகச் சட்டநூலறிஞரின் பார்வையில், **இனிக்காதா இலக்கணம்** என்ற நூல் அமைந்துள்ளமையும் அவதானிக்க முடிகின்றது.

சான்றுகளைக் காட்டி, நூற்பா நுணுக்கங்களை முன்வைத்து (சட்டநுணுக்கம் போல) முற்றிப்புக்களை மேற்கோள் காட்டி (இலக்கிய மேற்கோள்கள்) மொழிப்பயன்பாட்டை (பன்பாட்டை) வலியுறுத்தி வாதிடுவது சட்டத்துறை வல்லுநர்களின் பண்பாகும். சிறீக்கந்தராசா தமது சட்டநூற் புலமையையும் சட்டத்துறை அனுபவத்தினையும் தமிழ்ப்புலமையையும் மரபுவழித் தமிழ் இலக்கணத்தின் வலுவையும் வனப்பையும் நிலைநிறுத்தப் பயன்படுத்துகின்றார். இதற்குச் சான்றுகள் பல காட்டலாம். எனினும் விரிவஞ்சி விடுத்தோம். நூலைப் படிப்போர் இதனை உணர்வர்.

இந்த நூலின் இரண்டாவது பகுதி **ஆராய்ச்சி இலக்கணம்** என அமைகின்றது. நாற்பது தலைப்புக்களில் நூற்றுத் தொண்ணூற்றொரு பக்கத்தில் அமையும் இப்பகுதி மிக விரிவாக அமைந்துள்ளது. தமிழ்மொழிப் பயன்பாட்டில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் பலவற்றைச் சுட்டிக்காட்டி இலக்கண மரபின் அடிப்படையிலே அச்சிக்கல்களை விடுவிக்கின்றார். இன்றைய இளந்தலைமுறையினர் தமிழ்மொழியில் விடும் பல்வேறு பிழைகளையும் சுட்டிக்காட்டி, அவற்றை நிவர்த்திக்கச் சரியானவற்றையும் சுட்டிக்காட்டுகின்றார். பல்கலைக்கழகப் புதுமுக மாணவர்கள் மாத்திரமின்றிப் பல்கலைக்கழக மாணவர்களும் இந்த நூலைப் படிக்க வேண்டும்.

இன்று நடைமுறையிலே காணப்படுகின்ற எழுத்துப்பிழை, சொற்பிழை, வாக்கியப்பிழை, புணர்ச்சிப்பிழை, ஒருமை பன்மைப்பிழை முதலான பலவற்றைப் பட்டியலிட்டுத் (படம் போட்டு) தந்திருக்கின்றார். பலர் தாம் சரியாகவே எழுதுகிறோம் என்று எண்ணிக்கொண்டு எழுதுபவைகளிலும் இலக்கணவழு உண்டென்பதைப் பல்வேறு இடங்களிலும் சுட்டிக்காட்டியுள்ளார். உதாரணங்கள் பலவற்றைக் காட்டலாமேனும் வகைமாதிரிக்குச் சில:

நிகழ்ச்சிகள் முடிந்தது - நிகழ்ச்சிகள் முடிந்தன.

செய்திகள் நிறைவுற்றது - செய்திகள் நிறைவுற்றன.

இது பொதுவழி அல்ல - இது பொதுவழி அன்று (ப.191)

நாள்கள் என்பதா? நாட்கள் என்பதா?

திருநிறைசெல்வன் என்பதா? திருநிறைச்செல்வன் என்பதா? (பார்க்க - பக். 129, 30, 31)

இவ்வாறு உதாரணங்கள் பலவற்றைக் காட்டலாம்.

இலக்கணம் சுமையானது எனக் கருதும் மாணவர்கள் இந்த நூலைப் படித்ததும் இலக்கணம் சுவையானது எனக் கருதுவர். மரபுவழித் தமிழ் இலக்கிய இலக்கணப் புலமையும், ஆங்கிலமொழி இலக்கியத்திறனும் சட்டநூலறிவும் கொண்ட சிறீக்கந்தராசா அரிதின் முயன்று இந்த நூலைத் தந்திருக்கின்றார். அவரின் ஆய்வுநோக்கும் ஆய்வுத்திறனும் இந்த நூலில் தெளிவாகத் தெரிகின்றன.

பண்டிதர் உமாமகேஸ்வரம்பிள்ளையின் சூற்றைத் தந்து அதற்கு விடையும் தருவது இவரின் ஆய்வு நேர்மையைப் புலப்படுத்தப் போதுமானது. இனிக்காதா இலக்கணம் என்ற நூலை மாணவர்களும் ஆர்வலர்களும் படித்துப் பயன்பெற வேண்டும். ●

வாழும்போது வாழ்த்துவோம்!

ஏழு வயது - அதற்கடுத்து மீண்டும் ஒரு பெண் பிள்ளை என்று இருந்த இளம் குடும்பத்தில், 'சூறாவளி' வீசியது! கணவனை இழந்தபோது, அந்த இளம் வயதில் ஏற்பட்ட சோதனைகளையும், வேதனைகளையும் எதிர்நீச்சல் போட்டு, போராடி, எவரிடமும் எதையுமே எதிர்பாராமல், இன்றுவரை - பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள், உற்றம் சுற்றம், தெரிந்தவர் என்று பலருக்கும் உதவிக்கொண்டு லண்டனில் வாழும் யோகவதி என்ற யோகம்மாவைத்தான் நினைத்துப் பார்க்கிறேன்.

தான் வாழ்கின்ற காலத்தில், தன்னையும், தன்னைச் சுற்றியுள்ள உறவுகளையும், ஓர் அங்குலமாவது உயர்த்திக்கொண்டிருக்கிற நல்ல உள்ளங்களில் ஒன்றுதான் இந்த யோகம்மா!

உடுப்பிட்டி சேர்ச் ஒழுங்கையில் செல்லையா - இளையாட்சி என்ற அன்பான பெற்றோர்க்கு, ஒரே செல்லப்பிள்ளையாகப் பிறந்தார். தகப்பன் செல்லையா யாழ்ப்பாணமே நன்கறிந்த கட்டட ஒப்பந்தக்காரர். தாயாருக்கு கடுமையான வருத்தத்தால் படுத்த படுக்கையானபோது, தன் ஒரே மகளுக்கு மணமுடித்து வைக்க வேண்டும் என்று விரும்பினார். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த பதினெட்டு வயதான யோகவதி, சுப்பிரமணியம் என்பவருக்கு கழுத்தை நீட்டினார். இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தனர். அந்தச் சமயத்தில் அக்குழந்தைகளின் தந்தையார் இறந்தார்.

வீட்டிலே பிள்ளைகளையும், பெற்றோரையும் உழைத்துக் கவனிக்க வேண்டிய பொறுப்பு. கண் பார்த்தால் கை செய்யும் என்பார்கள். யோகவதிக்கு இயற்கையாக அமைந்த ஆற்றலைப் பயன்படுத்தினார். தையல் கலையில் தனக்குள்ள திறமையை வளர்த்துக்கொண்டு, உடுப்பிட்டி மகளிர் பாடசாலையிலுள்ள பிள்ளைகளுக்கும், மற்றும் பாடசாலை பெண் பிள்ளைகளுக்கும் 'யூனிபோம்' தைப்பது அவர்தான். பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, பிளவுஸ் தைக்க எங்கிருந்தோ எல்லாம் தேடி வருவோர்களின் அன்பை யோகம்மா தனதாக்கிக் கொண்டார்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் மூன்று அதிபர்களின் அன்பைப் பெற்றவர். இவர்கள் மிஸ் மதியாபரணம் - மிஸ் மான் - திருமதி இராஜநாயகம். அப்போதைய உடுப்பிட்டி அ.மி. அதிபர் ஜோன் மாஸ்டர் அன்பையும் பெற்றார்.

ஆட்களை வேலைக்கு வைத்து, உடுப்பிட்டியில் பெரிய தையல் கடை. ஆடைகளை வடிவமைப்பதில் யோகவதி வல்லவர்; சளைக்க மாட்டார்! அவரிடம் தையல் பயிற்சி பெற்றவர்கள் பலர். வைரமாலிகை இளையாச்சி, விஷ்ணு போன்ற வியாபார அதிபர்களின் பிள்ளைகளுக்கு தையல் பயிற்சி அளிப்பதற்கு கார் அனுப்பி இவரை அழைப்பார்கள். உடுப்பிட்டி யூனியனிலும் தையல் பகுதி பொறுப்பாளராக இருந்தார். அடிக்கடி இந்தியா - சிங்கப்பூர் சென்று துணிமணிகள் வாங்கி வருவார்.

மூத்த மகள் சரோஜினிக்கு திருமணம் செய்து வைத்தார். 1985 ஆம் ஆண்டு பாரிஸில் இருந்த தன் மகளுக்கு 'தமிழினி' பிறந்தபோது பேரப்பிள்ளையைப் பார்க்க பாரிஸ் போய் ஆறு மாதத்தில் திரும்பி ஊருக்குச் சென்று விட்டார். 2வது மகள் டில்லிராணியும் பாரிஸில்தான். யோகம்மா தனது பெற்றோரைக் கவனிக்க ஊர் சென்றதற்கு முக்கிய காரணம்.

2003ம் ஆண்டு இரண்டு மகள்கள் குடும்பமும் லண்டனில் இருந்தபோது யோகம்மாவை அங்கு வரும்படி அழைத்தார்கள். சில காலம் லண்டனில் பிள்ளைகளுடன் இருந்தார். பின் தன்னந்தனியனாக ரூட்டிங் நகரில் தனி 'பிளாட்டில்' வாழ்கிறார் - சுதந்திரப் பெண்ணாக! அது அவருக்குப் பிடிக்கும்.

வருடத்தில் மூன்று தடவையாவது நினைத்தவுடன் ஊருக்குப் போவார். உடுப்பிட்டியில் தன் வீட்டில் சில நாட்கள், உறவுகளோடு சில நாட்கள், சிங்கப்பூர் - துபாய் - அபுதாபி என்று பறப்பார். கனடாவில் பேத்தியை, பூட்டிமாரை, சொந்தங்களை நினைத்துவிட்டால், பறந்து போய் விடுவார்! இத்தாலி - பரிஸ் என்று பறப்பார்; சொந்தங்களுக்கு சுகயீனம் என்றால், இளம்பி விடுவார். மூன்று வருடங்களுக்கு முன் கொழும்பில் போய் இறங்கிய சில மணி நேரத்துக்குள் யோகம்மாவின் மருமகளின் மகன், பேரன் கூரையிலிருந்து விழுந்து அகால மரணமாகி விட்டார் என்ற செய்தி கிடைத்திருக்கிறது. அடுத்த நாளே அங்கிருந்து கனடாவுக்கு புது டிக்கட் எடுத்துக்கொண்டு கனடாவுக்கு பறந்து விட்டார்.

என்றும் அவர் சலித்துக்கொண்டதில்லை. விதம் விதமாக அவர் செய்கின்ற யாழ்ப்பாணத்துச் சாப்பாடுகளைச் சாப்பிட்டவர்களும், அன்போடு அவர் பழகிய வர்களும் இலகுவாக அவரை மறந்துவிட முடியாது.

இம்மாதம் என்பது வயதாகிறது. இன்றுவரை நினைத்ததை செய்து முடித்துக் கொண்டிருக்கும் யோகவதி என்ற யோகம்மா நலத்துக்குப் பிரார்த்திப்போம். வாழும் போதே வாழ்த்துவோம்.

- ரா.

கண்ணால் காண்பதும் பொய்! காதால் கேட்பதும் பொய்!

ஒசாமா ஒரு காமவெறியர், அவரிடம் குவிடல் குவியலாக ஆபாசப்படங்கள் இருந்ததாக உலகிற்கு அமெரிக்கர் அறிவித்ததையே இந்த ஊடகங்கள் உலகிற்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

அதே போன்று, இவர்களும் அமெரிக்காவால் உருவாக்கப்பட்டு, மூளைச் சலவை செய்யப்பட்டு புனிதப் போர் என்ற பேரில் ஆயுதம் ஏந்தி போரட விடப்பட்டவர்கள், பிற்காலத்தில் அவர்களையே எதிர்க்கும் பட்சத்தில்... இப்படி செக்கடன் தொடர்புபடுத்தி இழிவுபடுத்த செய்திகள் வெளிவிடுவதை ஒரு வழக்கமாகக் கையாண்டு வருவது புதிதல்ல.

எங்கடா இஸ்லாமியர்கள் பற்றி இழிவாகப் பேச ஏதாவது செய்தி கிடைக்காதா என்று நாக்கைத் தொங்கப்போட்டு அலையும் சில ஐந்துகளுக்கு நன்கு தினதான்! கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்!

- ரஹீம் EASTHAM

மதபோதகருக்கு தெரியும்!

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த எழிலனைத் தனக்குத் தெரியாது என்றும், அவரைச் சரணடைந்தான் கூறவில்லை என்றும் திமுக எம்பி. கனிமொழி கூறியிருப்பதாகச் செய்தி படித்தேன். அவருக்கு ராஜபக்ஷவை மட்டும்தான் தெரியும். மதபோதகர் ஜெசுதாஸ்பார் அனைத்தையும் அறிவார். அவர் திருவாய் மலர்ந்தால், இதுபற்றிய உண்மை வெளிவரலாம். திக்கற்ற நிலையில் யார் யாரோ அளித்த உறுதிகளை நம்பினார்கள். இவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட பாத்திரங்களை கச்சிதமாக நடித்து முடித்தார்கள். மலர வேண்டிய ஈழம் மண்மூடிப்போனது!

- மு. அரங்கநாதன் HAYES

ஜெயலலிதாவை வரவேற்போம்!

ராஜாஜி, காமராஜர் போன்றோர் தமிழகத்தின் முதல்வர்களாக இருந்து கறை படாத ஆட்சியை நடாத்தினர். ஆனால், திராவிடக் கட்சிகள் கடந்த 50 ஆண்டுகளாக தமிழகத்தில் கமிஷன் ஆட்சியைத்தான் நடாத்திக் கொண்டிருக்கின்றன. என்றாலும் ஜெயலலிதாவை ஈழத்தமிழர்கள் வரவேற்கிறார்கள். அவர் நடக்காகச் சட்ட மன்றத்தில் தீர்மானம் இயற்றியவர்.

- ந. ஆனந்தகுமார் WEMBLEY

ஆவேச வரிகள் தரும் ஆறுதல்

வித்யா என்ற எங்கள் பிள்ளைக்கு நேர்ந்த கொடூரத்துக்காக முதல் பக்கத்தில் 'புதினம்' எழுதிய ஆவேச வரிகள் நெஞ்சுக்கு ஆறுதலைத் தந்தது. அதே நேரத்தில் 'ஸ்தி' எழுதியுள்ள 'வித்யா... ஒரு தொடர்கதை' தெளிவை ஏற்படுத்தியது; பத்திரிகை இப்போது அழகாகவும், அமைப்பாகவும், சிறப்பாகவும் வெளிவருகிறது. வாழ்த்துக்கள்.

- கே.செல்வராஜன் CROYDON

மீண்டும் தமிழகத்திலிருந்து...

மீண்டும் தமிழகத்திருந்து கே.ஜிமகாதேவா எழுதுவது மகிழ்ச்சியை தந்தது. அவரது எழுத்துக்களில் அனுபவம் பளிச்சிடுகிறது.

- எஸ்.சுரேந்திரன் MITCHAM

வேலையிலிருந்து களைத்துப் போய் வந்தேன். வரும்போது கடையில் 'புதினம்' ஜூன் இதழ் எடுத்துக் கொண்டு வந்து படுக்கும்போது பக்கங்களை புரட்டிப் புரட்டிப் படித்தேன். சினிமாப் பக்கத்தை பார்த்தபோது, களைப்புப் போய்விட்டது! நிம்மதியான நித்திரை... கலர் கலராகக் கனவுகள்.

- கெ.ரங்கநாதன் LEWISHAM

ப.வை.ஜெயபாலின்
எழுதும் சங்கதி
அடுத்த இதழிலிருந்து
தொடர்ந்து வெளிவரும்.

LycaFly

CALL 24X7
0207 132 32 32
www.LycaFly.com

NO.1 AGENT

for COLOMBO

SriLankan Airlines

OMAN AIR	QATAR AIRWAYS	Emirates	ETIHAD	JET AIRWAYS
from £477 Incl. taxes	from £509 Incl. taxes	from £473 Incl. taxes	from £495 Incl. taxes	from £425 Incl. taxes

Specials on worldwide flights

BANGKOK	from £378	BEIJING	from £315	SINGAPORE	from £420	KUALA LUMPUR	from £429
DELHI	from £410	DUBAI	from £260	MELBOURNE	from £687	TORONTO	from £362
KOCHI	from £392	CHENNAI	from £398	HONG KONG	from £438	NEW YORK	from £416

Any Airline... Any Destination... Lowest fare Guaranteed

PLUS **FREE** **LYCAMOBILE TOP-UP WHEN YOU BOOK WITH US**
(hundreds & thousands of free minutes worldwide)
*T&Cs Apply - Top-up offer excludes on selected airlines

Amazing Holiday deals!

Many more amazing holiday deals. Hurry! Book Now | Email: holidays@lycafly.com

CANARY WHARF
Wallbrook Building, 195 Marsh Wall
London E14 9SG · 020 7132 0100

EAST HAM
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

WEMBLEY
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055

COLOMBO
No. 08, Kinross Avenue, Colombo 04.
Sri Lanka · 0117 623 232

IATA

Lycamobile
Call the world for less
Sri Lanka
5p /min
Landline
8p /min
Mobile
To activate : Text SAVE to 2525
Order your free SIM at
www.lycamobile.co.uk
or call 020 7132 0322
Top-up your SIM online or where you see the following signs:
TESCO
ASDA
Martin McColl
Sainsbury's
WHSmith
Lyca mobile